விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Valampurii

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 30 புதன்கிழமை (16.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# குற்றச்சாட்டுகளுக்கு நடவடிக்கை என்ன?

## மழுப்பலாக பதிலளித்தார் மக்ஸ்வெல்



(யாழ்ப்பாணம்)

விசாரணையின்போது மக்களால் பெயர்கள் குறிப்பிடப்பட்டு நேரடியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட இராணுவ ஜெனரல்கள் மற்றும் கொமாண்டர்களுக்கு எதிராக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு மழுப்பலாக பதிலளித்துள்ள ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, உள்ளூர் விசாரணைப் பொறிமுறையிலேயே குற்றவாளிகள் கையாளப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## அபிவிருத்திக்கு அமெரிக்கா உதவும்

(கொழும்பு)

கடந்த 60 வருடகாலமாக இலங்கையுடன் அமெரிக்கா பல்வேறு பணிகளில் இணைந்து கொண்டதையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன், தொடர்ந்தும் இலங்கையின் நிலைபேறான பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமெரிக்கா உதவவுள்ளது.

இதைத் தெரிவிப்பதில் தாம் பெரு

23ஆம் பக்கம் பார்க்க....

## சட்டமூலத்தை வாபஸ் பெறுக

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலாக அதைவிட பயங்கரமான சட்டத்தை கொண்டுவந்து, பேச்சு சுதந்திரத்தையும், அடிப்படை உரிமையையும் பறிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற

23ஆம் பக்கம் பார்க்க....

## ரயில் மோதியதில் முதியவர் பலி

(மல்லாவி)

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் புகையிரதத்துடன் மோதி முதியவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று செவ்வாய்கிழமை பிற்பகல 3 மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ் தேவி புகையிரதத்துடன் மோதி விப

24ஆம் பக்கம் பார்க்க....

## குடும்பஸ்தரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைக்குச் சென்ற கணவரை காணவில்லை என மனைவி முறைப்பாடு பதிவுசெய்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

யாழ். கச்சேரி நல்லூர் வீதி மூத்

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் பட்ஜெட் - 2016

கல்வி - ரூ.10779 மில்.
சுகாதாரம் - ரூ.6616 மில்.
விவசாயம் - ரூ.1443 மில்.
மீன்பிடி - ரூ.891 மில்.

மீன்பிடி அமைச்சுக்கு குறைந்தளவிலான நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாணசபையின் 2016-ம ஆண்டுக்கான வரவு செலவு திட்டம நேற்றைய தினம் மாகாணசபை

## கோத்தாவுக்காக பொய்ச்சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக பொய்ச்சாட்சியம் அளித்த ரக்ன லங்கா பாதுகாப்பு சேவையின்

## வடக்கின் எல்லைகளில் அபிவிருத்தி; அதுவே எம் நிலத்தை பாதுகாக்கும்

### உறுப்பினர் சிவநேசன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் எல்

வடமாகாண சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெல்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் 2016-ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஒப்பீட்டளவில்

யில் வடமாகாணசபையின் ஆட்சிக கட்டமைப்புக்குட்பட்ட 5 மாவட்டங்களின் பொருட்டு ஆற்றப்படவுள்ள நடவடிக்கைகளுக்காக 2016-ம ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின

23ஆம் பக்கம் பார்க்க....

னாள் இராணுவ அதிகாரியுமான மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தரவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவன்ட்காரட் விவகாரம் தொட

23ஆம் பக்கம் பார்க்க....

வதன் ஊடாகவே எமது நிலங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். இல்லையேல் பாரதூரமான பாதிப்பை எதிர்நோக்க வேண்டிய நிலைவரும் என வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

முனவைக்கப்பட்டது.

அது தொடர்பான விவாதத்தின் போதேஅவர் மேற்படிதெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

23ஆம் பக்கம் பார்க்க....

# மத்தியின் செல்வாக்கை பலப்படுத்தி மாகாணத்தை புறக்கணிக்கும் அரசு

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு


(யாழ்ப்பாணம்)

அதிகாரப் பரவலாக்கத்திற்குப் பதிலாக அதிகார மையமாக்கலையே இன்றைய அரசாங்கம் கடைப்பிடிக்க எத்தனிக்கிறது. இதற்காக ஒவ்வொரு விடயத்திலும் தனது பிடியை இறுக்க முற்படுகின்றதே தவிர தளர்த்த முற்படவில்லை என வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் 41ஆவது அமர்வு நேற்றையதினம் கைதடியில் அமைந்துள்ள மாகாண பேரவைச் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

அதில்

24ஆம் பக்கம் பார்க்க....



# கலட்டி இராணுவ முகாமினுள் காயத்துடன் தம்பியை கண்டேன்

## ஆணைக்குழு முன் சகோதரி சாட்சி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினால் கடத்தப்பட்ட தனது தம்பியை கலட்டி இராணுவ முகாமிற்குள் காயத்துடன் கண்டதாக சகோதரி ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்துள்ளார்.

ஆணைக்குழுவின் ஐந்தாம் நாள் அமர்வு நேற்று காலை ஒன்பது மணியளவில் சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு மார்கழி மாதம் இருபத்தி இரண்டாம் திகதியன்று யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் உள்ள தனியார் கல்வி

24ஆம் பக்கம் பார்க்க....

# வித்தியா கொலை வழக்கில் 10வது சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலை வழக்கில் பத்தாவது சந்தேக நபராக வட்டுக்கோட்டையை சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மற்றும் ஐந்தாம், ஆறாம் சந்தேக நபர்களை மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைத்து விசாரணை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் புங்குடுதீவு மாணவி கொலை வழக்கு விசாரணை நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பத்தாவது சந்தேக நபராக யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை சுழிபுரத்தை சேர்ந்த பிரிய

24ஆம் பக்கம் பார்க்க....

# 224 பேர் பிரசன்னம் 175 பேர் சாட்சி

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் நேற்றைய தினம் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஐந்தாம் அமர்விற்கு 224 பேர் பிரசன்னமாகியிருந்தனர்.

இதுவே இதுவரை நடைபெற்ற அமர்வுகளில் அதிகூடிய மக்கள் சமுகமளித்த அமர்வாகும். இதில் 175 பேரின் சாட்சியங்கள் நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று நடைபெற்ற விசாரணை

24ஆம் பக்கம் பார்க்க....

# என் மகன் இப்போதும் தாகத்துடனேயே இருப்பான்!

## கண்ணீருடன் தாய் நேற்று சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தனது மகனை இராணுவம் பிடித்து சென்றபோது, தாகமாக இருக்கின்றது தண்ணீர் கொடுங்கள் என எனது மகன் என்னிடம் கேட்டான்.

அவன் தண்ணீர் குடிப்பதற்கு கூட இராணுவம் அனுமதிக்கவில்லையென தாயொருவர் கண்ணீருடன் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்று கதறியழுதுள்ளார்.

1996-ம் ஆண்டு நவம்பர் மாதம

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நடேசன், புலித்தேவன் உட்பட பலர் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்திருந்தனர்

## விஜிந்தனின் மனைவி அறிவொளி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன், சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரின் வெள்ளைக்கொடி சரணடைவின் பின்னர், எனது கணவரோடு ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாக சேவை பிரிவிவை சேர்ந்தோர் சரணடைந்ததாகவும் அதன் பின்னர் அவர்கள் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு விட்டதாகவும்,

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் நிர்வாகத்துறை பிரிவுப் பொறுப்பாளர்களில் ஒருவரான விஜிந்தன் என அழைக்கப்படும் ரவிச்சந்திரனின் மனைவியான திருமதி ரவிச்சந்திரன் அறிவொளி சாட்சியமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் நேற்று அவர் அளித்த சாட்சியத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

எனது கணவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டு அரசியல் நிருவாகத்துறையின் பொறுப்பாளர்களுள் ஒருவராகச் செயற்பட்டு வந்திருந்தார். யுத்தத்தின் இறுதி நாட்களில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் செல்வதற்காக வட்டுவாகல் பாலத்தின் ஊடாக அவரும் ஏனைய பலரும் வருகை தந்திருந்தனர்.

அதன்போது இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தவர்களை சரணடையுமாறு கோரியிருந்தனர். அதற்கமைய 2009



ஆம ஆண்டு மே 18ஆம் திகதி விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் நிருவாத்துறை பிரிவில் செயற்பட்ட முக்கியஸ்தர்கள் உட்பட எனது கணவரும் வெள்ளைக் கொடியேந்தியவாறு அருட்தந்தை பிரான்ஸிஸ் அடிகளார் முன்னிலையில் சரணடைந்தார்கள். இவர்கள் சரணடைவதை அங்கிருந்து பலர் கண்டிருந்ததோடு எனது தம்பிமாரும் கண்டிருந்தனர். அதன் பின்னர் அவர் எங்கு கொண்டு செல்லப்பட்டார் அவருக்கு என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாதுள்ளது.

நான் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி ஷெல்வீச்சுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் திருகோண மலைகுக் கொண்டு செல்லப்பட்டிருந்தேன். அதன் பின்னர் அங்கிருந்து உடல்நலமடைந்த நிலையில் மீண்டும் சொந்த ஊருக்கு வருகை தந்திருந்தேன். எனது கணவர் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்ட விடயத்தை எனது உறவினர்கள் கூறினார்கள். அவ்வாறான நிலையில் எனது கணவனை தேடும் முயறசிகளை எடுத்தேன். அவ்வாறான ஒவ் வொரு தருணங்களிலும் எனக்கு அச் சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

தொடர்ச்சியாக அவ்வாறான அச்சுறுத்தல்களைத் தாண்டி என்னால் செயற்பட்டிருக்க முடிய வில்லை. கார ணம் எனக்கு 11 வயதிலும் 7வயதிலும் இரு பெண் பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களை பாதுகாக்க வேண்டிய கட மை எனக்குள்ளது. இதனால் நான் பகிரங்கமான தேடுதல்களை தவிர்த்துக் கொண்டதோடு அமைதியாகவே இருந்து விட்டேன்.

இந் நிலையில் தற்போது ஆணைக் குழுவின் முன்னிலையில் சாட்சி மளிக்கின்றேன். இதற்கு பின்னர் என்ன அச்சுறுத்தல்கள் வருமோ என்பது தெரியாது. எனினும் எனது கணவன் உட்பட வட்டுவாகலில் அருட் தந்தை பிரான்சிஸ் ஜோசப் முன்பாக பலர் சாட்சியமாக வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த தளபதிகள், பொறுப்பாள ர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு என்ன நடந்தது? இராணுவம் பொதுமன் னிப் பளிக்கும் என்பதை யடுத்தே அவர்கள் சரணடைந்தனர். எனது கணவன் உயிருடன் இருப்பார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. எனது பிள்ளைகளும் தந்தையை தினமும் கேட்டுக்கொண்டேயிருக்கின்றார்கள்.

அவர் எங்கிருக்கின்றார். அவருக்கு என்ன நடந்தது என்பதை கூறுங்கள். ஏற்கெனவே எனது விடயத்தை ஐ.நாவில் சாட்சியமளித்துள்ள ஏனைய தளபதிகளின் மனைவிமார் கூறியுள்ளனர். அதற்கான சான்றுகளும் உள்ளன. எமது சமூகத்தில் முன்னாள் போராளிகளில் பெண்கள் தனிமையாக இருக்கின்றபோது பல நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றார்கள். ஆகவே எமது எதிர்காலத்திற்காகவாவது எனது கணவரை கண்டறிந்து என்னிடம் ஒப்படையுங்கள்.

இதேவேளை இறுதிக்கட்ட யுத்தத்திலிருந்து தப்பி தற்போது வெளிநாட்டில் அடைக்கலம் புகுந்துள்ள அரசியல் துறை நிர்வாகப்பிரிவை சேர்ந்த மலரவனின் மனைவி எனது கணவன் இராணுவத்திடம் இருந்த போது கண்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணைக்குழுவில் சாட்சியமளித்ததாகவும் தெரிவித்திருந்தார். (செ-4)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் மாணிக்கம் சின்னராசா

திதி:-16.12.2015



அன்பில் குணமிழைத்து
ஆற்றலின் வலிமைபெற்று
இன்னல் தனைச் சுமந்து
ஈன்றெடுத்த பிள்ளைகளின்
உன்னத வாழ்வுக்காய்
ஊக்கமதைக் கைவிடாது
எந்நாளும் பொன்னாளாக
ஏணியாய் இருந்தவரே!
ஐம்பது ஆண்டுகள் சென்றாலும்
ஒவ்வொரு பொழுதின் துயருக்கும்
ஓயாத உங்கள் நினைவுகளே
ஔடதமாகும் எமக்கு!

(சி-2980)

தோற்றம்:-03.03.1945
மறைவு:-07.12.2015

"திரவிய பவனம்"
மனோகரா,
அல்வாய்.

குடும்பத்தினர்.


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி மீள் கேள்வி அறிவித்தல்-2016

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கான மீள் கேள்விகள் 13/11/2015ம் திகதிய தினக்குரல், வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதி திகதி :-22/12/2015 பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி :-23/12/2015 காலை 10.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :-23/12/2015 காலை 10.30 மணி

### மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 01 | நெல்லியடி மரக்கறிச் சந்தை - துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட (அங்காடி நீங்கலாக) | 6394500.00 | 64000.00 | 1000.00 | - |
| 02 | கொட்டடிச்சந்தை | 5000.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 03 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 715101.00 | 7200.00 | 500.00 | 100.00 |
| 04 | கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 397734.00 | 4000.00 | 500.00 | 100.00 |
| 05 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 60650.00 | 650.00 | 500.00 | 100.00 |
| 06 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 225450.00 | 2300.00 | 500.00 | 100.00 |
| 07 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 482407.00 | 4850.00 | 500.00 | 100.00 |
| 08 | நெல்லியடி மீன் சந்தை | 649013.00 | 6500.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 09 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 736000.00 | 7400.00 | 500.00 | 100.00 |
| 10 | சாண்டா சந்தை கோழிக்கடை | 59400.00 | 600.00 | 500.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 11 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 42350.00 | 500.00 | 500.00 | 100.00 |

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க.கனகதுரை
செயலாளர
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
15/12/2015.

(சி-2978)

## புனித பேதுரு தேவாலயத்துக்கு ஜனாதிபதி நேற்று விஜயம்

பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் விசேட அழைப்பின்பேரில் வத்திக்கானுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேன, நேற்று புனித பேதுரு தேவாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

பாப்பரசர் மற்றும் கர்தினால்கள் வசிக்கும் ரோம் மாநகரின் வத்திக்கானில் அமைந்திருக்கும் புனித பேதுரு தேவாலயமானது இத்தாலியின் மறுமலர்ச்சியின் முக்கியமான அடையாளமாக விளங்கும் ஓர் தேவாலயமாகும். அத்தோடு இத்தேவாலயமானது மிகவும் பழமையானதும் கத்தோலிக்கர்களின் முக்கியமானதும் மிகவும் பிரபல்யமானதுமான வழிபாட்டுத்தலமாகவும் காணப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் இலங்கையின் பிரதி நிதிகள் குழுவினரும் இந்த விஜயத்தில் இணைந்திருந்தனர். ஜனாதிபதியின் வத்திக்கான் விஜயமானது நேற்றைய தினத்துடன் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மணல் ஏற்றியவருக்கு 50 ஆயிரம் தண்டம்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற நபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி அன்று துன்னாலை பகுதியில் லான்ட்மாஸ்டரில் மணல் ஏற்றிக் கொண்டு சென்ற நபர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நபருக்கான வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்டு வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசாரணையில் மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (இ-5-60)


### வாடகைக்கு

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554A, 554B எனும் இலக்கமுடைய கடைகள் வாடகைக்கு விடப்படும்.

விபரங்களுக்கு நேரில் வரவும்
(2755)
தொடர்புகளுக்கு :- நா.தயாளன்
இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### நடமாடும் மிருகவைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில், மிருக வைத்திய சேவைகளுக்கு தொடர்பு

0779738802
0212242502 (2795)

காலை 9-12
நாவலர் ரோட், நல்லூர்.

### நீங்கள் குண்டானவரா! கனோலா சமையில் எண்ணெய்

- கொலஸ்ரோல் அற்றது, மாரடைப்பு இதய நோய்களிலிருந்து பாதுகாக்க.
- கர்ப்பம் தரிக்க-பராமரிப்பிற்கான ஒமேகா 3 மற்றும் 6 இணையும் கொண்டது.
- பெண்களின் உடல் மெலிவிற்கும் பொழிவிற்கும், மேனிய மென்மைக்கும்.
- கனோலா பூவிலிருந்து கனடாவில் பிழிந்தெடுக்கப்பட்டது. இப்போது யாழ்ப் பாணத்திலும் வந்து விட்டது.

யாழ்ப்பாணம்-Guna Best pc
50/12 ஆஸ்பத்திரி வீதி, வைரவர் கோவில் லேன், யாழ்ப்பாணம்.
தொ.இல:-0779086737
கொழும்பு:-விகாஸ் 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11
கனடா:-VTR import & export (சி-2981)

# கண்ணீருடன் சாட்சியம்



காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஐந்தாம் நாள் விசாரணைகள் நேற்றைய தினம் சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது இருநூறுக்கும் மேற்பட்டோர் சாட்சியங்களை பதிவு செய்தனர். இதில் கூழாவடி, வட்டுக்கோட்டை, அராலி, மானிப்பாய் இராணுவ முகாமை சேர்ந்த இராணுவத்தினரே தமது பிள்ளைகளை கடத்தியதாக பெற்றோர் நேரடியாகவே குற்றச்சாட்டுக்களை திருந்தனர். (படங்கள்:- உ.சாளின், பொ.சோபிகா)

# நீதிமன்றில் ஒப்படைத்த எனது மகன் எங்கே?

## ஆணைக்குழுவிடம் தந்தை கேள்வி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் கடத்தப்பட்டு, வவுனியா நீதிமன்றினால் இரத்மலானை இந்துக்கல்லூரிக்கு பாரப்படுத்தப்பட்ட எனது மகன் எங்கே? என தந்தை ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் நேற்று முன்தினம் கேள்வியெழுப்பியுள்ளார்.

பருத்தித்துறையை சேர்ந்த நாம் எனது மகனான அலக்சாண்டரூபன் ஜென்சன் (கடத்தப்படும் போது வயது 18) கடந்த 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பிற்கு சென்றோம். அந்த வருடம் மாசி மாதம் 25 ஆம் திகதி அன்று தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத்தில் எனது மகன் இணைக்கப்பட்டார்.

அதன்பிறகு எனது மகனை காணவில்லை. எனினும் 2009 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் எனது மகனை கண்டதாக சிலர் கூறினார்கள். அங்கு உள்ள ஒரு உணவு விடுதி ஒன்றில் எனது மகன் பணியாற்றியதாகவும் கூறப்பட்டது. அங்கு நான் எனது மகனை பார்ப்பதற்காக சென்ற போது, எனக்கு கூறப்பட்டது போல் அங்கு அந்த பெயரில் ஒரு உணவு விடுதி இருந்தது. ஆனால் மகன் இல்லை.

இது தொடர்பில் உடனடியாகவே பருத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தேன். பின்பு 2012 ஆண்டு நாம் கடையில் சீனி வாங்கும் போது சீனி சுற்றப்பட்டிருந்த சுரையில் உள்ள பத்திரிகை செய்தியொன்றில் சிறுவர் போராளிகள் குருநாகல் அம்பேபுச முகாமில் உள்ளதாக காணப்பட்டது.

இதன் பின்னர் எனது மகனை தேடி குருநாகல் முகாமிற்கு சிங்களம் தெரிந்த ஒருவருடன் சென்றேன். அங்கு அந்த முகாம் எடுக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் வேறொரு இடத்தல் உள்ள இராணுவ முகாமிற்கு சென்றோம் (பெயர் தெரியவில்லை) அங்கு எனது மகன் பெயரில், அதேவயதில் உருவத்தில் இருந்ததாகவும், கூறப்பட்டது.

எனினும் அவருக்கு முன்னைய நினைவுகள் எவையும் இல்லை என்றும் அந்த இராணுவ அதிகாரியால் கூறப்பட்டது. இங்கு இருந்த எமது மகன் எங்கே என்று கேட்டபோது, வவுனியா நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு விட்டதாக அந்த இராணுவ அதிகாரி எங்களிடம் கூறினார்.

அவ்வாறாயின் எங்களுக்கொரு கடிதம் தர முடியுமா? என்று அவரிடம் கேட்டோம். நாங்கள் இராணுவம் கடிதம் எல்லாம் தரமுடியாது என அவர் மறுத்து விட்டார்.

இதன் பின்னர் ஆறு மாத முயற்சியில் வவுனியா நீதிமன்ற நீதிபதியை நான் சந்தித்த போது, அவர் வவுனியா சிறுவர் நல பிரிவினர் ஊடாக விசாரணை மேற்கொண்டார். அதன் போது நீதிமன்றினால் எனது மகன் இரத்மலானை இந்துக' கல்லூரி யிடம் பாரப்படுத்தப்பட்டமை தெரியவந்தது.

பின்பு நான் இரத்மலானை இந்துக்கல்லூரிக்கு சென்ற போது அங்கு எனது மகன் கையளிக்கப்படவில்லை. அதன் பின்னர் நான் என்ன செய்வது என்றே தெரியவில்லை.

வழக்கு தொடர்வதற்கும் வசதியில்லை. எனது மகனை தேடி கொழும்பு போய் வந்த போது புலனாய்வு பிரிவினரும் எம்மை கடுமையாக அச்சுறுத்தியிருந்தனர்.

இராணுவம் கடத்தி நீதிமன்றில் ஒப்படைத்த எனது மகன் எங்கே? நீதிமன்றில் ஒப்படைத்த எனது மகன் எவ்வாறு காணாமல்போனார்? நீதிமன்றிலேயே இந்த நிலை என்றால் நாங்கள் எங்கே நீதிதேடி செல்வது என அந்த தந்தை மேலும் கேள்விகள் எழுப்பியிருந்தார். (இ-4)

# யோகியுடன் இராணுவத்திடம்

# சரணடைந்த கடற்புலி தளபதியான மகனை இன்னும் காணவில்லை

## தந்தை சாட்சியம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமராய்வுப் பிரிவு பொறுப்பாளர் யோகரட்ணம் யோகியுடன் இராணுவத்திடம் சரணடைந்த கடற்புலி தளபதியான எனது மகனை காணவில்லை என கூறியுள்ள தந்தை ஒருவர், புலிகளின் பல தளபதிகள் சரணடைந்தது எனது கண்முன்னே இப்போதும் ஞாபகம் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

சரணடைந்த ஒருவரை கூட தற்போது நான் காணவில்லை என கூறும் அந்த தந்தை எங்களது மகனை கூட்டிக்கொண்டு சென்ற இராணுவம் இதற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும் எனவும் உறுதியுடன் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் சாட்சியமளித்துள்ளார். நேற்று முன்தினம் பருத்தித்துறையில் நடைபெற்ற சாட்சியத்தில் அவர் மேலும் கூறுகையில்,

நரேன் என அழைக்கப்படும் சிவஜானசுந்தரம் ஜனார்த்தன் (வயது 37) எனும் பெயருடைய எனது மகன் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்தார். அவர் உட்பட நானும் எனது மனைவியும் இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்று கொண்டிருந்த போது மே மாதம் 18 ஆம் திகதியன்று, இராணுவத்திடம் சரணடைவதற்காக சென்றிருந்தோம்.

நாம் சரணடைவதற்கு முன்னதாக விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் அனைவரையும் சரணடையுமாறு, அறிவித்துக் கொண்டிருந்தது. அதற்கிணங்கவே நாமும் இராணுவத்திடம் சரண டைந்தோம். இவ்வாறு சரணடையும் போது பிரான்சிஸ் ஜோசப் பாதிரியாருடன் தான் எனது மகனும் ஜோகரட்ணம் ஜோகி, பேபி சுப்ரமணியம், லோரன்ஸ் போன்ற புலி உறுபபினர்களும் சரணடைந்தனர்.

இதனை நாங்கள் மிக அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். நூறு மீற்றர் தூரத்தில் எங்களது மகனை ஏற்றிச்சென்ற பேருந்து சென்றுகொண்டிருக்கும் போது எனது மகனின் மனைவி அந்த பேருந்திலிருந்து இராணுவத்தினரால் இறக்கி விடப்பட்டு எமது குடும்பத்தில் மகனை மாத்திரம் கொண்டு சென்றனர்.

அந்த பேருந்தில் ஏறிய எங்கள் மகன் இதுவரை இறங்கவில்லை. காணவுமில்லை. எங்கள் மகன் உயிரோடு தான் உள்ளார். எங்களுக்குநம்பிக்கை உண்டு. எங்கள் மகனுக்காக காத்துக் கொண்டிருக்கின்றோம் என அந்த தாயும் தந்தையும் அழுகையுடன் ஆணைக் குழு முன்னால் சாட்சியமளித்தனர். (இ-4)

## அவன்கார்ட்டுக்கு எதிராக வழக்கு!

அவன் கார்ட் நிறுவனத்துக்கு எதிராக வழக்குத்தொடர கடற்படையினர் தீர்மானித்துள்ளதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

அவன்கார்ட் நிறுவனம் கடலில் வைத்து வெளிநாட்டுக் கப்பல்களுக்கு ஆயுதங்களை எடுத்துச்செல்லும்போது கடற்படையினர் அதற்கு வழித்துணை வழங்குவது வழக்கம். இதற்காக அவன கார்ட் நிறுவனம் சிறு தொகை யொன்றை கடற்படையினருக்கு வழங்கி வந்திருந்தது.

எனினும் கடந்த ஜனவரி தொடக்கம் இதுவரை சுமார் 78 கோடி ரூபா கட்டணத்தை அவன்கார்ட் நிறுவனம் நிலுவையில் வைத்துள்ள நிலையில், அதனை அறவிட்டுக் கொள்ள வழக்குத் தாக்கல் செய்ய கடற்படையினர் தீர்மானித்துள்ளனர்.

இதுகுறித்து அவன் கார்ட் நிறுவனத்துக்கும் அறிவித்துள்ள கடற்படையினர், எதிர் வரும் இரண்டொரு வாரங்களுக்குள் தமது நிலுவைப் பணம் செலுத்தப்படாத விடத்து வட்டியுடன் சேர்த்து அதனை அறவிட்டுத் தருமாறு நீதிமன்றத்தை நாடப் போவதாகவும் அறிவித்துள்ளனர். (இ)

# கலை ஞானச்சுடர் விருதுபெறுவோர்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நாளைய தினம் நடத்தவுள்ள பண்பாட்டுப் பெருவிழாவில் 2015 ஆம் ஆண்டுக்கான கலைஞானச் சுடர் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்விருதுகளைப் பெறுவோர் விபரம் வெளியிடப் பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

இதற்கமைய, பிள்ளையினார் நடராஜா– நாயன்மார்கட்டு (சிறுவர் இலக்கியம்), திருமதி புஷ்பவதி மேரி யோசப் அந்தோனி - அரியாலை (எழுத்தாளர்), கார்த்திகேசு சச்சிதானந்தன்– கோண்டாவில் (புனைகதை), திருமதி கோமதிதேவி செல்வநாதன் – நல்லூர் (ஓவியம்), பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரசர்மா நித்தியானந்த சர்மா– கொக்கு வில் (சங்கீத கதாபிரசங்கம்), சண்முகம் புஸ்பராஜா –அரியாலை (நாடகம்) , திருமதி கனகரத்தினம் பேரின்பநாயகி– அரியாலை (இசை நாடகம்), மலர் சின்னையா–நல்லூர் (கவிதை), இராமமூர்த்தி முருகானந்தம்– கோண்டாவில் (தவில்)

இவர்களுக்கான விருதுகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறுகின்ற பண்பாட்டு பெருவிழாவில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ–5)

ஐ.எஸ்.எல் 2ஆவது சுற்று அரையிறுதி

# டில்லியை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கோவா எப்.சி இறுதிப் போட்டிக்கு தகுதி

ஐ.எஸ்.எல்., கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு கோவா அணி முன்னேறியது.

நேற்று நடந்த இரண்டாவது சுற்று அரையிறுதியில் டில்லி அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றே அரையிறுதிக்கு கோவா அணி நுழைந்தது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.,) கால்பந்து தொடரின் 2ஆவது சீசன் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இதன் இரண்டாவது சுற்று அரையிறுதியில் டில்லி-கோவா அணிகள் மீண்டும் மோதின.

முதல் சுற்று அரையிறுதியில்







1:0 என்ற கோல் கணக்கில் வென்ற டில்லி அணி, இப்போட்டியை சமனிலை செய்தால் போதும் என்ற நிலையில் களமிறங்கியது.

சொந்த மண்ணில் களமிறங்கிய கோவா அணி ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்தியது. போட்டியின் 11ஆவது நிமிடத்தில் ஜோப்ரே ஒரு கோல் அடித்தார். தொடர்ந்து 27ஆவது நிமிடத்தில் ரபேல் ஒரு கோல் அடிக்க, முதல் பாதியில் 2:0 என கோவா அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் இதற்கு பதில்தர டில்லி வீரர்கள் எடுத்த எந்த முயற்சியும் பலிக்கவில்லை. கோவா அணியின் தற்காப்பு பகுதியை தாண்டி ஒரு கோல்கூட அடிக்க முடியவில்லை. மாறாக 84ஆவது நிமிடத்தில் கோவா வீரர் டுடு ஒரு கோல் அடிக்க முடிவில், கோவா அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**டில்லி ஏமாற்றம்**

முதல் சுற்று அரையிறுதியில் டில்லி(1:0) வென்றது. 2ஆவது சுற்று அரையிறுதியில் அதிக கோல் வித்தியாசத்தில் கோவா (3:0) வென்றது. கோல் அடிப்படையில் 3:1 என முன்னிலை பெற்ற கோவா அணி இறுதிப போட்டிக்கு முன்னேறியது. (க)




தென்னாபிரிக்க பயிற்சி போட்டி

# ஸ்ரோக்ஸ், ரெய்லர் சதம் இங்கிலாந்து ஸ்திரம்

தென்னாபிரிக்க இனவிடேஷன் பதினொருவர் அணிக்கு எதிரான பயிற்சி போட்டியில் ஜேம்ஸ் ரெய்லர், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோரின் அதிரடியான சதங்களின் உதவியால் இங்கிலாந்து பதினொருவர் அணி முதல்நாள் ஆட்ட நேர முடிவில் வலுவான ஓட்ட பெறுதியைப் பெற்றுள்ளது.

தென்னாபிரிக்க சென்றுள்ள இங்கிலாந்து அணி அங்கு 4 டெஸ்ட், 5 ஒரு நாள், 2 இருபது - 20 போட்டிகள் கொண்டமைந்த சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகிறது.

இதில் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் டேர்பனில் 26ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில்,

அதற்குமுன் மூன்று போட்டிகள் கொண்ட இரண்டு பயிற்சிப் போட்டிகளில் இங்கிலாந்து அணி விளையாடுகிறது.

அதனபடி 3 நாட்களைக் கொண்ட முதல் பயிற்சி டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க இன்விடேசன் அணியுடன் நேற்று சென்வெஸ் பார்க்கில் மோதியது.

இப்போட்டியில் நாணயச சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து பதினொருவர் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி அவ்வணி சார்பில்





அணித் தலைவர் குக்கும், ஹேல்சும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

குக் 2 ஓட்டங்களுடன் எல்.பி. டபிள்யூ ஆனார். ஹேல்ஸ் 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டலாவின் பந்தில் கிளின் போல்டானார்.

அடுத்து வந்த கொம்ப்டன் 58 ஓட்டங்களுடனும் நம்பிக்கை நட்சத்திரம் ஜோ ரூட் 28 ஓட்டங்களுடனும் வெளியேற அதன்போது இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்களை எடுத்திருந்தது.

5ஆவது விக்கெட்டுக்கு ரெய்லருடன் சகலதுறை வீரர்பென் ஸ்ரோக்ஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பாக விளையாடியது.

குறிப்பாக பென் ஸ்ரோக்ஸ் அதிரடியாக விளையாடினார். ரெய்லர் 152 பந்தில் 114 ஓட்டங்கள் எடுத்து ரிட்டையர்ட் ஹேர்ட் ஆகி வெளியேறினார். ஸ்ரோக்ஸும் 131 பந்துகளில் 158 ஓட்டங்கள் குவித்து ரிட்டையர்ட் ஹர்ட்மூலம் வெளியேறினார்.

இந்நிலையில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து பதினொருவர் அணி 88 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை 470 ஓட்டங்களை குவித்துள்ளது.

களத்தில் மொயின் அலி 33, கிறிஸ் வோக்ஸ் 10 ஓட்டங்களுடன் உள்ளனர். (க)

போதைப்பொருள் பாவனை

# பிரேசில் நடுக்கள வீரர் பிரெட்டுக்கு ஒரு வருட போட்டித் தடை



பிரேசில் நாட்டு கால்பந்து அணியின் நடுக்கள வீரர் பிரெட். இவர் ஷாக்டார் என்ற கழக அணிக்காக தற்போது விளையாடி வருகிறார்.

போதைப்பொருள் உட்கொண்ட விவகாரத்தில இவருக்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

22 வயதாகும் பிரெட், சிலி நாட்டில் நடைபெற்ற கோபா அமெரிக்க கிண்ண கால்பந்து போட்டியில் பிரேசில் அணியில் விளையாடினார்.

இந்தத் தொடரின்போது அவருக்கு சோதனை செய்யப்பட்டது. இந்த சோதனை முடிவு தற்போது வெளியிடப்பட்டது.

இதில் ஹைட்ரோ குளோரோ தயாசைட் என்ற மாத்திரையை உட்கொண்டதாக சோதனை முடிவில் தெரியவந்துள்ளது.

செயல்திறனை அதிகரிக்கும் இந்த மாத்திரையானது போதைப் பொருட்களுக்கு சமமானது என்று கருதப்படுகிறது. இதனால் அவருக்கு ஓராண்டு தடைவிதித்து தென் அமெரிக்க கால்பந்து ஆட்சி மன்றக் குழு உத்தரவிட்டுள்ளது.

ஆனால், இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள பிரெட், தான் அப்பாவி என்று தெரிவித்துள்ளார். மேலும், இந்த தடையை எதிர்த்து மேன் முறையீடு செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# முதல் டெஸ்ட்டில் இலங்கை தோற்க காரணம் என்ன?

விளக்கும் அணித் தலைவர் மத்யூஸ்

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் ஏற்பட்ட தோல்வி குறித்து இலங்கை அணித தலைவர் அஞ்சலோ மத்யூஸ் விளக்கம் அளித்துள்ளார்.


நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி டுனெடினில் நடைபெற்றது. இப்போட்டியில் நியூசிலாந்து 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

இந்தத் தோல்வி குறித்து இலங்கை அணித் தலைவர் மத்யூஸ் கூறுகையில்,

"எங்களது துடுப்பாட்ட வீரர்களின் தற்காப்பு ஆட்டமே தோல்விக்கு முக்கிய காரணமாக அமைநதது.

நாங்கள் பந்துவீச்சில் அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. சில முக்கிய விக்கெட்டுக்களை விரைவில் வீழ்த்த தவறிவிட்டோம்.

முதல் இன்னிங்சில் எச்சரிக்கையாக துடுப்பெடுத்தாடினோம்.



ஆனால் அதை 2வது இன்னிங்சில் செய்யத் தவறிவிட்டோம்.

நாங்கள் நினைத்ததைவிட நியூசிலாந்து வீரர்கள் சிறப்பாக செயல்பட்டனர். எங்களது துடுப்பாட்ட வீரர்களின் செயல்பாடுகள் ஏமாற்றமே அளித்தன.

துடுப்பாட்ட வீரர்கள் நல்ல ஓட்டங்களை எடுக்கும் பட்சத்தில் மட்டுமே பந்துவீச்சாளர்களுக்கு நல்ல ஒரு வாய்ப்பை உருவாக்கி கொடுக்க முடியும்.

எதிர்வரும் போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் நல்ல ஓட்டங்களை குவிக்க வேண்டியது முக்கியமான ஒன்று" என்று கூறியுள்ளார். (க)

# கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்



நாடளாவிய ரீதியிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 7 ஆயிரத்திற்கும் அதிகமான வங்கி ஊழியர்கள் பங்கேற்றிருந்தனர்.

2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் தமக்கான உரிமைகள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுக்க திட்டமிட்டிருந்த போதிலும், பாராளுமன்றத்தில் பிரதமர் நேற்று முன்தினம் ஆற்றிய உரையின் பின்னர் அந்த பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டிருந்தது.

எனினும், தமது கோரிக்கைகளை முன்வைத்து திட்டமிட்டவாறு தாம் பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளதாகவும், இந்த நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள வங்கி ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தினால் கொழும்பு கோட்டை பகுதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. கொழும்பு- கோட்டை பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் கடமைகளில் கலகத் தடுப்பு பிரிவினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தினால் நாட்டின் பல பகுதிகளிலும் வங்கி நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு
1942
09
09

இறப்பு
2015
11
18

அமரர் அருணாசலம் விக்கினேஸ்வரமூர்த்தி

கடந்த 18.11.2015 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 16.12.2015 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மற்றும் 18.12.2015 வெள்ளிக்கிழமை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
கட்டுவன் மேற்கு,
நாச்சிமார் கோவிலடி.
077 875 9557,
077 350 5264, 077 875 9587

(2784)


## ராசி பலன்

**16.12.2015**
(கார்த்திகை 30, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு,
பஞ்சமி பிற்பகல் 1.07 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 12.58 மணிவரை
இராகுகாலம் 12.22-1.52 மணிவரை
சுபநேரம் 4.52-6.22 மணிவரை
சஷ்டி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம் பகல் 1.05 இற்கு கும்-சந் | | |
| சந் | | | குரு |
| புத | சூரி சனி | சுக் | செவ் ராகு |

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்த முற்படுவீர்கள்.

**மேடம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், சொல்லை செயலாக்கிக்காட்ட முற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், விருப்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொதுவாழ்வில் புகழ்கூடும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மனதிற்கு இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சிதரும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**தனுசு** உறவினர்களின் ஒத்துழைப்பால் உற்சாகமடையும் நாள், நேற்றைய பிரச்சினைகள் இன்று நல்ல முடிவுக்கு வரலாம், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** பணத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், சுவாரஸ்யமான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

நாட்டில் உள்ள அரச வங்கி ஊழியர்கள் அனைவரும் நேற்றைய தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். நெல்லியடி நகரில் உள்ள அரச வங்கிக் கிளை மூடப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்.




வடக்கு மாகாண சபை நிதியொதுக் கீட்டின் கீழ் மாகாண சபை உறுப்பினர் கே.சர்வேஸ்வரனால் லேசர் பிறிண்டர் ஒன்று சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வக நிறுவனத்துக்கு அண்மையில் வழங்கப்பட்ட போது...










யாழ்.சுழிபுரம் றோட்டறக்ட் கழகத்தினால்மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது திருவடி நிலை காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு மரக்கன்றுகள் அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தன.





சுன்னாகம் கந்தரோடை பகுதியில் அமைந்துள்ள அருள் விநாயகர் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.இதன்போது வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் விருந்தினராக கலந்து கொண்டு நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.








உளநல நாளை முன்னிட்டு எஸ்.ரி.அருள்குமரனின் நெறியாள்கையில் **சுயம் தேடி எனும் தெருவெளி** ஆற்றுகை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றபோது...



கடையிற் சுவாமிகளது 124 ஆவது வருடாந்த குருபூஜைப் பெருவிழா அண்மையில் ஸ்ரீ சிவகுருநாத குருபீட ஸ்ரீவேதாந்த மடத்தில் இடம்பெற்றது. இதன்போது துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கலாபூஷணம் கே.எஸ். ஆர்.திருஞானசம்பந்தன், தமிழ்நாடு மதுரை திருவாதவூர் தேவார இசைமணி குமாரசாமி இராமச்சந்திரன் ஆகியோர் பண்ணிசை நிகழ்வில் கலந்து கொண்டுள்ளதைப் படத்தில் காணலாம்.



முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.தர்மலிங்கத்தின் பிரிவுபசார விழா அண்மையில் இணுவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. உடுவில் கோட்டக் கல்வி அதிபர் சங்கத்தினால் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் விழா நாயகனுக்காக அதிபர் சங்கத்தினால் வழங்கப்பட்ட வாழ்த்து மடலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# ஆழிப்பேரலையில் மரணித்த உறவுகளுக்கு கல்லறைகள்



(பொற்பதி)

சுனாமி ஆழிப் பேரலையில் உயிரிழந்த வடமராட்சி கிழக்கு உறவுகளுக்கான கல்லறைகள் அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இதற்கமைய வடமராட்சி கிழக்கு உடுத்துறை சுனாமி நினைவுச் சதுக்கத்தில் இக்கல்லறைகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 2004 ஆம்ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று நாட்டை உலுக்கிய சுனாமி ஆழிப் பேரலையானது இலட்சக்கணக்கான உயிர்களை காவு கொண்டது.

இவ் உறவுகளை நினைவு கூரும் முகமாக ஒவ்வொரு வருடமும்டிசெம்பர்26 சுனாமி நினைவுதினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அன்றைய தினம் இறந்தவர்களது கல்லறையில் உறவினர்களால் அஞ்சலி செலுத்தப்படும்.

வடமராட்சி கிழக்கில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறவுகள் உயிர் நீத்தனர். ஆனால் கல்லறைகள் சிலருக்கு அமைக்கப்பட விலலை.

இதற்கமையவே தற்போது 1038 பேருக்கான கல்லறைகள் அமைக்கும் பணிகள் அவர்களது உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-64)

# பண்பாட்டுப் பெருவிழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை வியாழக்கிழமை நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடை பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவை தலைவருமான ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்ாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது கலை நிகழ்ச்சிகள், இசையரங்குகள், கவியரங்குகள், நாட்டியர்ப்பணம் என்பன இடம்பெறுவதோடு கலைஞானச்சுடர் மலர் வெளியீடும், 2015 ஆம் ஆண்டுக்கான கலைஞான சுடர் விருது வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (இ-5)

# ஆண்டாள் திருப்பாவை வெளியீடு



சி.நாகலிங்கம் JP எமது 75 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஆண்டாள் திருப்பாவை என்னும் நூல் வெளியீடு 18.12.2015 வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் 11 மணிவரை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி அவர்களின் ஆசியுடன் சந்நிதியான் ஆச்சிரமம் தொண்டைமானாறில் இடம்பெறும்.

அத்துடன் சமயப் பெரியார்களின் வாழ்த்துரைகளும் மகேஸ்வர பூஜையும் நடைபெறும். அன்பர்கள், உறவினர்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(கொழும்பு) (2747)

சி.நாகலிங்கம்,
முன்னாள் சந்நிதியான்
ஆச்சிரமத் தலைவர்.


## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா:11
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:B.COM, MBA, PHD/ விரிவுரையாளர
தொ.இ: B/2840

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 33செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்
தொ.இ: B/2850

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 16
உயரம்: 5'6'
தகைமை/தொழில்:BSC/ஆசிரியர்
தொ.இ: B/2879

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 14
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/2899

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 47 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/3634

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 42 செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்
தொ.இ: G/3639

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 76 செவ் இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSC/வங்கியாளர்
தொ.இ: G/3650

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 59சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:MSC/தனியார் தொழில்
தொ.இ: G/3662

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


# மஹோற்சவம்

(சாவகச்சேரி)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-5-29)


**விற்பனைக்கு**

மூன்று வாசல் முத்து மணவறை விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
077 978 9468
(2791)


## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் கேள்விப் பத்திரம் கோரல்

மேற்படி வைத்தியசாலை வளவிலுள்ள பெரிய தேக்கமரம் விற்கப்படவுள்ளது. அதனை வாங்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் (9.00AM-4.00PM) பார்வையிட்டு தங்கள் கூறு விலைகளை 05.01.2015 ஆம் திகதிக்கு முன் "தலைவர் கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி-2974) தலைவர்


## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014 ஆம் ஆண்டு (31.11.2014 இற்கு) முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2016 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015 ஆம் ஆண்டு 31.06.2015 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (05.01.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்கமுடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2016 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல.370,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 4900311

(சி-2975)

உரிமையாளர்: A.S. Surendran
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

# மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறை அமைக்கப்படவில்லை

## சடலங்கள் ஒதுக்குப்புறமான வெளியில் வைக்கப்படுவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு

(முல்லாவி)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சிற்குட்பட்ட ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறை இல்லாமை காரணமாக சிகிச்சை பலனின்றி மரணிக்கும் நோயாளர்களின் சடலங்களை வைத்தியசாலையின் ஒதுக்குப்புறமான வெட்ட வெளியில் வைக்கப்படும் அவலநிலை காணப்படுகின்றது.

இது தொடர்பாக பல தடவைகள் வடக்கு மாகாண சுகாதார வைத்திய அ காரிகளுக் கும் மற்றும் பிரதேச சபை அபிவிருத்தி குழு கூட்டத்திலும் எடுத்துக்கூறியும் இதுவரை பயன் கிடைக்கவில்லையென பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஏ-9 வீதி மாங்குளம் ஆதார வைத்தியசாலையானது வடக்கு மாகாணத்தின் மைய நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஏ-9 வீதியில் கனகராயன் குளத்திற்கும் திருமுறிகண்டி பகுதிக்கும் இடையில் ஏற்படும் வாகன விபத்து சம்பவங்களின் போது படுகாயம் அடைவோர் உடனடி அவசர சிகிச்சைக்காக குறித்த வைத்தியசாலையில் அனுமதிக்கப் படுகின்றனர்.

அத்துடன் கரிப்பட்டமுறிப்பு ,ஒலுமடு, மணவாளன்பட்டமுறிப்பு, மாங்குளம், பனிக்கன்குளம்,கிழவன்குளம் ஆகிய கிராமங்கள் உட்பட பல கிராமங்களைச் சேர்ந்த மக்களினது சுகாதார வைத்திய சேவை சிகிச்சைகளையும் வழங்கி வருகின்றது.

இந்நிலையில் சிகிச்சை பெறுவோர் சிகிச்சை பலனின்றி மரணிக்கும் போது சடலங் களை வைத்து பராமரிப்பதற்கு மீள் குடியேற்றத்திற்கு பின்னர் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு ஆறு வருடங்களைக் கடந்த நிலையில் பிரேத அறை இன்னும் அமை கப்பட வில்லையென பிரதேச மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

எனவே வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் இது தொடர்பில் கவனத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)




# திருக்கேதீச்சர திருத்தலத்தின் கட்டுமானப்பணிகள் ஜனவரியில்

## ஆலய பிரதம குரு தெரிவிப்பு



மன்னார் திருக்கேதீச்சர திருத்தலத்தின் கட்டுமானப்பணிக்காக இந்திய அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 320 மில்லியன் ரூபாய் நிதியில் ஆலய கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக திருக் கேதீச்சர திருத்தலத் தின் பிரதம குரு கருணானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில அவர் தெரிவிக்கையில்,

தற்போது திருக கேதீச்சர திருத் தலத்தின்கட்டு மான பணிகளுக் காக இந்திய நாட்டின் மாமல்லபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட சிற்பவேலைப்பாடுகளை கொண்ட கருங்கல்லை பயன்படுத்தி குறித்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

திருக்கேதீச்சர திருத்தலத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் கடந்த ஜூன் மாதம் 7 ஆம் திகதி திருக்கேதீச்சர திருத்தலத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்தலத்தில் உள்ள விக்கிரகங்கள் இடமாற்றம் செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து புதிய திருத்தலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த நவம்பர் மாதம் 22 ஆம் திகதி இடம் பெற்றதுடன் ஏற்கனவே காணப்பட்ட திருக் கேதீச்சரத் திருத்தல கட்டடம் தற்போது உடைக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஜனவரி மாதம் திருத்தலத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகி சுமார் ஒரு வருடங்களில் கருங்கல் வேலைத் திட்டங்கள் நிறைவடையவுள்ளன.

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு திருக் கேதீச்சர திருத்தலத்தின் மஹா கும்பாபஷேகம் நடைபெறும் என திருக்கேதீச்சரத திருத்தலத்தின் பிரதம குரு கருணானந்தக் குருக்கள் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

## வெதுப்பக நிர்மாணப்பணிகளை நேரில் பார்வையிட்டார் அமைச்சர்

(பனிக்கன்குளம்)

இவ்வாண்டுக்கான வடக்கு மாகாண வருடாந்த குறித்தொதுக்கப்பட்ட நிதியில், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தேவன்பிட்டி கிராமத்துக்கு, வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் வழங்கப்பட்ட உதவித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வெதுப்பகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவுற்ற வேளையில் அதனை நேரில் சென்று பார்வையிட்டார் அமைச்சர் பா. டெனீஸ்வரன்.

அந்த வெதுப்பகம் விரைவில் அங்குள்ள இரண்டு கிராமங்களுக்கு பயன்படும் வகையில், மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படும் எனவும் எதிர்வரும் காலத்தில் அங்குள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள் இதன் மூலம் தமது வருமானத்தை பெருக்கிக் கொண்டு தமது சங்கத்தில் உள்ள அங்கத்தவர்களையும் அவர்களது வாழ்வாதாரத்தில் பெருக வைக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (2-281)

# அக்கராயன் குளத்தின் கீழான 300 ஏக்கர் நெற்செய்கை மழையினால் அழிவு

## கமநல சேவை நிலைய தகவல்படி

அக்கராயன் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நெற் பயிர்களில் சுமார் 300 ஏக்கர் நெற்பயிர் அழிவடைந்துள்ளதாக அக்கராயன் கமநல சேவை நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பாரிய நீர்ப்பாசனக் குளமான அக்கராயன்குளம், கடந்த நாட்களில் பெய்த மழை காரணமாக வான் பாய்ந்தது. இதனால் அதன் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட, நாகதம்பிரான் கமக்காரர் அமைப்பின் கீழுள்ள 300 ஏக்கர் நெற் செய்கை அழிவடைந்துள்ளது.

அழிவடைந்த நெற்பயிர் தொடர்பான விபரங்களை மேற்படி கமக்கார அமைப்பு அக்கராயன் கமநல சேவை நிலையத்திடம் கையளித்துள்ளது. அதில் தங்கள் கமக்கார அமைப்பின் கீழ் சமாதானபுரம் கிராமத்தில் மட்டும் 158 ஏக்கர் அழிவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. ஒக்டோபர் மாதம் தொடக்கம் டிசெம் பர் மாதத்தின் முதலாவது வாரம் வரையான காலப்பகுதியல் அக்கராயன் குளம் 3 தட வைகள் வான் பாய்ந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# 4 ஆயிரத்து 224 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்க முடியவில்லை

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் தகவல்

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் 4 ஆயிரத்து 224 குடும்பங்களுக்கு காணிகள் இல்லாமையால், அவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்க முடியாமல் உள்ளதாக மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டு, மக்கள் மீள்குடியேறினர். இதுவரையில் 42 ஆயிரத்து 862 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களில் 15 ஆயிரத்து 592 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை. நிரந்தர வீடுகள் இல்லாதவர்களில் காணி இல்லாமல் 4,224 குடும்பங்கள் உள்ளன.

மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட்டு, காணி உறுதிப்பத்திரங்கள் இல்லாமல் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அந்தக் காணிகளில் வசித்து வரும் சுமார் ஆயிரத்து 500 குடும்பங்களும் இதில் அடங்குகின்றன.

மக்கள் மீள்குடியேறி பயிர்ச்செய்கை மேற்கொண்டு வரும் நிலப் பரப்பில் 2 ஆயிரத்து 930 நிலப்பரப்பு இன்னமும் வனவள திணைக்களத் துக்குச் சொந்தமானதாகக் காணப்படுகின்றதாக வும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)





யுத்தப் பாதிப்புக்குள்ளான கிராமங்களில் உள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை சுவிஸ் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த வகையில் கிளி/ ஆனைவிழுந்தான் குளம் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த 53 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது...

# 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டியுள்ளது

## வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டியுள்ளது எனவும் அதனையும் அடுத்தமாத இறுதிக்குள் வழங்கிவிட முடியும் எனவும் இலங்கை மின்சாரசபையின் வடக்கு மாகாணபிரதிமுகாமையாளரும்வடக்கின வசந்தம் திட்ட முகாமையாளருமான டி.கே.பி.யு. குணதிலக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கிளிநொச்சியில் 41 ஆயிரத்து 862 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இதில் 34 ஆயிரத்து 400 பேருக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கடந்த காலங்களில் இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு மாவட்டத்தில் 141 கிலோ மீற்றர் அளவுக்கு மின்விநியோகம் விரிவுபடுத்த வேண்டியுள்ளது. அந்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மேலும் 11 கிராமங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

இதற்கமைய உழவனூர், புன்னை நீராவி, கண்ணி நகர் புளியம்பொக்கணை, கூனாங்குளம், ஊரியான், வன்னேரிசோலை, சோலைநகர், பொன்னாவெளி, நேரடம்பன், அரசபுரம் போன்ற கிராமங்களுக்கே மின் விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதனை அடுத்தமாத இறுதிக்குள் பூர்த்தி செய்து விடுவோம்.

கிளிநொச்சியில் இன்னும் 20 ஆயிரத்திற்கு மேல் அதாவது மாவட்டத்தின் அரைவாசி மக்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்று ஊடகங்களில் வெளியான செய்தி தவறானது.

இதேவேளை வீடுகளுக்கான உள்ளக மின்இணைப்பை மேற்கொண்டு மின்சாரத்தை பெறமுடியாத நிலையில் வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு கடன் அடிப்படையில் உள்ளக இணைப்பு மற்றும் மின் விநியோகத்தை மேற்கொள்ளும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் விரும்பும் மக்கள் அந்த வசதியை பெற்றுக் கொள்ளமுடியும் என்றார். (2-281)




## மூன்று தடவைகளும் பெறத்தவறிய விவசாயிகளுக்கான இறுதிக்கட்ட மானிய உர விநியோகம் இன்று

(மல்லாவி)

துணுக்காய் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட 20 கமக்கார அமைப்பின் கீழுள்ள விவசாயிகளில் நடப்பாண்டு காலபோக நெற்செய்கைக்கான மானிய உர விநியோகங்களின்போது அதனைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்களுக்கான இறுதிக்கட்ட மானிய உர விநியோகம் இடம்பெறவுள்ளதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

மேற்படி கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கான இறுதிக்கட்ட உரமானிய உரவிநியோகம் இன்று புதன்கிழமை காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 3.30மணி வரை துணுக்காய் கமநலசேவை நிலையத்தில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளது.

விவசாயிகளுக்கான மானிய உர விநியோகம் மூன்று தடவைகள் நடைபெற்றிருந்த நிலையில் இதன்போது மூன்று தடவைகளும் பெறத்தவறியவர்கள் இறுதிச் சந்தர்ப்ப உர விநியோகத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் சேலி வைட்டிங் கிளிநொச்சிக்கு விஜயம்



இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் சேலி வைட்டிங் கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடி முறையை ஊக்குவிப்பதற்கான திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

இதன்படி கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மணியங்குளம் பகுதியில் நன்னீர் மீன்பிடி முறையை ஊக்குவிக்க 60 ஆயிரம் மீன்குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டன.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் 10 சிறு குளங்கள் தெரிவு செய்யப்பட்டு நன்னீர் மீன்பிடியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்றைய நிகழ்வில் 18 மீனவக் குடும்பங்கள் பங்கேற்றிருந்தன. (2)

## துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் சேத மதிப்பீட்டு விபரம் மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைப்பு

(மல்லாவி)

நாட்டில் இடம்பெற்ற 30வருடகால யுத்த சூழ்நிலை காரணமாக துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 61 பாடசாலைகளில் 54 பாடசாலைகள் சேதமடைந்ததாகவும் துணுக்காய் கல்வி வலயம் முழுமையாக பாதிக்கப்பட்டதுடன் அதன் உடைமைகளும் அழிவடைந்து போனமை தொடர்பில் சேதமதிப்பீட்டு விபரம் மாகாண கல்வி அமைச்சிற்கும் மாகாண கல்வி திணைக்களத்திற்கும் துணுக்காய் கல்வி வலயத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் கல்வி வலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்தம் காரணமாக துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு கல்விகோட்டத்தில் 14 பாடசாலைகளும் துணுக்காய் கல்வி கோட்டத்தில் 17 பாடசாலைகளும் ஒட்டுசுட்டான் கல்வி கோட்டத்தில் 23 பாடசாலைகளுமாக மொத்தம் 54 பாடசாலைகள் பகுதியாகவும் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

அத்துடன் துணுக்காய் கல்வி வலயமும் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளதுடன் அதன் உடைமைகள் சேதமடைந்திருந்தன.

மேற்படி சேதவிபரங்களை மாகாண கல்வி அமைச்சிற்கும் மாகாண கல்வித் திணைக்களத்திற்கும் புள்ளிவிபரத்தகவலுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## சிராட்டிகுளம் கிராம வீதிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலையில்

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை ரீதியான 30 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிராட்டிகுளம் கிராம வீதிக்கு செல்லும் வீதி புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி மீள திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிராட்டி குளத்திற்கு நெட்டாங்கண்டல் கிராமத்தில் இருந்து சிராட்டிகுளம் வரையிலான 8 கிலோ மீற்றர் வீதி குன்றும் குழியுமாக மக்களின் பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாது இருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் மு/பாலிநகர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது சிராட்டிகுளம் மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக முதலமைச்சரினால் குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி வேலைகளைச் செய்வதற்காக வேலைத்திட்டம் ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற சீரற்ற காலநிலை காரணமாக தொடர் மழை ஏற்பட்டதையடுத்து குறித்த வீதியின் வேலைகளை இவ்வாண்டு இறுதிக்குள் முன்னெடுக்க முடியாது இருந்தது.

அத்தோடு வீதி புனரமைப்பிற்கான கிரவல் மண்ணை கனரக வாகனங்களில் ஏற்றி வருகின்ற போது ஏனைய கிராமங்களின் மண் வீதிகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டமையால் மேற்படி வீதி புனரமைப்பு வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை உப-அலுவலகத்தினால் பாடசாலைகள் மட்டத்தில் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுகளின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி,

**பொது அறிவு**

**வினாவிடைப்போட்டி**

**தரம் -6 தொடக்கம் 8 வரை**

கே.லிதுஜன் -மு/வித்தியாணந்தக்கல்லூரி, ஒ.துலக்சிகா-மு/வித்தியானந்தக் கல்லூரி, (இருவர் மூன்றாமிடம்)வீ.ஆரண்யா -மு/வித்தியானந்தக்கல்லூரி, இ.ரோஜிதா மு/கலைமகள் வித்தியாலயம்

**தரம்-9,10**

மு.அஜித்-மு/கலைமகள் வித்தியாலயம் , ஐ.துவீபா- மு/வித்தியானந்தக்கல்லூரி, ஜே.தர்சிகா- மு/வித்தியானந்தக் கல்லூரி

**சித்திரம் வரைதல்**

**தரம் -6,7,8**

செ.சுஜின் நிலாநிதன்- மு/வித்தியானந்தக்கல்லூரி, த.யதுர்சிகன்- மு/வித்தியானந்தக் கல்லூரி, இ.டிலக்சன்-மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்.

**தரம்-9,10**

பு.தனுசிகன் -மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், கோ.ஜெருக்சன்- மு/வித்தியானந்தக் கல்லூரி, ரா.யுவதர்சன்-மு/வித்தியாணந்தக் கல்லூரி.

**கவிதை எழுதுதல் போட்டி**

**தரம்-11,12**

பி.சுஜீவா-மு/வித்தியானந்தக் கல்லூரி, ப.சஜிவன்- மு/ வித்தியானந்தக்கல்லூரி

**சித்திரம் வரைதல் போட்டி**

**தரம்- 1 தொடக்கம் தரம்- 5 வரை**

அ.பவலோஜன் -மு/கலைமகள் வித்தியாலயம், ப.பாத்திமா ஹப்ஸா- மு/தண்ணீரூற்று சீ.சீ. பாடசாலை, செ.சோபிகா-மு/கலைமகள் வித்தியாலயம்

**திருக்குறள் மனனம் செய்தல்**

செ.சிந்துஜன்-மு/கலைமகள் வித்தியாலயம், சு.சதாஜினி-மு/றோ.க.த.க. பாடசாலை, பு. ஷத்தியப்பிருந்தாபன்- மு/கலைமகள் வித்தியாலயம்

**முன்பள்ளி சிறார்களுக்கான நிறம் தீட்டுதல்**

செ.டஞ்சிகன், சு.சதுர்சிகா, சு.லோஜனா, ர.தணிகா, தி.ஆதிலா, பா.கஸ்மிரன், க.வர்ணவி, ம.பிரணவி, அ.அஸ்வினி, சி.யனுசன், சு.டக்சனா, சி.கரிஷ்ணா, ந.கவிஞ்சன், யோ.லோசனன் (2-302)



முல்லை. பிரசாந் எழுதிய **குருதி படிந்த மண்** எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் மு/அளம்பில் றோ.க.த.க பாடசாலையில் நடைபெற்றது.

# உழைக்கும் மக்கள் போராட்டம் நடத்துவதில் பிழையில்லையாம்

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



உழைக்கும் மக்கள் போராடடம் நடத்துவதில் பிழையில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் பறிக்கப்படும் போது அதற்காக குரல் கொடுப்பது அவர்களின் உரிமையாகும்.


அதனை எந்த வகையிலும் பிழையாக கருத முடியாது.

வேலை நிறுத்தப் போராட்டங்களில் பங்கேற்காதவர்கள் பற்றியே பிரச்சினை காணப்படுகின்றது.

வரவு செலவுத்திட்டத்தில் எந்தவொரு தரப்பும் பிளவடைந்திருக்கப் போவதில்லை.

எதிர்க்கட்சி எதிர்க்கட்சியேயாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அளுத்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைதெரிவித்தார். (இ)




# இலங்கையில் ஐந்து ஆண்டுகளில் 1,040 சிறுவர்கள்,300 பெண்கள் உறவினர்களால் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

**இலங்கையில் 2010 முதல் 2014 வரை நெருங்கிய உறவினர்களால் 1,040 சிறுவர்களும்,370 பெண்களும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,தேசிய மகளிர் குழு ஆகியவற்றுக்கும் பொலிஸுக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மகளிர் மற்றும் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.**

நெருங்கிய உறவினரகளால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் தேசிய மகளிர் குழுவிடம் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளைவிட பொலிஸுக்கு மிகக்குறைந தள வான முறைப்பாடுகளே செய்யப்படடுள்ளன என அமைச்சின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் ஜே.வி.பியின் விமல் ரத்நாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்கு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு சபையில் சமர்ப்பித்திருந்த பதிலிலேயே மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு,

2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை நெருங்கிய உறவினர்களால் 1,040 சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 916 முறைப்பாடுகளும், பொலிஸாருக்கு 124 முறைப்பாடுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இதற்கமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 2010ல்127, 2011ல்165, 2012ல் 17, 2013ல் 340, 2014ல் 267 முறைப்பாடுகள் என மொத்தமாக 916 முறைப்பாடுகளும், பொலிஸாருக்கு 2010ல் 17, 2011ல் 11, 2012ல் 18, 2013ல் 46, 2014இல் 32 என மொத்தமாக 124 முறைப்பாடுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இதேவேளை, 2010முதல் 2014வரை நெருங்கிய உறவினர்களால் 370 பெண்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என தேசிய மகளிர் குழுவுக்கும், பொலிஸுக்கும் முறைப்பாடுகள் செயயப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் தேசிய மகளிர் குழுவுக்கு 345 முறைப்பாடுகளும், பொலிஸுக்கு 25 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மகளிர் குழுவுக்கு 2010ல் 38, 2011ல் 78, 2012ல் 93, 2013ல் 41, 2014ல் 95 என 345 முறைப்பாடுகளும் பொலிஸுக்கு 2011ல் 04, 2012ல் 04, 2013ல் 06, 2014ல் 11 என 25 முறைப்பாடுகளும் செய்யபபட்டுள்ளன என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# நச்சுப்பொருட்கள் கலந்த உரத்தையே வழங்கியது!

## மகிந்த அரசு மீது ரத்னதேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த அரசாங்கம் நச்சுப் பொருட்கள் கலந்த இரசாயன உரத்தையே மானியமாக வழங்கியது என அத்துரலிய ரத்ன தேரர் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குற்றம் சுமததியுள்ளார்.

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உர மானியம் குறைக்கப்பட்டதாக குற்றம் சுமத்துகின்றனர்.

எனினும் கடந்த அரசாங்கம் இரசாயனக் கலவைகள் அடங்கிய உரத்தையே வழங்கியது.

இவ்வாறு வழங்கிய உரத்தின் பாரியளவு வருமானம் வெளிநாடுகளுக்கே சென்றது.

இந்த வகை உரங்களில் அதிகளவில் கெட்மியம் மற்றும் ஆசனிக் போன்ற நச்சு இரசாயன பதார்த்தங்கள் காணப்பட்டன.

இவை மண்ணின் வளத்தை அழிக்கும் வகையில் தொழிற்படக்கூடியவை.

தற்போது உலக நாடுகள் பலவற்றில் இயற்கைக்கு பாதுகாப்பான உரப் பயன்பாடே முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் காரணமாகவே நாம் இம்முறை விவசாயிகளுக்கு உர மானியத்திற்கு பதிலாக உரத்தைக் கொள்வனவு செய்ய பணம் வழங்க வேண்டுமென்றே யோசனையை முன்வைத்தோம்.

இதன் மூலம் இரசாயன உரப் பயன்பாட்டை வரையறுக்க முடியும் என அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# நாய் படுக்கும் படுக்கையில் தாய் படுத்திருந்த பரிதாபம்

நாய் படுக்கும் படுக்கையில் சில நாட்கள் படுத்திருந்த தன்னை, தன்னுடைய நான்கு பிள்ளைகளும் தவிக்கவிட்டு விட்டனர் என்று, அவர்களுடைய 88 வயதான தாயொருவர் கலேவெல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பாணந்துறை தெற்கு மாதுபிட்டியவைச் சேர்ந்த தாயே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். தனக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் இருக்கின்றனர் என்றும், அவர்களில் வங்கியில் கடமையாற்றும் மகன், தன்னைத் தவிக்கவிட்டு விட்டதாகவும் அத்தாய் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் பேருந்தில் தன்னை, நேற்று முன்தினம் அந்த மகன் ஏற்றிவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய ஏனைய மகனமார் இருவரும் பொலிஸ் சேவையில் உள்ளனர் என்றும் மகள், ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றார் என்றும் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார் அந்த தாய்.

மூன்று மாடிகளைக் கொண்ட வீடொன்றில் தடுத்து வைத்திருந்ததாகவும், நாய் படுத்துறங்கும் படுக்கையில் சில நாட்கள் படுத்திருந்ததாகவும் அத்தாய், தனது முறைப்பாட்டில் தெரிவித் துள்ளார். (இ)

# நல்லிணக்க நடவடிக்கைகளில் அரசு நியாயமாக நடக்கவில்லை

## கத்தோலிக்க குருமார் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்று கத்தோலிக்க மதகுருமார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இந்த செய்தியை பிரசுரித்துள்ளது.

வணக்கத்துக்குரிய அருட்தந்தை மங்களராஜா, இது தொடர்பில் கருத்துரைக்கையில், தமிழர்களின் பிரச்சினையில் ஆழமான நடவடிக்கைகளே தீர்வுக்கு உதவும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வணக்கத்துக்குரிய தலங்கள் உள்ள பிரதேசங்களை விடுவிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னேற்றமாக செய்திருக்கிறது.

எனினும் சிறிய இடங்களையே அரசாங்கம் விடுவித்திருக்கிறது.


பாரிய பிரதேசங்கள் விடுவிக்கப்படவில்லை என்று அருட்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு தீவிரவாதக் குழுக்களால் அழுத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

என்றாலும், அரசாங்கம் தமிழ் மக்கள் தொடர்பில் நல்லெண்ணத்தை காட்ட முயல வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

தமிழ் அரசியல் கட்சிகளும் அரசியலை முன்னிலைப்படுத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

# இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் தென்னாபிரிக்க நிதியமைச்சரானார்



(ஜோகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்க நாட்டின் நிதியமைச்சராக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த, பிரவீன் கோர்தன், 66, நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஒரு வாரத்தில், நியமிக்கப்படும் இரண்டாவது நிதி அமைச்சர் இவர்.நிதி நெருக்கடி, பணவீக்கம், வேலையில்லா திண்டாட்டம் போன்றவற்றால், தென்னாபிரிக்கா கடும் பொருளாதார மந்த நிலையை சந்தித்து வருகிறது. இதனால், ஜனாதிபதி ஜாக்கப் ஜுமா, கடந்த வாரத்தில், நிதியமைச்சராக இருந்த, நஹ்லன்லா நீனியை நீக்கி விட்டு, டேவிட் ரூயன் என்பவரை நியமித்தார். ஆனால், நிதித் துறையில் அனுபவமற்ற ரூயனின் நியமனத்திற்கு, பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அத்துடன், தெனனாபிரிக்காவின், "ரான்ட்" கரன்சி மதிப்பும் மளமளவென சரிந்தது. மேலும், இந்நாட்டின் கடன் தகுதி மதிப்பையும், தர நிர்ணய நிறுவனங்கள் வெகுவாக குறைத்து விட்டன. நிலைமை மேலும் மோசமாவதை தடுக்க, ஜனாதிபதி ஜாக்கப் ஜுமா, உடனடியாக ரூயனை நீக்கி விட்டு, பிரவின் கோர்தனை நிதியமைச்சராக நியமித்துள்ளார்.2009 - 14 வரை, தென்னாபிரிக்காவின நிதியமைச்சராக, பிரவின் கோர்தன் ஏற்கனவே ப்தவி வகித்துள்ளார். இவரது நியமனத்தைத் தொடர்ந்து, ரான்ட் கரன்சி மதிப்பு, 5 சதவீதம் உயர்ந்துள்ளது என ஜாக்கப் ஜுமா தெரிவித்தார். (இ)

# டெங்கு அபாயம்

கடந்த சிலவாரங்களாக மழை பெய்து ஓய்ந்ததையடுத்து கண்டி, தெல்தெனிய பிரதேசங்களில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக தெல்தெனிய பொது சுகாதார அதிகாரிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இரு டெங்கு நோயாளர்கள் இப்பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வலுவலக சுகாதார அதிகாரிகள் தெரிவித்ததுடன் இது தொடர்பாக இப்பிரதேச மக்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க பொது சுகாதார அதிகாரிகள் வீடுகள தோறும் வந்து சுற்றாடல்களை ப்ரிசோதனை செய்து வருகின்றனர்.டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் வீட்டுச் சுற்றாடலை அசுத்தமாக வைத்திருந்த 13 வீடுகள் உரிமையாளர்களைக் கண்டுபிடித்த சுகாதார அதிகாரிகள் அவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை பிரசுரங்களை வழங்கியுள்ளனர்.(இ)

# விநாயகர் சஷ்டியில் விநாயகரைப்பற்றி அறிவோம்

எக்காரியத்தை தொடங்கி னாலும் முதலில் மனதில் தோன்றுபவர் விநாயகரே ஆவார். விநாயகரது விரதங்களில் மிகவும் முக்கியம் வாய்ந்தது பிள்ளையார் கதை நோன்பு. இன்று அந்த நோன்பின் பூர்த்தி நாளான விநாயகர் சஷ்டி தினமாகும். இன்றைய தினம் விநாயகர் எங்கெல்லாம் வீற்றிருந்து மக்களுக்கு அருள் புரிகின்றார் என்பதை அறிவோமா?

கிராமப்புறங்களில் குளங்களுக்கு அருகிலும் அரச மரத்தடியிலும் தான் அநேகமாக விநாயகர் வீற்றிருப்பார். சாவகச்சேரி, மிருசுவில், மாவிட்டபுரம், தீவகங்களில் நோக்குவோமானால் ஆங்காங்கே குளம், அரச மரநிழலில் விநாயகர் வீற்றிருப்பார். விநாயகர் வெளிநாடுகள் பலவற்றிலும் வீற்றிருந்து வினைகளை தீர்த்து வருகிறார். விநாயகரை நம் முன்னோர் சென்ற இடம் எல்லாம் சென்று உலகம் முழுவதும் பரவ செய்துள்ளனர். இந்து சமய கடவுள்களில் முதல் இடம்பெற்றுள்ளார். எல்லோரும் விநாயகரே வழிபடத் தொடங்கியதால் பொதுத் தெய்வமாக உயர்ந்துள்ளார். வெளிநாடு சென்ற கணபதி தென் கிழக்கு ஆசியாவில் வைதீகக் கடவுளாகவும் தூர கிழக்கு நாடுகளில் பௌத்த சமயக் கடவுளாகவும் கருதி வழிபட்டுள்ளனர். காலமும் தூரமும் கடந்து வழிபடப்பட்ட இந்துக் கடவுளான விநாயகர் உலக நாடுகள் பலவற்றிலும் பரவியுள்ளார்.

இலங்கையில் "பொலனறுவை" யில் உள்ள சிவன் கோயில் முதலாம் ராஜ ராஜ சோழனால் கட்டப்பட்டது. வாதனவன் மாதேவிச்சரம் என்று பெயர். தொல்லியல் சின்னமான இது இரண்டாம் எண் தேவாலயம் எனப்படும். ஆலயத்தில் விநாயகர் சிலை இடம்பெற்றுள்ளது. கதிர்காம முருகன் கோயிலில் விநாயகரின் வெண்கலச் சிலை ஒன்றுள்ளது.



### ஆப்கானிஸ்தான்

இங்கு சில ஆண்டுகளுக்கு "கார்டெஸ்" எனும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டு காபூலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இந்துக்களால் வழிபடப்படுகிறது.

### நேபாளம்

இங்கு விநாயகர் இந்துக்களாலும், பௌத்தர்களாலும் வழிபடப்படுகின்றார். பௌத்தர்கள் கணபதியை "சித்தி தாதா" என்று வழிபடுகின்றனர். ஹேரம்ப விநாயகர் சிலை ஒன்று "பட்காவன்" என்ற இடத்தில் கிடைத்துள்ளது.

### திபெத்

திபெத்தின் மேற்கு பகுதி வாழ் மக்கள் விநாயகரை பேய், பிசாசுகளிடமிருந்து மக்களை காக்கும் கடவுளாக வழிபடுகின்றனர். கோடானில் கணேசன் பிரசித்தி பெற்றிருக்கின்றார். புராணங்களில் பிரம்ம தேசன் என்று குறிப்பிடப்படும். பர்மாவில் உள்ள கீழை பர்மாவில் ஏராளமான பிள்ளையார் சிலைகள் கிடைத்துள்ளன. ரங்கூன் மியூசியத்தில் இரண்டு அற்புதமான கணேச விக்கிர கங்கள் உள்ளன.

### சீனா

இங்குள்ள "துன்ஹுவாங்" என்ற இடத்தில் ஏராளமான விநாயகர் சிலைகள் கிடைத்துள்ளன. அதேபோன்று "குங்சியான்" இடத்தில் உள்ள குலகக் கோயிலிலும் விநாயகர் சிற்பம் உள்ளது. முதல் குகையில் பல இந்துத் தெய்வங்களோடு விநாயகரும் செதுக்கப்பட்டுள்ளார்.

### ஜப்பான்

இங்கு கஜேந்திரன் என்ற பெயரில் விநாயகரை வழிபடுகின்றனர். நார்த்தானில் கண்டெடுக்கப்பட்டுள்ள 500 தெய்வங்களில் "நிருத்திய கணபதி" உள்ளார்.

### சம்பா

போ-நகரில் விநாயகருக்கு என்று தனிக்கோயில்கள் இருந்தன. மைசோன் என்ற இடத்தில் உள்ள சிவன் கோயிலில் விநாயகரின் சிற்பம் ஒன்று கிடைத்துள்ளது.

### கம்போடியா

கம்போலும் என்று அழைக்கப்பட்ட கம்போடியா, இந்தியாவுடன் நீண்ட காலமாக பண்பாட்டு தொடர்பு கொண்டது. ஏராளமான விநாயகர் விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. "ஆங்கோர் பரே" கல்வெட்டுக்கள் மூலம் கோயில்களில் வழிபடப்பட்ட மூர்த்திகளில் விநாயகர் இருந்துள்ளார் என்பது தெரியவருகிறது.

### ஜாவா மற்றும் பாலி

சைவசமயம் இந்த நாட்டில் பிரபலமாக பரவியிருந்தது. சிவன் கோயில்கள் அனைத்திலுமே விநாயகருக்கு தனித் தனி சந்நிதிகள் உள்ளன. வெண்கலத்தினாலான விநாயகர் விக்கிரகம் -ஜாவாவில் கண்டெடுக்கப்பட்டு தற்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது. டியாங் பீட பூமியில் கண்டெடுக்கப்பட்ட விநாயகரின் சிலை ஒன்று ஜாவாவின் பழைமையான விநாயகர் விக்கிரகம் என்று கருதப்படுகிறது. சண்டி சிங்கஸோரி என்ற இடத்தில் நின்றகோலத்தில் உள்ள விநாயகர் கபால அணிகலன்கள் அணிந்துள்ளார்.

இது போன்று இந்தியாவில் திருவண்ணாமலையில் அல்லல் தீர்க்கும் விநாயகராகவும் விருதாச்சலத்தில் ஆழத்துப் பிள்ளையாராகவும் திருக்கடவூரில் கள்ள வாரணப் பிள்ளையாரகவும் மதுரையில் சித்தி விநாயகராகவும் முக்குருணிப் பிள்ளையாராகவும் திருச்சியில் மாணிக்க விநாயகராகவும் திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாராகவும் யாழ். குடாநாட்டில் நாயன்மார் கட்டில் அரசகேசரிப்பிள்ளையாராகவும் வெயிலுகந்த விநாயகராகவும் நல்லூரில் கைலாச பிள்ளையாரா கவும் வில்லூன்றியில் வீரகத்தி விநாயகராகவும் நீராவியடியில் வீரகத்தி விநாயகராகவும் இணுவிலில் பரராஜ சேகரப் பிள்ளையாராகவும் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்.

இதுபோன்று நமது நாடு முழுவதிலும் பல நாடுகளிலும் பரவி காட்சியளித்து வரும் விநாயகரை நாமும் தொடர்ந்து வழிபட்டு மேன்மை பெறுவோம்.


சிவஸ்ரீ வி.பிரணவன் ஐயர்,
யாழ்.வண வடகிழக்கு
கலட்டி,
ஸ்ரீவீரகத்தி விநாயகர்
தேவஸ்தானம்

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சுரத்திற்குப் பயன்படும் மூலிகைகள் (காய்ச்சல்)









சுரமானது 64 வகையாக வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு பல சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன. அதாவது வேது பிடித்தல், உடலை வியர்க்கச் செய்தல் போன்ற முறைகளும், உள் மருந்தாக பல வகையான மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன.

சுரத்திற்கு (காய்ச்சல்) காரணமாக சித்த மருத்துவத்தில் கூறப்படுவது நாம் உள்ளெடுக்கும் உணவு, செய்கையினால் இரப்பையில் உள்ள அக்கினி மந்தப்பட்டு அக்கினிமாந்தம்/ஆமம் உண்டாகி சுரோதஸ்களை (channels) ஐ அடைப்பதனால் உடலின் (metabolism) அதிகரித்து எமது உடல்வெப்ப நிலை அதிகரிக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதற்குரிய சிகிச்சை முறைகளும் அந்தக் காரணத்திற்கு ஏற்பவும் பல விதமான மருத்துவச் செய்கைகளை உள்ளடக்கிய மூலிகைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

அந்த வகையில் சுரத்திற்கு சுரமகற்றி, முறை வெப்பமகற்றி போன்ற மருத்துவச் செய்கைகளை தவிர வியர்வை உண்டாக்கி சிறுநீர் பெருக்கி, குளிர்ச்சியுண்டாக்கி போன்ற மருத்துவச் செய்கையுடைய மூலிகைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக உடல்வெப்ப நிலை சாதாரண வெப்பநிலையை விட அதிகரிக்கும் போது சிறுநீரை அதிகளவு வெளியேற்றி, வியர்வையை அதிகளவு வெளியேற்றியோ/ வேது பிடிப்பதன் மூலம் வியர்வை அதிகளவு உண்டாக்கி அதிகரித்த உடல் வெப்ப நிலை சமநிலைப்படுத்தப்படுகிறது. இதே நேரம் சுரமகற்றி செய்கையுடைய மூலிகைகளும் பயன் படுத்தப்படுகின்றன. ஆகையால் இன்றைய கால கட்டத்தில் பல்வேறு காரணத்தால் சுரங்கள் ஏற்பட்டாலும் அதிகரித்த வெப்ப நிலையை குறைப்பதற்கு ஒவ்வொரு ஆசயத்திற்கு ஏற்படும் காய்ச்சலுக்கு அமைய சிகிச்சை முறைகள் உள்வாங்கப்படுகின்றன.

ஆகையால் சுரம் ஏற்படும் போது பின்வரும் மூலிகைகளை கை மருந்தாகவோ / வீட்டில் சில மருந்து முறைகளை மேற்கொண்டு அதிகரித்த உடல் வெப்பநிலையை குறைக்க சித்த மருத்துவத்தில் வழிகள் கூறப்பட்டுள்ளன.

வைரஸ் காய்ச்சலிற்கு என்று சொல்லப்படுகின்ற அதாவது அவற்றைக் கட்டுப்படுத்தும் மூலிகைகளும் கூறப்பட்டுள்ளன.

பொதுவாக நாம் மூலிகைகளை பயன்படுத்தி சாதாரணமாக இந்தக் காய்ச்சலை எவ்வாறு எமது கைமருந்துகளை பயன்படுத்தி அதிகரித்த சுரத்தை கட்டுப்படுத்தலாம் என்பது பற்றி கீழ் நோக்குவோம்.

**கொத்த மல்லி** - இதற்கு சுரத்தை குறைத்து, வியர்வையை அதிகரிக்கும் செய்கையுண்டு.

**வேம்பு** - 100 வருட வேப்ப மரத்தின் பட்டைக்கு சுரத்தை கட்டுப்படுத்தும் தன்மை அதிகம் உண்டு.

**நிலவேம்பு** - இதில் 2 வகையுண்டு. நாட்டு நிலவேம்பு, காட்டு நிலவேம்பு. இதன் 2/3 இலையை எடுத்து கழுவி வாயில் போட்டுச் சாப்பிட சுரம் தனியும்.

### சாதாரண காய்ச்சல்

அரைப்பிடியளவு துளசி இலைகளை போட்டு ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைத்து வடிகட்டி எடுத்து கசாயத்தை ஒரு டம்ளர் காச்சிய பாலில் கலந்து காலை, மாலைபருககாய்ச்சல்தணியும்.

வல்லாரை தூதுவளை ஒவ்வொன்றும் ஒரு கரண்டி சாறு எடுத்து அதில் காய்ச்சிய பசும்பால் 10 துளி விட்டு காலை, மாலை பருக காய்ச்சல் குறையும்.

துளசிச் சாறு 50 ml எடுத்து 1/2 கரண்டி தூள் உப்பைக் கரைத்து சிறிது சூடாக்கி 3 பங்காக்கி 3 வேளை பருகுதல்.

### குளிர் காய்ச்சல் தணிய

கோரைக்கிழங்கை உலர்த்தி 50g தூளை கசாயம் செய்து வடிகட்டி காலை, மாலை தேனில் குழப்பி 1 கரண்டி வீதம் 3 நாட்கள் பருக குணமாகும்.

### சகல விதமான காய்ச்சலுக்கும் :-

துளசி, வில்வம், வேம்பு இலைகள், மிளகு, சந்தனம், சித்தரத்தை, கடுக்காய் ஒவ்வொன்றிலும் 5g எடுத்து எல்லாவற்றையும் அம்மியில் கொஞ்சம் கொஞ்சமாக அரைத்து பட்டாணியளவு உருண்டையாக உருட்டி 5 நாட்கள் வெயிலில் காயவைத்து பத்திரப்படுத்துக. எந்த காய்ச்சலானாலும் பெரியவர்களுக்கு வேளைக்கு 2 மாத்திரை, சிறுவர்களுக்கு ஒரு மாத்திரை காலை, மாலை 2 நாட்கள் கொடுக்க குணமாகும்.

புதினாக்கீரை ஒரு கைப்பிடிளயவு, அறுகம்புல் கைபிடியளவு அம்மியில் அரைத்து சீரகம், மிளகு ஒரு ஸ்பூனும், சுக்கு 5 கிராம் இடித்து சட்டியில் போட்டு 2 டம்ளர் தண்ணீர் விட்டு ஒரு டம்ளர் அளவு சுண்டக் காய்ச்சி காலை மாலை 1/2 டம்ளர் குடித்தல்.

காய்ச்சல் அதிகமாக இருந்தால் நொச்சி இலைகளை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து நீராவி பிடிக்க காய்ச்சல் வேகம் தணியும்.

கரும்துளசி இலைகள் 9, சிறிய துண்டு சுக்கும் தட்டி ஒரு சட்டியில் போட்டு 1 டம்ளர் தண்ணீர் விட்டு நன்றாக கொதிக்க வைத்து இறக்கி பருக வேண்டும்.

குழந்தைகளிற்கு ஏற்படும் காய்ச்சலுக்கு சுட்ட வசம்புத்தூளை அரைத் தேக்கரண்டியளவு தேனில் குழைத்துக்கொடுத்தால் குணமாகும்.

### சுரத்திற்கு குடிநீர் :-

நிலவேம்பு, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், சந்தனத் தூள், பேய்ப்புடோல், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, பற்படாகம்.

இவற்றை சம அளவு எடுத்து 16 மடங்கு நீர் விட்டு 1/8 ஆக சுண்டக் காய்ச்சி வடித்து எடுத்து காலை, மாலை அருந்தல்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## சவுதியில் புதிய திருப்பம்

# உள்ளூராட்சி தேர்தலில் 20 பெண்கள் வெற்றி!

**அரபு நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவில் மன்னராட்சி நடந்து வருகிறது. பொதுவாக அங்கு பெணகள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் மறைந்த மன்னர் அப்துல்லா எடுத்த நடவடிக்கையின் பிரகாரம் அங்கு முதல் முறையாக பெண்களும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடலாம் என்று அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் சவுதி அரேபியாவில் நடந்த உள்ளூராட்சி தேர்தலில் நாடு முழுவதும் பரவலாக 20 பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர்.**

சவுதி அரேபியாவில் தேர்தல் என்பதே அபூர்வம் ஆகும். இதற்கு முனபு 2005 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் அங்கு உள்ளூராட்சி தேரதல் நடந்துள்ளது. இதிலும் ஆண்கள் மட்டுமே போட்டியிட்டனர்.

இந்த நிலையில் அங்கு கடந்த சனிக்கிழமை உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட்டது. இதில் நாடு முழுவதும் உள்ள 2,100 கவுன்சிலர் பதவிகளுக்கு மொத்தம் 7 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 979 பேர் பெண்கள் ஆவர். தேர்தலில் ஆண் வாக்காளர்களை சந்தித்து வாக்கு சேகரிக்க முடியாத நிலையில் பெண் வேட்பாளர்கள் களம் கண்டனர்.

**வாக்குறுதிகள்**

பணிக்கு செல்லும் தாய்மார்களின் குழந்தைகளை பராமரிப்பு மையங்களில் கூடுதல் நேரம் கவனித்துக்கொள்வது, இளம் பெணகளுக்கு விளையாட்டு வசதிகளுடன் சமுதாய மையங்களை உருவாக்குவது, கலாசார நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவது, சாலை வசதிகளை மேம்படுத்துவது, நகரங்களை குப்பையின்றி சுத்தமாக வைத்துக்கொள்வது என்னும் தேர்தல் வாக்குறுதிகளை முன்வைத்து கவுன்சிலர் தேர்தலை பெண் வேட்பாளர்கள் சந்தித்தனர்.

**20 பெண்கள் வெற்றி**

இந்த நிலையில் தேர்தலில் பதிவான வாக்குகள் கடந்த 2 நாட்களாக எண்ணி முடிவுகள் அறிவிக்கப்பட்டு வந்தன. இதில் சிறிய கிராமம், பெரிய நகரங்கள் என நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்தும் பரவலாக 20 பெண்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள்.

இது, தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மொத்த கவுன்சிலர்களில் சுமார் 1 சதவீதம் ஆகும். மன்னர் ஒப்புதலுடன் மேலும் 1050 கவுன்சிலர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ரியாத்தில் 4 பேர் தேர்வு**

இது குறித்து சவுதி அரேபிய தேர்தல் ஆணையத்தின் ஊடக கவுன்சில் தலைவர் ஹமத் அல்-ஓமர் நிருபர்களிடம் கூறுகையில், “தலைநகர் ரியாத்தில் அதிக பட்சமாக 4 பெண்கள் கவுன்சிலர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிழக்கு மாகாணத்தில் 2 பெண்கள் வெற்றி பெற்றனர்” என்று தெரிவித்தார்.

இதேபோல் சவுதி அரேபியாவின் 2 ஆவது மிகப்பெரிய தலைநகரான ஜெட்டாவில் 2 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதினா, குவாசிம், தபுக், ஹைல், ஜிஷா, ஆசிர், அன்சா ஆகிய பகுதிகளில் இருந்தும் 10இற்கும் மேற்பட்ட பெண்கள் வெற்றி பெற்று கவுன்சிலர் ஆகியுள்ளனர். (இ)

## துருக்மெனிஸ்தான் எண்ணெய் விநியோகம் ஆப்கான், இந்தியா, பாகிஸ்தான் ஒப்பந்தம்




தெற்காசியாவில் எண்ணெய்த் தேவைக்கான விநியோகத்தை இலகுவாக்கும் மிகமுக்கியமான எண்ணெய்ப் பாதை சம்பந்தமான ஒப்பந்தத்தில், துருக்மெனிஸ்தானுடன் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா ஆகியன ஒப்பந்தமிட்டுள்ளன.

இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நான்கு நாடுகளினதும் ஆங்கில முதல் எழுத்துக்களைக் கொண்டு, டி.ஏ.பி.ஐ குழாய்வரிசை என அழைக்கப்படும் இப்பாதை, 1,814 கிலோ மீற்றர் நீளமானதாகும். சுமார் 10 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் செலவில் அமைக்கப்படவுள்ள இப்பாதை, 2019ஆம் ஆண்டளவில் செயற்பட ஆரம்பிக்குமென அறிவிக்கப்படுகிறது.

தெற்காசியாவில் அதிகரித்துவரும் எண்ணெய்த் தேவையைத் திருப்தி செய்யும்முகமாக இப்பாதை அமையுமெனவும், இப்பிராந்தியத்தை ஒற்றுமைப்படுத்த உதவுமெனவும், இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி அஷ்ரப் கானி, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், இந்திய துணை ஜனாதிபதி மொஹமட் ஹமிட் அன்சாரி, துருக்மெனிஸ்தான் ஜனாதிபதி குர்பங்குலி பேர்டிமுகமேடொவ் ஆகியோர் நம்பிக்கை வெளியிட்டனர். எனினும், ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு நிலைமை காரணமாக, இப்பாதை செல்லும் இடங்களில் பாதுகாப்பின் நிலை கேள்விக்குரியதாக உள்ளதாகத் தெரிவிக்கும் விமர்சகர்கள், இத்திட்டத்துக்கு யார் நிதியளிப்பது என்பது தொடர்பிலும் குழப்ப நிலை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். (இ)

# சவுதியில் கின்னஸ் சாதனை புரிந்த பெண்கள்





(ரியாத்)

சவுதி அரேபியாவில் இளம்பெண்கள் ஒன்றிணைந்து மார்பக புற்றுநோய் விழிப்புணர்வை ஊக்குவிக்கும் பொருட்டு கின்னஸ் சாதனை நிகழ்வை நடத்தியுள்ளனர்.

சவுதி அரேபியா அரசியல் வரலாற்றில் முதன்முறையாக அங்குள்ள பெண்கள் அனைவரும் நடைபெற்ற தேர்தலில் வாக்களித்த கடந்த 12- ஆம் திகதி, இந்த கின்னஸ் சாதனையும் படைத்துள்ளனர்.

வாக்குச்சாவடிகளில் வாக்களித்த நூற்றுக்கணக்கான இளம் பெண்கள் ரியாத் மாநகரில் அமைந்துள்ள நவுரா பல்கலைக்கழகத்தின் உதைபந்து அரங்கில் குவிந்துள்ளனர்.

அங்கு இளஞ்சிவப்பு நிறத்தினாலான சால்வையை தலையில் அணிந்துகொண்டு ரிப்பன் வடிவில் அமர்ந்துள்ளனர்.

இந்த சாதனை நிகழ்வில் ஒட்டுமொத்தமாக 8,264 சவுதி அரேபிய இளம் பெண்கள் பங்கேற்றுள்ளதாக உலக கின்னஸ் சாதனை அமைப்பு தெரிவித்துள்ளது.

தூய்மையான ஆரோக்கியமே வருங்காலத்திற்கு மிகவும் முக்கியமானது என இந்த நிகழ்விற்கு ஊக்கமளித்து ஆதரவும் தெரிவித்த இளவரசி Reema Bint Bandar தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் 6,847 பெண்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய ரிப்பன் வடிவமே இதுவரை முறியடிக்கபடாத கின்னஸ் உலக சாதனையாக இருந்து வந்தது.

அந்த சாதனையை சவுதி இளம்பெண்கள் ஒன்றிணைந்து முறியடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## பாரீஸில் ஆசிரியரின் மீது ஐ.எஸ்.ஆதரவாளர் தாக்கு

பாரீஸில் ஆசிரியர் ஒருவரை ஐ.எஸ்.ஆதரவாளர் தாக்கிவிட்டு தப்பியதாக எழுந்த புகாரில், திடீர் திருப்பமாக நடந்த சம்பவத்தை அதிகாரிகள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

பாரீஸின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள Jean Perrin d'Aubervilliers பாடசாலையில் பணிபுரியும் 45 வயதான ஆசிரியர் ஒருவரை, ஐ.எஸ்.ஆதரவாளர் தாக்கிவிட்டு தப்பியதாக புகார் எழுந்துள்ளது.

பாடசாலையின் வளாகத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றதால் அரசு தீவிர கவனமெடுத்து வழக்கு விசாரணையை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் ஆசிரியர் தாக்கப்பட்ட வழக்கில் திடீர் திருப்பமாக பிரான்ஸ் சட்டத்தரணிகள் சம்பவத்தின் உண்மை நிலையை வெளியிட்டு பொதுமக்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆசிரியரை ஐ.எஸ்.ஆதரவாளர் தாக்கியதாக கூறப்படுவது இட்டுக்கட்டிய கதை என அம்பலப்படுத்தியுள்ள சட்டத்தரணிகள்,

ஆசிரியரே தம்மை காயப்படுத்திக் கொண்டு ஐ.எஸ்.ஆதரவாளர்கள் தாக்கியதாக நாடகமாடியதாகவும் வெளிப்படுத்தியுள்ளனர்.

முன்னதாக, ஐ.எஸ்.ஆதரவாளர் தம்மை கழுத்து மற்றும் வயிற்றுப்பகுதியில் கத்தரிக்கோலால் தாக்கியதாக ஆசிரியர் முறையிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சுமார் 50 அடி உயரமான

# பாலத்திலிருந்து பேருந்து கவிழ்ந்து விபத்து பாதுகாப்புப்படைப் பொலிஸார் 41 பேர் பலி!

(ஏர்ஸ்)

**பாதுகாப்பு படை பொலிஸாருடன் சென்ற பேருந்து ஒன்று திடீரென 50 அடி பாலத்திலிருந்து கவிழ்ந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 41 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகியுள்ளனர்.**




ஆர்ஜென்டீனாவின் சால்டா நகருக்கருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த வாகன விபத்தில் 41 பொலிஸார் பலியாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

60 எல்லை பாதுகாப்பு படை பொலிஸாருடன் சென்ற பேருந்தே கட்டுப்பாட்டை இழந்து 50 அடி உயர பாலத்திலிருந்து கவிழ்ந்து விழுந்துள்ளது. சம்பவ இடத்தில் மீட்புப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

மோசமான வீதியில் பேருந்து பயணித்ததே இந்த விபத்துக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள ஆர்ஜென்டீனா ஜனாதிபதி மவுரினா மக்ரி, நாம் நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதன் மூலமாக எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளை தவிர்ப்போம் என்று கூறியுள்ளார். (இ)

## தி. மு. கவில் இணைந்த சகோதரர்கள் மீது எனக்கு எந்தக்கோபமும் இல்லை-வைகோ



தி.மு.கவில் இணைந்தவர்கள் மீது தனக்கு எந்தக் கோபமும் இல்லையென ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேரறிஞர் அண்ணாவின் இயக்கத்தில் 1964 இல் கல்லூரி மாணவனாக இணைந்து, தி.மு.கவை என் உயிரினும் மேலாக நெஞ்சில் ஏந்தினேன். 1993 ஒக்டோபர் 3 ஆம் திகதி கொலைப்பழி சுமத்தப்பட்டபோது என் தலையில் பேரிடி விழுந்தது போல் துடித்தேன். என் உள்ளம் நொறுங்கியது.

தி.மு.கவின் ஐந்து தொண்டர்கள் எனக்கு ஏற்பட்ட நிலைமைக்காக நெருப்புக்குத் தங்கள் உயிர்களைத் தந்தனர். இந்தத் துய தொண்டர்களின் தியாக நெருப்பில் உதித்ததுதான் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.


22 ஆண்டுகள் கடந்து விட்டன. அணு அளவும் தன்னலம் இன்றித் தமிழர் நலனுக்காகவும் தாய்த் தமிழகத்தின் உயர்வுக்காகவும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளைக் காப்பதற்காகவும், நானும் எனது தோழர்களும் போராடி வந்திருக்கின்றோம்.

1996 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.கவின் தலைமை எங்கள் இயக்கத்தில் இருந்தவர்களை இச்சகம் பேசி அழைத்து, ம.தி.மு.க.வுக்கு மூடு விழா என்று செய்தி வெளியிட்டது.

2006 ஆம் ஆண்டில், எங்கள் இயக்கத்தின் உயர் பொறுப்புகளில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரையும், அமைச்சர் பதவி எனும் ஆசை வார்த்தை கூறி தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு மறுமலர்ச்சி தி.மு.கழகத்தையே நிர்மூலம் செய்து விட பொதுக்குழு உறுப்பினர்களுக்கு பெரும் பணம் தருவதாகக் கூறி வளைக்க முயன்று, போட்டிப் பொதுக்குழுவுக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தது. அந்த முயற்சியிலும் தி.மு.க., பரிதாபகரமாகத் தோற்றுப்போனது என அவர் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார். (இ)

## டில்லி முதல்வர் அலுவலகத்தில் சி.பி.ஐ. சோதனை நடவடிக்கை

### மோடி மீது கெஜ்ரிவால் குற்றச்சாட்டு



டில்லியில் உள்ள முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலின் அலுவலகத்துக்குள் நேற்றுக் காலை அதிரடியாக நுழைந்த சி.பி.ஐ. அதிகாரிகள் அங்கு சோதனையிட்டுள்ளனர். இதேவேளை அரசியல் ரீதியாக என்னை எதிர்கொள்ள முடியாத பிரதமர் மோடி கோழைத்தனமாக சி.பி.ஐ.யை என்மீது ஏவி எனது அலுவலகத்தில் சோதனை நடத்தும்படி தூண்டி விடுகிறார் என அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதமர் மோடியை கோழை என்றும் மனநோயாளி என்றும் தனது டுவிட்டர் பக்கத்தில் அரவிந்த் கெஜ்ரிவால் விமர்சித்துவரும் நிலையில் முதலமைச்சர் தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த சோதனை நடைபெறவில்லை. அவரது அலுவலகத்தில் உள்ள முக்கிய அதிகாரி ரஜீந்திர குமார் மீதான புகாரின் அடிப்படையில் தான் அங்கு சோதனை நடத்தப்பட்டதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## அ.தி.மு.க. எம்பிக்கள் எம்.எஸ். ஏக்கள் ஒரு மாதச்சம்பளத்தை வழங்குவார்கள்

### முதலமைச்சர் ஜெயா அறிவிப்பு

அ.தி.மு.க. எம்.பிக்கள் எம்.எல்.ஏக்கள் தங்கள் ஒரு மாதச் சம்பளத்தை வெள்ள நிவாரண நிதியாக வழங்குவார்கள் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர், முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிவாரணப்பணிகளில் எல்லோரும் பங்கேற்கும் வகையில் சமூகத்தின் அனைத்து தரப்பினரும் தங்களால் இயன்ற பொருள் உதவியையும், உடல் உழைப்பையும் வழங்கி வருகின்றனர் என்ற செய்தி பல இடங்களில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

நிவாரண பணிகளில் தன்னலமின்றி ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் இந்த பணியில் பங்குபற்றி ஆற்றிவரும் கடமைகளில் ஒன்றாக கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களது ஒரு மாத சம்பளத்தை நிவாரண நிதியாக வழங்குவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என ஜெயலலிதா அறிவித்துள்ளார். (இ)


## 2022ம் ஆண்டுஇறுதிக்குள் அனைவருக்கும் சொந்த வீடு

### கேரள சுற்றுப்பயணத்தில் மோடி தகவல்

2022 ஆம் ஆண்டில் நாடு 75 ஆவது சுதந்திர தின விழாவை கொண்டாடும் போது, அனைவருக்கும் சொந்த வீடு இருப்பதே தமது கனவு என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் திருச்சூரில் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார். 2022 ஆம் ஆண்டில் நாடு தமது 75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது, ஒவ்வொரு குடிமகனும் சொந்த வீடு உடையவர்களாக சுதந்திர தின கொண்டாட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்பதே தமது கனவு என்று மோடி தெரிவித்தார். கேரளாவில் பா.ஜ.க. மூன்றாவது அரசியல் சத்தியம் உருவெடுத்துள்ளதாக மோடி தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு கேரளாவில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் மற்றும் மாக்சிஸ்ட் கட்சிகள் தலைமையிலான கூட்டணிகளுக்கு மாற்றாக பா.ஜ.க. உருவாகியுள்ளதாக அவர் கூறியுள்ளார். கேரளாவை ஆட்சி செய்யும் இரு கூட்டணியும் மக்களை ஏமாற்றி வருவதாக மோடி குற்றம் சாட்டியுள்ளார். ஒரு கூட்டணியை மக்கள ஆட்சியில் அமர்த்துகிறார்கள், பின்னர் ஐந்து ஆண்டுகளில் அந்த கூட்டணி மீது மக்கள் கோபம் அடைந்து ஆட்சியை மாற்றுவதாக கூறிய அவர், இந்த சூழற்சியானது தொடர்ந்து ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டிக் கொண்டு கொள்ளையடிப்பதாக மோடி தெரிவித்தார்.



பிரதமராக பதவி ஏற்ற பின்பு, மோடி கேரளா சென்றிருப்பது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# சிறுவர் அரங்கம்

1309

# விறகு வெட்டியும் ராஜாவும்

ஒரு ராஜா தன்னோட மந்திரியை கூப்பிட்டு "நீ அரண்மனையை பார்த்துக்க. நான் போய் நாட்டை சுத்தி பார்த்துட்டு வர்றேன்"னுட்டு குதிரை மேல ஏறிப் போனாரு. அவரு போன பாதையில யானைபிடிக்கிறவங்க யானையை பிடிக்க பெரிய குழியை வெட்டி அதுக்கு மேல இலை தழையைப் போட்டு பரப்பி யிருந்தாங்க! இது நம்ம ராஜாவுக்குத் தெரியாது. கம்பீரமா குதிரை மேல பவனி வந்த ராசா அந்த குழியைக் கவனிக்காம "தொபுக்" கடீர்னு அந்த குழியில விழுந்தாரு.

"அய்யோ என்னை யாராவது காப்பாத்துங்களேன்! தூக்கி விடுங்களேன்! ன்னு கத்தினாரு ராஜா. யாரும் கண்டுக்கவே இல்லை! அது அடர்ந்த காடாச்சே! யாரும் உதவிக்கு வரலை. அப்போ அந்த பக்கமா ஒரு விறகு வெட்டி மரம் வெட்டிப் போக வந்துகிட்டு இருந்தாரு. அவர் காதுல ராஜா போட்ட கூப்பாடு விழுந்துச்சு. யாரோ என்ன மோன்னு கிட்ட போனா மகா ராஜா குழிக்குள்ள கிடக் காரு!

அய்யா! விறகு வெட்டியே! என்னை குழிக்குள்ள இருந்து தூக்கி காப்பாத்து! என் சொத்துல பாதியை தரேன்! என்று சொன்னாரு ராஜா. ராஜா சொன்ன வாக்கை தவற மாட்டாருன்னு விறகு வெட்டியும் சரி ராஜா காப்பாத்தறேன்னுட்டு களத்துல இறங்கினாரு.

அவரு கையில் ஒரு கயிறு இருந்துச்சு கயித்தோட முனையை ஒரு மரத்துல இறுக்கமா கட்டி மறுமுனையை பிடிச்சு குழிக்குள்ள இறங் கினாரு. ராஜாவை பத்திரமா தூக்கி வெளியே விட்டாரு. அந்த குழிக்குள்ள ஒரு பாம்பும் வழுந்து தவிச்சிகிட்டு இருந்துச்சு! அது வேற ராஜாவை பய முறுத்திகிட்டு இருந்துச்சு! ஆனா அது பாவம் வெளியேற முடியாம தவிச்சிகிட்டு இருந்துச்சு. விறகு வெட்டி அந்த பாம்பையும் பயப்படாம பிடிச்சி வெளியே விட்டாரு. அப்புறமா ராஜாவோட குதிரை அதையும் அந்த பள்ளத்திலே இருந்து சிரமப்பட்டு தூக்கி விட்டாரு. போதாக் குறைக்கு ஒரு குரங்கும்



குழிக்குள்ள கிடந்துச்சு! அதையும் வெளியே எடுத்து விட்டு விறகு வெட்டி மேல வந்தாரு. ரொம்ப களைச்சு போய் அவரு மேல ஏறி வந்தா ஒரு நன்றி கூட சொல்லாம மகாராஜா குதிரை மேல ஏறி பறந்து போயிட்டாரு.

விறகு வெட்டிக்கு ஒரே ஏமாற்றமா போயிருச்சு! நம்ம வேலையை விட்டு மெனக்கெட்டு காப்பாத்தினதுக்கு ஒரு நன்றி கூட சொல்லாம போயிட்டாரே! இவரு எப்படி பாதி சொத்தை தரப் போறாரு! நல்ல ராசாதான்! நம்ம விதி அவ்வளவுதான்னு சலிச்சிகிட்டு விறகு வெட்டி விறகை வெட்ட கிளம்பிட்டாரு.

விறகு வெட்டி வழக்கத்துக்கு மாறா ரொம்ப தாமதமா வீட்டுக்கு வந்ததும் வீட்டுக்காரம்மா கேட்டாங்க! ஏங்க இன்னிக்கு ரொம்ப லேட்டு? ரொம்ப களைப்பா வேற இருக்கீங்க? என்ன நடந்துச்சு!

விறகு வெட்டியும் ராஜா குழிக்குள்ள மாட்டிகிட்டதையும் காப்பாத்தி விட்டதையும் சொல்லி பாதி சொத்து தரேன்னு சொன்னாரு! ஆனா நன்றி கூட சொல்லாமா கிளம்பிட்டாரு அதுக்கப்புறம் விறகுவெட்டிகிட்டு வர்றதுக்கு தாமதமாயிடுச்சுன்னு சொல்லிட்டு சாப்பிட்டு தூங்கிட்டாரு.

மறுநாள் வழக்கம் போல விறகு வெட்டி காட்டுக்கு போய் விறகு வெட்ட கிளம்பினாரு. காட்டுக்குள்ள போனா இவரு மரம் வெட்டற எடத்துல விற குங்க வெட்டி போட்டு குவியலா இருக்கவே ஆச்சர்யப்பட்டு யாரு வெட்டி போட்டிருப்பாங்கன்னு அண்ணாந்து பார்த்தா இவரு காப்பாத்துன குரங்குதான் கிளைகளை ஒடிச்சு போட்டுகிட்டு இருந்துச்சாம்! அடடா ஒரு குரங்குக்கு இருக்கற நன்றி உணர்ச்சி கூட ராஜாவுக்கு இல்லாமபோச்சேன்னுவிறகுவெட்டி கண் கலங்கி நின்னாராம்.

அப்போ இவரு காப்பாத்துன பாம்பு அங்க வந்து நாகரத்தின கல்லை கக்கிச்சாம்! இது உனக்குத்தான் நீ எடுத்து வித்து பிழைச்சிக்கன்னு சொல்லுச்சாம். விறகு வெட்டி ரொம்பவும் மகிழ்ந்து விறகையும் நாகரத்தினக் கல்லையும் எடுத்துகிட்டு வீட்டுக்கு சீக்கிரமாவே வந்தாரு. மனைவி கிட்ட நடந்ததை சொல்லி சந்தோஷப்பட்டாராம். அப்புறம் நாகரத்தின கல்லை சந்தைக்கு கொண்டு போய் நல்ல விலைக்கு வித்துட்டு வீடு வாசல்னு கட்டி வசதியா ஆயிட்டாரு.

இது பக்கத்து வீட்டுக்காரனுக்கு பொறுக்கலை! ஒரு சாதாரண விறகு வெட்டி இப்படி வசதியா மாறிட்டானேன்னு வயித்தெரிச்சல் பட்டு ராஜாகிட்ட போய் விறகு வெட்டி பத்தி புகார் சொன்னானாம்.

ராஜாவும் விறகு வெட்டியை அரச சபைக்கு கூப்பிட்டு விசாரிச்சாராம்! "ஏம்பா விறகு வெட்டி! நீ எப்படி ஒரே நாள்ல பணக்காரனா மாறிட்டே! யாரு கிட்ட கொள்ளை அடிச்சேன்னு ராஜா கேட்கவும். விறகு வெட் டிக்கு கோபம் வந்துச்சாம்.

ஆனா பதட்டம் அடையாம தைரியத்தோட தன் நியாயத்தை சொன்னாராம். ராஜா! உங்களை குழியில் இருந்து தூக்கிவிட்டா பாதி சொத்து தரேன்னு சொன்னீங்க! ஆனா தூக்கிவிட்டதும் ஒரு நன்றி கூட சொல்லாம கிளம் பிட்டீங்க! அதே குழியில் இருந்த குரங்கையும் பாம்பையும் தூக்கிவிட்டேன். குரங்கு சுள்ளி ஒடைச்சு போட்டது. பாம்பு எனக்கு நாகரத்தின கல்லை கொடுத்துச்சு. நீங்க என்னன்னா சொன்ன வார்த்தையை மறந்ததும் இல்லாம என்னோட பக்கத்து வீட்டுக்காரன் பொறாமையினாலே சொன்ன கதையை நம்பி என்னை இங்க கொண்டு வந்து விசாரிக்கறீங்க! நீங்க பெரிய ராஜாவா இருக்கலாம்! ஆனா உங்கள விட இந்த விலங்குகளுக்கு பாசமும் அதிகம் நன்றியும் அதிகம்!அப்படின்னு சொன்னாரு விறகு வெட்டி.

ராஜாவுக்கு பளீர்னு அறைஞ்சாப்போல இருந்தது. தன் தவறை உணர்ந்தார். விறகு வெட்டியே என்னை மன்னித்து விடு! அப்படின்னு சொல்லி பக்கத்து வீட்டு காரனை கண்டித்து விட்டு விறகு வெட்டிக்கு தன் சொத்தில் பாதியை தந்து வழியனுப்பி வைச்சாரு.

விறகு வெட்டியும் அந்த பொருட்களை பெற்றுக் கொண்டு சந்தோஷமாக வாழ்ந்தான்!




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1431 - இங்கிலாந்தின் ஆறாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக பாரிசில் முடிசூடினான்.

1497 - வாஸ்கொடகாமா முன்னர் பர்தலோமியூ டயஸ் சென்றடைய முடியாத தென்னாபிரிக்காவின் அட்லாண்டிக் கரையோரத்தில் உள்ள நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.

1598 - கொரிய, ஜப்பானியக் கடற்படைகளுக்கிடையே இடம்பெற்ற சமரில் கொரியா வெற்றி பெற்றது.

1653 - சேர் ஒலிவர் குரொம்வெல் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து நாடுகள் அடங்கிய பொதுநலவாயத்தின் தலைவரானார்.

1707 - ஜப்பானின் ஃபூஜி மலை கடைசித் தடவையாக வெடித்தது.

1773 - அமெரிக்கப் புரட்சி: பாஸ்டன் தேநீர் கொண்டாட்டம் - அமெரிக்கர்கள் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியின் கப்பல்களில் ஏறி தேநீர் பெட்டிகளை பாஸ்டன் துறைமுகத்தில் எறிந்தனர்.

1835 - நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்ற பெருந்தீயில் 530 கட்டிடங்கள் சேதமடைந்தன.

1857 - இத்தாலியின் நேப்பில்சில் இடம்பெற்ற 6.9 நிலநடுக்கம் 11,000 பேரைக் கொன்றது.

1920 - சீனாவில் 8.6 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 200,000 பேர் கொல்லப்பட்டனர்.

1922 - போலந்து அரசுத்தலைவர் கேப்ரியல் நருடோவிச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1925 - இலங்கை வானொலியின் வானொலி சேவை கொழும்பில் ஆரம்பம்.

1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் சரவாக்கின் மிரி நகரைக் கைப்பற்றினர்.

1960 - ஐக்கிய அமெரிக்க விமானம் நியூ யோர்க்கை அண்மிக்கும் போது மோதியதில் 134 பேர் கொல்லப்பட்டனர்.

1971 - வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் சரணடைந்து போர் முடிவுக்கு வந்தது.

1971 - பாஹ்ரேன் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.

1991 - கசக்ஸ்தான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

### பிறப்புக்கள்

1770 - லுடுவிக் ஃவான் பேத்தோவன், ஜெர்மனிய மேற்கத்திய இசை இயற்றுநர் (இ. 1827)

1866 - வசிலி கண்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர் (இ. 1944)

1917 - ஆர்தர் சி. கிளார்க், ஆங்கில எழுத்தாளர்

1930 - லலிதா - திரைப்பட நடிகை (திருவிதாங்கூர் சகோதரிகளில் மூத்தவர் (பத்மினி, ராகினி) (இ. 1982)

1933 - அடையார் கே. லட்சுமணன், பரதநாட்டியக் கலைஞர், நடன ஆசிரியர் (இ. 2014)

### இறப்புகள்

1916 - கிரிகோறி ரஸ்புட்டீன், ரஷ்ய மதகுரு, (பி. 1869)

1999 - ஜோசப் ஆனந்தன், தமிழ் நாடக எழுத்தாளர்

### சிறப்பு நாள்

பாஹ்ரேன் - தேசிய நாள் (1971)

வங்காள தேசம் - வெற்றி நாள் (1971)

கசக்ஸ்தான் - விடுதலை நாள் (1991)

நேபாளம் - அரசியலமைப்பு சட்ட நாள் (1962)

# தமிழர்களை ஒருபோதும் நாம் கைவிடமாட்டோம்

## மங்கள சமரவீர வாக்குறுதி

(கொழும்பு)

**முன்னைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை புறக்கணித்த நிலையில் நாம் அவர்களை ஆதரித்து செயற்படுவதே இனவாதிகளுக்கு முக்கிய பிரச்சினையாக தெரிகிறது. நாம் தமிழர்களை ஒருபோதும் கைவிடப்போவது இல்லை என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று நாடு சரியான திசையில் பயணிக்கின்றது. இதுவரை காலமும் எம்மீது சர்வதேச நாடுகள் முன்வைத்த விமர்சனங்கள் அனைத்தும் இன்று நிறுத்தப்பட்டு அனைத்து நாடுகளினதும் உதவியுடன் நாம் நாட்டை முன்கொண்டு செல்கின்றோம். இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகின்றது.

இந்த ஒருவருட காலத்தில் நாட்டில் எவ்வாறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை இன்று மக்கள் உணரக்கூடியதாக உள்ளது. எனினும் நாம் முழுமையாக நாட்டில் ம்மாற்றத்தை ஏற்படுத்திவிட்டோம் எனக் கூறவில்லை. இந்த ஆட்சியிலும் குறைபாடுகள் உள்ளன. ஆனால் அவை அனைத்தும் சரி செய்யக்கூடியவையேயாகும். இந்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய எமக்கு கால அவகாசமும் உள்ளது.

எனினும் கடந்த காலத்தில் நாட்டில் காணப்பட்ட ஊழல்,மோசடிகள் மற்றும் கொலை, கொள்ளை, வெள்ளைவான் கடத்தல் என்ற அனைத்தையும் நாம் முடிவுக்கு கொண்டுவந்துள்ளோம். குற்றவாளிகள் தொடர்பில் கடினமான வகையில் செய்ற்பட்டு வருகின்றோம். குற்றவாளிகளை தண்டிக்கும் வகையில் அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. அதேபோல் நாட்டில் நல்லிணக்கம் ஒன்றை நோக்கிய பயணத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். தமிழ்மக்களின்மீது நாம் அக்கறையுடனும் அவர்களின் பிரச்சினையை தீர்ப்பதில் பொறுப்புடனும் செயற்பட்டு வருகின்றோம்.

எனினும் கடந்த காலங்களில் அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைகளை மூன்றாம் தரப்பு பிரச்சினையாகவே கருதியது. முக்கியமான தருணங்களில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து பயணிப்பதில் மகிந்த தரப்பினர் பின்வாங்கினர். அப்போதும் அரசாங்கத்தில் பலர் இனவாத கருத்துக்களை பரப்பி புலிகளை தமிழர்களுடன் ஒன்றிணைத்து கருத்துக்களை வெளியிட்டனர். அவ்வாறான நிலையில் எமது ஆட்சியில் தமிழ் மக்களின் நியாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வடக்கு, கிழக்கு பகுதிகளை மீளவும் அவர்களின் கைகளில் ஒப்படைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அதை பொறுத்துக்கொள்ள முடியாது இன்றும் அதே இனவாதிகள் புலிக் கதைகளைக் கூறி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

ஆயினும் இந்த விடயங்களை நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய தேவை இல்லை. நாட்டின்தேசிய பாதுகாப்பு விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்களை விடவும் நாம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம். இதில் யாரும்



அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதேபோல் நாம் தமிழர்களை ஒருபோதும் கைவிடப்போவதும் இல்லை. முன்னைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை புறக்கணித்த நிலையில் நாம் அவர்களை ஆதரித்து செயற்படுவதே இனவாதிகளுக்கு முக்கிய பிரச்சினையாக தெரிகின்றது. நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்களை விடவும் நாம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம். அதேபோல் நாம் தமிழர்களை ஒருபோதும் கைவிடப்போவதும் இல்லை.

மக்களின் விருப்பம் இன்றி இந்த ஆட்சியை எந்த சக்திகளினாலும் வீழ்த்த முடியாது. தமிழ் மக்களின் மீது நாம் அக்கறையுடனும் அவர்களின் பிரச்சினையை தீர்ப்பதில் பொறுப்புடனும் செயற்பட்டு வருகின்றோம் என்று தெரிவித்தார். (இ)

# மக்கள் ஆட்சியாளர்களுக்கு கசப்பான மருந்தை கொடுப்பர்



## வாசுதேவ எம்.பி.தெரிவிப்பு

மக்கள் ஆட்சியாளர்களுக்கு கசப்பான மருந்தை கொடுக்கப் போகும நாள் வெகு தூரத்தில் இல்லை என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் ஜனாதிபதியும் பிரதமரும் கசப்பான மருத்தை அருந்த நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கசப்பான மருந்தை அருந்துவது மக்கள் அல்ல, ஆட்சியாளர்களே அருந்த நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

100 நாட்கள் வரவு செலவுத்திட்டத்தில் செல்வந்தர்களின் பணத்தை எடுத்து சாதாரண மக்களுக்கு கொடுப்பதாக காட்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அதில் மறுபக்கம் காட்டப்பட்டுள்ளது.

பங்கு பரிவர்தனை ஆணைக்குழுவின் முன்னாள் பிரதான அதிகாரியான கலாநிதி நாலக கொடஹேவா கைது செய்யப்பட்டுள்ளார். அது சம்பந்தமாக விசாரணைகளை நடத்திச் செல்ல தடையில்லை.

ஆனால், முன்னாள் அரசாங்கத்திற்கு உதவினார் என்று பழிவாங்கக் கூடாது எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## அம்மா பிள்ளைகள்

சில பேர் குழந்தைகளிடம் பேசும் போது குழந்தை மாதிரியே பேசுவார்கள். அதாவது மழலை மொழியிலேயே பேசுவார்கள். அப்படிப் பேசினால்தான் குழந்தைக்கு பிடிக்கும்-புரியும்-என்பது இவர்களின் எண்ணம்.

ஆனால் அப்படிப் பேசுவது தவறு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

நாம் பேசுவதை பார்த்துத்தானே குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ளும். நாமே குழந்தை மாதிரி பேசிக் கொண்டி ருந்தால் அவர்கள் நல்ல விதமாக பேசக் கற்றுக் கொள்வது எப்படி?

இதனால் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளும் வேகம் தடைப்படும்.

குறித்த 10 குழந்தைகளிடம் உனக்கு அம்மாவைப் பிடிக் குமா? அப்பாவைப் பிடிக்குமா? என்று கேட்டால் அரைவாசிக் குழந்தைகளுக்கு மேல் அம்மாவைப் பிடிக்கும் என்று தான் சொல்லும்.

குழந்தை தாய் வயிற்றில் ஏழு மாதக் குழந்தையாக இருக்கும் போதே அம்மாவின் குரலைக் கேட்குமாம். தாயின் வயிற்றுக்குள் ஒரு சிறிய 'மைக்' வைத்து ஒலிப் பதிவு செய்து பார்த்திருக்கிறார்கள்.

மற்றவர்கள் பேசுவதை விட அம்மா பேசும் குரல் தான் மிகவும் தெளிவாகக் கேட்கிறதாம்.

ஆக ஒரு குழந்தை ஆரம்பத்திலிருந்தே கேட்கும் குரல் அம்மாவின் குரல். அதனால் தான் அம்மா என்றால் ஒரு தனிப்பாசம். தாயின் பேச்சைக் கேட்டுத் தான் வயிற்றில் இருக்கும் குழந்தை பேசக் கற்றுக் கொள்கிறது. பிறக்கும் போதே நமக்கெல்லாம் தாய் மொழிப்பற்று உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

பிரெஞ்சு மொழி பேசும் ஒரு குடும்பத்தில் ஆராய்ச்சி நடத் தினார்களாம். பிறந்து நான்கு நாட்கள் ஆவதற்குள் குழந்தை ரஷ்ய மொழியை விட பிரெஞ்சு மொழியை விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

எட்டு வயதுக்கு மேல் புதிதாக கற்றுக் கொள்ளும் எந்த மொழியுமே தாய் மொழியை விட கஷ்டமாகத்தான் இருக் குமாம். ஒருகுழந்தை பிறந்து 8 மாதம் ஆனதுமே நாம் பேசும் பேச்சு புரிய ஆரம்பித்து விடும். அதனால் அதன் பின்னரும் சின்னக் குழந்தை மாதிரி உட்கார்ந்து மழலை மொழி பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

தெளிவாக நல்ல தமிழில் பேசுங்கள். அது புரிந்து கொள்ளும்- கற்றுக் கொள்ளும். அந்த நேரத்திலெல்லாம் நாம் பேசுவதை நாம் பேசுவது மாதிரியே குழந்தை திருப்பிச் சொல்லும். தானே யோசித்துப் பேச 2-3 வருடங்கள் ஆகும்.

ஜான்லாக் என்ற அமெரிக்க விஞ்ஞானி இது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் சொல்கிறார்.

குழந்தை தாயின் வயிற்றில் 7 மாதமாக இருக்கும் பொழுதே பேசக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறது. விரைவாக பேச ஆரம்பிக்கும் குழந்தை புத்திசாலியாக இருக்கும் என்று சிலர் சொல்லுவதுண்டு.

அதுவும் ஒரு பொய்யான நம்பிக்கைதான் என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர்.

பிறந்த குழந்தைக்கு அப்பாவை விட ஏன் அம்மாவைப் பிடித்திருக்கிறது? என்ற கேள்விக்கு இவருடைய ஆராய்ச்சி விடை சொல்கிறது.

அப்பா குழந்தைகளிடம் கெட்ட பெயர் வாங்குவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு.

ஒரு அப்பா தன் பிள்ளையைப் பார்த்து "உங்கள் கணக்கு வாத்தியார் 'Home work' கொடுத்திருப்பதாக சொன்னாயே... அதற்குநான் ஏதாவது உதவி செய்யவா? அந்தக் கணக்கை நான் செய்து காட்டவா?" என்று கேட்டார். "வேணாமப்பா! நானே அதை தப்பாக போட்டுக் கொள் கிறேன்" என்றான் பையன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

79

## "அபூர்வ சகோதரர்கள்" அபார வெற்றி

(பிற்காலத்தில் இரட்டை வேட நடிப்பில் முத்திரை பதித்த எம்.ஜி.ஆர்., தன் வாழ்க்கை வரலாற்றில் இயற்கை நடிப்பிற்கு இலக்கணம் வகுத்தவரும் அபூர்வசகோதரர்கள் படத்தில் இரட்டை வேடங்களில் நடித்து, இன்னொருவர் அப்படி நடிக்க முடியாது என முத்திரை பொறித்து விட்டவருமான எம்.கே.ராதா அண்ணன் என்று குறிப்பிட்டுள்ளார்.)

இரண்டு ராதாக்களும் கத்திச் சண்டை போடுவதையும், பிச்சுவாக்கத்தியுடன் மோதுவதையும், ஆங்கிலப் படங்களுக்கு இணையாக படமாக்கியிருந்தார்கள்.

பானுமதி

கதாநாயகியாக நடித்த பானுமதியின் நடிப்பும் அதிஅற்புதமாக அமைந்தது. லட்டு... லட்டு மிட்டாய் வேணுமா..? என்று பாடி ஆடிய போது, ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர்.

சந்திரலேகா 30 இலட்சம் ரூபா செலவில் பிரமாண்டமாக - நீண்ட காலம் தயாரிக்கப்பட்டது. ஆனால் அபூர்வசகோதரர்கள் குறுகிய காலத்தில், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு, சந்திரலேகாவுக்கு நிகரான வெற்றியைப் பெற்றது.

அபூர்வசகோதரர்கள் படம் இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது. மூன்று மொழிகளிலும் பானுமதி தான் கதாநாயகி.

இந்திப்பதிப்பு நிஷான் என்ற பெயரில் வெளியாகியது. இரட்டை வேடத்தில் நடித்த ரஞ்சன், வட நாட்டில் பெரும் புகழ்பெற்றார்.

சம்சாரம்

அபூர்வசகோதரர்கள் படத்துக்கு பின் ஜெமினி தயாரித்த படம் சம்சாரம்.(1952)

இது, தெலுங்கில் வெளியான படம். எல்.வி.பிரசாத் இயக்கி இருந்தார். ஆந்திராவில் இப்படம் சக்கைபோடு போட்டது. தமிழ் நாட்டுடன் ஆந்திரா இணைந்திருந்த



அந்தக் காலகட்டத்தில், இப்படம் விநியோக விதிமுறைகள் காரணமாக சென்னையில் திரையிடப்படாமல், சென்னையை அடுத்த பல்லாவரத்தில் திரையிடப்பட்டது. சென்னை வாசிகள் ரெயிலிலும் பேருந்துகளிலும் கூட்டம் கூட்டமாக சென்று சம்சாரத்தைப் பார்த்தனர்.

இதை அறிந்த வாசன், தன் கதை இலாகாவினரை பல்லாவரத்துக்கு அனுப்பி, படத்தை பார்த்து வரும்படி அனுப்பினார். படம் பார்த்து விட்டு திரும்பியவர்கள் ஓகோ என்று புகழ்ந்தனர்.

உடனே சம்சாரம் படத்தை தமிழில் தயாரிக்கும் உரிமையை வாசன் வாங்கினார்.

1952 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடுமையான உணவுப் பஞ்சம் நிலவியது. ஒரு ஆளுக்கு 6 அவுன்ஸ் அரிசிதான் ரேஷனில் கொடுக்கப்பட்டது. வெளிக் கடைகளில் அரிசி விற்கப்படவில்லை.

சம்சாரம் படத்தின் கதை, வறுமையின் கொடுமையைச் சித்தரித்தது. பிரதான வேடங்களில் எம்.கே.ராதாவும், புஷ்பவல்லியும் நடித்தனர். ஸ்ரீராம் - வனஜா இளம் ஜோடியாக தோன்றினர்.

வறுமை காரணமாக குடும்பத்தை விட்டு வெளியேறி விடுவார் ராதா, புஷ்பவல்லி, தன் குழந்தைகளை பிச்சை எடுக்க அனுப்புவார். அம்மா பசிக்குதே தாயே பசிக்குதே என்று பாடிய படி குழந்தைகள் பிச்சை எடுக்கும் காட்சி, கல் மனதையும் கரையச் செய்தது.

புதிய முறை விளம்பரம்

இந்தப் படத்துக்கு புதிய முறையில் விளம்பரம் செய்தார் வாசன்.

கதாநாயகி மஞ்சு, தன் சோகக் கதையைக் கூறுவது போல் ஓர் கடிதத்தை தபால் அட்டையில் அச்சிட்டு, வாக்காளர் பட்டியலில் உள்ள ஒவ்வொரு பெண்ணின் முகவரிக்கும் அனுப்பச் செய்தார். அன்புள்ள சகோதரிகளே! என்று தொடங்கும் கடிதத்தைப் படித்து விட்டுக் கண் கலங்கிய பெண்மணிகள் சம்சாரம் ஓடிய தியேட்டர்களுக்கு படையெடுத்தனர்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 346

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

இதற்குக் காரணம் பிரபஞ்ச இருப்புத் தன்மை உங்களின் ஏமாற்ற மடையச் செய்யாத சிநேகிதம் என்பது ஒரு போதும் உங்களுக்குக் கற்பிக்கப் படவில்லை.

நீங்கள் உதவிக்கு எப்பொழும் மக்களையே பார்த்து பழக்கப்பட்டு விட்டீர்கள். ஏனெனில் மக்கள் மட்டுமே உதவுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்கள்.

பிரபஞ்ச இருப்புத் தன்மைதான் மக்களின் வழியாக உதவுகிறது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டீர்கள். உங்கள் விசுவாசம் எப்பொழுதும் மக்களின் மீதே இருக்கிறது. ஒருபோதும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் மீது அல்ல.

உங்கள் விசுவாசத்தைப் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் மீது வைத்தீர்களானால் நீங்கள் இந்தப் பூமியில் கடவுளைப் போல வாழ முடியும்.


நான் அலைந்து திரிந்த நாட்களை மகிழ்ச்சியுடன் அனுபவித்தேன். எங்கு போகிறோம் என்ற எண்ணம் துளியுமின்றி வெறுமனே கால் போன போக்கில் நடப்பது வழக்கம்.

ஏதோ ஒரு ரெயிலில் ஏறி எங்கு என்னை இயற்கைக் காட்சி கவர்கிறதோ அந்த இரயில் நிலையத்தில் இறங்கி விடுவது வழக்கம்.

அப்போது எனக்கு இந்தியும் தெரியாது. பெரும்பாலும் அலைந்து திரிந்தது வட இந்தியாவில் இமய மலையில்தான்.

வழியைத் தெரிந்து கொள்வதற்காக வெறுமனே அனுபவத்தில் இந்தி வார்த்தைகளைக் கற்றுக்கொண்டேன்.

உண்மையில் ஏதேனும் ஒரு மொழியைக் கற்பதனால் முதல் தடை,



உங்களுக்கு அந்த மொழி தெரியாது என்ற எண்ணம்தான்.

நீங்கள் முதலில் உங்களை அந்த மொழியிலிருந்து அந்நியப் படுத்திக் கொள்கிறீர்கள். பிறகு அது கடினமாகத் தோன்றுகிறது.

இங்கு மீண்டும் உங்களுடைய எல்லாம் தெரிந்த இயல்பினால் உங்களை அந்நியப்படுத்திக் கொள்கிறீர்கள்.

எப்படியோ பல சமயங்களிலும் நான் எந்த சாதுக் கூட்டத்துடனும் இல்லாமல் தனியாகவே அலைந்து திரிந்தேன்.

ஒருபோதும் நான் தனியாக இருந்ததாக எண்ணவில்லை. பிரபஞ்ச இருப்புத் தன்மையின் பகுதியாக இருப்பதில் மகிழ்ச்சியடைந்தேன்.

நீங்கள் இயற்கையுடன் தொடர்பு கொள்ளக் கற்றுக்கொண்டுவிட்டால் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் மகிழ்ச்சியை உங்களால் உணர முடியும். நான் உணவிற்காக ஒரு போதும் பிச்சையெடுக்க வேண்டிய தேவையே இருந்ததில்லை. எனக்குப் பசியெடுக்கிறதோ இல்லையோ உணவு யார் மூலமாகவோ ஏதோ ஓர் வடிவத்தில் வந்துவிடும். இதைத்தான் நான் வெறுமனே நம்பிக்கை வை (எது நடந்தாலும் சரி என்று) விட்டுவிடு, பிரபஞ்ச இருப்புத் தன்மை கவனித்துக் கொள்ளும் என்று சொல்கிறேன்.

மக்கள் என்னிடம் கேட்கிறார்கள், சுவாமிஜி நீங்கள் வாழ்க்கையில் மிகவும் போராடியே உங்கள் இலக்கை அடைந்திருக்கிறீர்கள்.

நாங்களும் எங்கள் இலக்கை அடைய கஷ்டப்பட வேண்டாமா? என்று. நான் அவர்களிடம் சொல்கிறேன், என்னுடைய போராட்டத்திற்குக் காரணம், நான் ஒரு பூட்டைத் திறக்கும் முயற்சியில் 10,000 சாவிகளை உபயோகப்படுத்தியதுதான்.

நான் பல வருடங்களாக சோதனை செய்து சரியான சாவியைக் கண்டு பிடித்து விட்டேன். இப்பொழுது என்னிடம் சரியான சாவி இருக்கிறது.

நான் அதை யார் விரும்பினாலும் அவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# தமிழ் மக்கள் யுத்தத்தை ஆதரிக்கவே மாட்டார்கள்

(கொழும்பு)

**வடபகுதி தமிழ் மக்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தமாட்டார்கள். அம்மக்கள் யுத்தத்தையும் ஆதரிக்கமாட்டார்கள். ஏனென்றால் யுத்தத்தால் பாரிய அழிவுகளை தமிழ் மக்கள் எதிர்கொண்டனர் என ஜே.வி.பியின் எம்.பி. பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.**



காணாமற் போனோரின் குடும்பங்களின் "சோகக் கதையை" கேட்பதாக மட்டுமே விசார ணைக் குழு அமையாது அம்மக்களுக்கு சட்ட உதவி வழங்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் காணி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே பிமல் ரத்னாயக்க.எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் புலிக்கொடி பறக்கின்றது. புலி சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. மீண்டும் வடக்கு யுத்தத்திற்கு தயாராகின்றது போன்ற செய்திகள் இணையத்தளங்களின் ஊடாக மகிந்த இனவாதப் பிரசாரத்தை முன்னெடுக்கின்றார்.

யுத்தத்தில் பெரும் அழிவுகளை சந்தித்தவர்கள் தமிழ் மக்களாவார்கள். எனவே வடக்கு தமிழ் மக்கள் மீண்டும் யுத்தத்தை ஆதரிக்கமாட்டார்கள்.

அம் மக்கள் யுத்தத்தினை வெறுக்கின்றார்கள். ஜனாதிபதித் தேர்தல் வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்பவற்றில் வடபகுதி மக்கள் கொண்டிருந்த ஆர்வம் அவர்கள் ஜனநாயக வழியை அதிகளவில் நேசிக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

ஜனநாயக வழிக்கு வடபகுதி தமிழ் மக்கள் திரும்பியுள்ளதை விரும்பாத சிங்கள இனவாதிகளே மீண்டும் யுத்தத்தை தமிழ் மக்கள் விரும்புவதாக பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாக பிமல் ரத்னாயக்க எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ)

## முன்னாள் இராணுவத் தளபதி உட்பட 4 பேர் புலனாய்வு பிரிவுக்கு அழைப்பு

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய உட்பட 4 பேர் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்படவிருப்பதாக திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொட காணாமற் போக செய்த சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பெறவே இவர்கள் அழைக்கப்படவுள்ளனர். இவர்களில் புலனாய்வுப் பரிவின் முன்னாள் பணிப்பாளர் அமல கருணாசேகரவும் அடங்குவார்.

அத்துடன் புலனாய்வுப் பிரிவின் தற்போதைய பணிப்பாளர் சுரேஷ் சலேவிடம் வாக்குமூலம் ஒன்று பெறப்படவுள்ளது.

இவர்களிடம் வாக்குமூலங்களை பதிவு செய்த பின்னர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கடந்த அரசாங்கத்திலும் தற்போதைய அரசாங்கத்திலும் முக்கிய அமைச்சு பதவியை வகித்து வரும் ஒருவரிடமும் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படவிருப்பதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை பிரகீத் எக்னெலியகொட விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர் எனவும், அவர் குடும்ப மரம் என்ற நாவலுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக இராணுவ புலனாய்வு பிரிவினர் பிரசாரங்களை முன்னெடுத்திருந்ததாகவும்,

இது குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகளை திசை திருப்ப புனையப்பட்ட பொய்யான செய்தி எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை சம்பந்தமாக நடத்தப்பட்ட விசாரணைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருந்த போதிலும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக விசாரணையில் அக்கறை குறைந்துள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 576

Search for people, places and things · Nagendram · Home

ராஜ்

தலையில கொஞ்சமாவது
எண்ணெய் தேயுடானு அம்மா
சொல்லும் போது முடியாதுனு
சொன்னவன் எல்லாம்
அப்ப எர்வாமாட்டின் வாங்கி
தேய்ச்சுகிட்டு இருக்காங்க!

தர்சிகன்



கஜல்விழி




நதீப்



குணால் குணரட்னம்

தாய்க்குக்
குளிரும்போது
குழந்தைக்கு
அணிவிப்பது தான்-
ஸ்வெட்டர்!
நோரா எஃப்ரான்

திவா கோபி



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போர் விமானக் கொள்வனவு அரசியல் குழப்பத்தை தூண்டுமா?

இலங்கை விமானப்படைக்குப் புதிய போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சி, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் குழப்பங்களை ஏற்படுத்திவிடும் அறிகுறிகளை வெளிப்படுத்தி இருக்கின்றன.

இலங்கை விமானப்படையிடம் உள்ள கிபிர் மற்றும் மிக் - 27 போர் விமானங்கள் மிகவும் பழையதாகி விட்ட நிலையில், அவற்றுக்குப் பதிலாக புதிய விமானங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சீனாவுடன் இணைந்து பாகிஸ்தான் தயாரிக்கும் ஜே.எவ்-17 போர் விமானங்களை இலங்கை விமானப்படை கொள்வனவு செய்யவுள்ளதாக கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாகவே உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இலங்கை விமானப்படை பாகிஸ்தான் போர் விமானங்களை வாங்குவதற்கு கொள்வனவுக் கட்டளையை கொடுத்து



விட்டதாகவும் கூட செய்திகள் வெளியாகின.

ஆனால் அவ்வாறு எந்த விமானத்தையும் கொள்வனவு செய்வதற்குத் தாம் தீர்மானிக்கவில்லை என்றே இலங்கை விமானப்படை இன்றுவரை கூறி வருகிறது.

இலங்கை விமானப்படை தாம் புதிய போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய விரும்புவதை மறைக்கவில்லை.

ஆனாலும் எந்த நாட்டின் விமானங்களை வாங்கவுள்ளோம் என்று கூறுவதையும் தவிர்த்தே வந்திருக்கிறது.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஆண்டில் புதிய போர் விமானங்களை விமானப் படை கொள்வனவு செய்ய வுள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு கூடுதல் நிதியை விழுங்கியிருக்கிறது.

அதில் விமானப்படைக்கான மூலதனச் செலவுக்கான ஒதுக்கீடு மூன்று மடங்கினால் அதிகரிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம்.

2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், 688 கோடி ரூபாவாக இருந்த விமானப்படைக்கான மூலதனச் செலவு ஒதுக்கீடு 2016 ஆம் ஆண்டு 1923.7 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரிப்பாகும். புதிய போர் விமானங்களை விமானப்படை கொளவனவு செய்வதற்காகவே நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே இலங்கை விமானப்படை தனக்குப் பொருத்தமான புதிய போர் விமானங்களை முடிவு செய்ய வேண்டிய கட்டத்துக்குள் நுழைந்திருக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதேவேளை, முன்னாள் விமானப் படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி பாகிஸ்தானில் இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிய போது தான், விமானப் படைக்கு ஜே.எவ்-17 போர் விமானங்களை வாங்க முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் எயர் சீவ் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டு விட்டார்.

ஆனாலும் ஜே.எவ்-17 போர் விமானங்களை எப்படியாவது இலங்கை விமானப்படையின் தலையில் கட்டிவிட பாகிஸ்தான் கங்கணம் கட்டியே செயற்படுகிறது என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கனவே பாகிஸ்தான் சர்வதேச ஊடகங்களில் கசியவிட்ட செய்திகள் எல்லாமே அதனை மையப்படுத்தியவைதான்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் பயணத்தின் போது இந்தப் போர் விமான விற்பனை பற்றிய அறிவிப்பை வெளியிட பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, பத்து ஜே.எவ்-17 போர் விமானங்களை வாங்கும் இலங்கை விமானப்படைக்கு சலுகை ஒன்றை அளிக்கவும் பாகிஸ்தான் முன் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன்படி இலங்கை விமானப் படையிடம் உள்ள எவ்-7 போர் விமானங்களை இலவசமாகவே புதுப்பித்துக் கொடுக்கப் பாகிஸ்தான் முன் வந்துள்ளதாம்.

எனினும் இலங்கை விமானப் படையோ, பாகிஸ்தான் அரசாங்கமோ நினைத்தவாறு இந்தப் போர் விமானக் கொள்வனவு ஒன்றும் இலகுவாக இடம் பெறுவதற்கான சூழல் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் இந்தியாதான். இந்தியா இந்தப் போர் விமான வர்த்தகத்தை விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தானும் இந்தியாவும் ஒன்றுக்கொன்று எதிரி நாடுகளாகவே தம்மை வெளிப்படுத்தி வந்திருக்கின்றன.

இலங்கையுடன் பாகிஸ்தான் நெருக்கமாக இருப்பதை, பாதுகாப்பு உறவுகளை வலுவாகப் பேணுவதை, இந்தியா விரும்புவதில்லை.

அந்த நன்றி இலங்கையிடம் இருந்தாலும், இந்தியாவை மீறி பாகிஸ்தானுடன் நெருக்கத்தை பேணுவதில் இலங்கை அரசாங்கத்துக்கு சிக்கல்கள் இருக்கின்றன.

பாகிஸ்தானிடமிருந்து ஜே.எவ்-17 போர் விமானங்களை இலங்கை வாங்குவதை இந்தியா விரும்பவில்லை எனற தகவல்கள் ஏற்கனவே அரசல் புரசலாக வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் தனது சொந்தத்



தயாரிப்பான தேஜஸ் போர் விமானங்களை வாங்குமாறு இலங்கையிடம் இந்தியா நெருக்கடி கொடுப் பதாகவும் கூட செய்திகள் வெளியாகின.

ஜே.எவ்-17 போர் விமானங்களை விட தேஜஸ் போர் விமானங்கள் திறன் மிக்கவையாக இருந்தாலும், அவை இன்னமும் சோதனைக் கட்டத்தை தாண்டவில்லை.

இந்திய விமானப்படையில் கூட இன்னமும் இணைக்கப்படாத இந்தப் போர் விமானங்களை இலங்கைக்கு விற்பதென்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம்.

எவ்வாறாயினும், இலங்கை பாகிஸ்தானிடம் போர் விமானங்களை வாங்குவதை இந்தியா விரும்பவில்லை என்று டில்லி அழுத்தங்களைக் கொடுத் திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விககிரமசிங்க ஆகியோருடன், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் அஜித் டோவல் தொலைபேசியில் பேசியதாகவும் கூறப்படுகிறது.

இதன்போது பாகிஸ்தானிடம் போர் விமானங்களை வாங்கினால், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அஜித் டோவல் எச்சரித்ததாகவும் சொல்லப்படுகிறது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இந்திய - இலங்கை உறவுகள் புதிய உச்சத்தை எட்டியிருக்கும் நிலையில் அதற்குச் சோதனையான வகையில் இந்த விவகாரம் முளைத்திருக்கிறது.

எனினும், தேசிய பாதுகாப்பு என்று வரும்போது இந்தியா அவ்வப்போது கடுமையான தொனியை வெளிப்படுத்தவும் தயங்குவதில்லை.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் கொழும்புத் துறைமுகத்துக்குள் தரித்துச் செல்ல சீன நீர்மூழ்கிக் கப்பல்



களுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் இந்தியா கடுமையான எச்சரிக்கைகளை தனது இராஜதந்திர தொடர்புகளின் மூலம் விடுத்திருந்தது.

அதுபோலவே திருகோணமலை சீனன்குடாவில் சீனாவின் வான் பொறியியல் நிறுவனம், விமானப் பராமரிப்பு நிலையம் ஒன்றை நிறுவ முயற்சி செய்த போதும் இந்தியா கடும் எதிர்ப்பைத் தெரிவித்து அந்தத் திட்டத்தை இடைநிறுத்த வைத்தது.

இந்த வகையில் பாகிஸ்தான் போர் விமானங்களை வாங்கும் இலங்கையின் திட்டத்துக்கும் இந்தியா எதிர்ப்பை வெளியிட்டிருப்பதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்க முடியாது.

இந்நிலையில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நசிபடுகின்ற கட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது இலங்கை.

பாகிஸ்தானிடம் போர் விமானங்களை வாங்குவது தொடர்பாக எடுக்கக்கூடிய எந்த முடிவும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியான முறுகலையும் ஏற்படுத்தக்கூடும்.

இப்போதைய நிலையில் இலங்கைக்கு இந்தியாவே முக்கியமானது. எனவே இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாத வகையில் தான் கொழும்பு எந்த நகர்வையும் மேற்கொள்ளும் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் தவிர்ந்த வேறு எந்த நாட்டிடமும் போர் விமானங்களை வாங்க இலங்கைக்கு கடனுதவி வழங்க இந்தியா புதிய யோசனை ஒன்றை முன்வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, இன்னமும் எந்த நாட்டிடம் போர் விமானத்தை வாங்குவது என்று முடிவு செய்யவில்லை என விமானப படைத் தளபதி ககன் புலத்சிங்கள கூறியிருக்கிறார்.

இந்தியா, ரஷ்யா நாடுகளிடம் வாங்குவது குறித்தே கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவிடமிருந்து உடனடியாக எந்தப் போர் விமானத்தையும் வாங்கும் சாத்தியங்கள் இல்லை.

ரஷ்யாவின் போர் விமானங்களை நாடுவதே இலங்கை விமானப்படையின் அடுத்த தெரிவாக இருக்கலாம்.

எவ்வாறாயினும் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் போது அது இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவுகளில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும்.

ஏனென்றால், இலங்கையால் ஒரே நேரத்தில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் சமாதானப்படுத்த முடியாது போகும்.

ஹரிகரன்

# அலரிமாளிகை சூழ்ச்சித் திட்ட அறிக்கை சட்டமா அதிபரிடம்

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று (ஜனவரி 8 ஆம் திகதி) அலரி மாளிகையில் இடம்பெற்ற சூழ்ச்சித் திட்டம் குறித்த அறிக்கை சட்டமா அதிபர் திணைக் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.**



கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அதிகாலை சூழ்ச்சித் திட்டம் ஊடாக அதிகாரத்தில் தொடர்ந்தும் நீடிக்க முயற்சிக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த அரச விரோத சூழ்ச்சித் திட்டம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இன்னமும் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஆலோசனைகள் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் முழுமையான விளக்கம் அளிக்க இரண்டு வார கால அவகாசம் தேவைப்படுவதாக அமைச்சர் சாகல ரட்நாயக்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

சூழ்ச்சித் திட்டம் தொடர்பிலான விசாரணைகளுக்கு என்னவாயிற்று என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கேள்வி எழுப்பி யிருந்தார்.

"11 மாதங்களுக்கு முன்னதாக இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று தொடர்பில் நான் கேள்வி எழுப்புகின்றேன்.

சூழ்ச்சித் திட்டம் தொடர்பில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித 21 தடவைகளும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஏழு எட்டு தடவைகளும் கூறியுள்ளனர்.

இது நாட்டை பாதிக்கும் பிரச்சினையாகும். எனவே இந்த சம்பவம் குறித்த விசாரணைகளின் நிலைமை குறித்து அறிந்து கொள்ள விரும்புகின்றேன்" என டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் கேள்விக்கு பதிலளிக்க இரண்டு வார கால அவகாசம் வழங்குவதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித் துள்ளார். (இ)

## வடக்கில் முதன்மைப் பாடசாலைகளையும் சாதனை ஆசிரியர்களையும் கௌரவித்தல்

வடக்குமாகாணத்தில் உள்ள முதன்மைப் பாடசாலைகளையும், சாதனை ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் (18.12.2015) காலை 9 மணிக்கு 'வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் தம்பிராசா குருகுலராசா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன ஆகியோர்கலந்துசாதனையாளர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சிறந்த கற்றல் வள நிலையங்களுக்கான தெரிவில் வெற்றி பெற்ற பாடசாலைகள், கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் தமது பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய எல்லா மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெறவைத்த பாடசாலைகள், அவர்களுக்குத் தரம் 5 இல் கற்பித்த ஆசிரியர்கள், கடந்த க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) பரீட்சையில் மத்தியகல்வி அமைச்சின் தரப்படுத்தலில் முதல் மூன்று இடங்களை வடக்கு மாகாணத்தில் பெற்ற பாடசாலைகள், பாடசாலைச் சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டத்தில் பாராட்டுப் பெறும் பாடசாலைகள் கௌரவிக்கப்படவுள்ளன.

இக் கௌரவிப்பு நிகழ்வின் சிறப்புகலை நிகழ்வாக வடக்கு மாகாணத்தின் அழகியல் துறையைச் சேர்ந்த 140க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கேற்கும் தசாவதாரம் என்னும் நாட்டிய நிகழ்வு நடைபெறவுள்ளது. பரிசு பெறும் பாடசாலைகளின் பெயர்ப்பட்டியல் வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாடசாலைகளின் முகவரிகளுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதிபர்கள் வலயங்களுடன் அல்லது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உரிய பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு தங்களது பாடசாலைகளின் பெயர் களை உறுதிப்படுத்திக் கொள் வதோடு 9 மணிக்கு முன்னதாக நிகழ்விற்கு வருகை தந்து தங்களுக்குரிய ஆசன இலக்கங்களைப் பெற்று ஆசனங்களில் அமர்ந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அலுவலகத்தில் அரச ஊழியர்கள் தொலைபேசி பயன்படுத்தத் தடை

### கேரள அரசு அதிரடி உத்தரவு

(திருவனந்தபுரம்)

அரச அலுவலகங்களில் பணிநேரத்தில் ஊழியர்கள் தொலைபேசி பயன்படுத்துவதற்கு கேரள அரசு தடை விதித்துள்ளது.

கேரளாவில் பெரும்பான்மையான அரச அலுவலகங்களில் ஊழியர்கள் பணிநேரத்தில் மணிக்கணக்கில் தொலைபேசிகளை பயன்படுத்துவதால் பணிகள் பாதிக்கப்படுவதாக புகார் எழுந்தது. பல ஊழியர்கள் பணி நேரத்தில் தங்களது தொலைபேசியில் வாட்ஸ் அப், பேஸ்புக் உட்பட சமூக இணையத்தளங்களில் மூழ்கி விடுகின்றனர். இதனால் பல்வேறு முக்கிய தேவைகளுக்காக அரச அலுவலகங்களுக்கு வரும்பொதுமக்களுக்கு பெரும் சிரமம் ஏற்படுவதாக அரசுக்கு ஏராளமான புகார்கள் வந்தன. இந்த நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன் அரச அலுவலகங்களில் பணிநேரத்தில் ஊழியர்கள் தொலைபேசி பயன்படுத்த கேரள அரசு தடை விதித்தது. ஆனால இந்த உத்தரவால் எந்த பலனும் ஏற்படவில்லை. பெரும்பாலான அரச ஊழியர்கள் பணி நேரத்தில் வழக்கம்போல தொலைபேசிகளை பயன்படுத்தி வந்தனர். இதனால் இந்த உத்தரவை கடுமையாக அமுல்படுத்த கேரள அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக தொழில் துறை விஜிலென்ஸ் அமைப்பிலிருந்து அனைத்து அரச அலுவலகங்களுக்கும் அண்மையில் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதில், "அரச ஊழியர்கள் பணி நேரத்தில் தொலைபேசி பயனபடுத்தக் கூடாது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்தந்த துறை தலைவர்கள் இதை கண்காணித்து தவறு செய்யும ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அரச அலுவலகங்களிலுள்ள கணனிகளிலும் ஊழியர்கள் சமூக இணையத்தளங்களை பயனபடுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

## செய்தித் துளிகள்

### கறுப்புப் பட்டியலில் கவிஞர் ஜெயபாலன்

இலங்கையில் கறுப்புப் பட்டியலிடப்பட்டவர்களின் வரிசையில் கவிஞர் ஜெயபாலன் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் அண்மையில் கவிஞரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பகிரங்க அழைப்பு விடுத்திருந்தது.. எனினும், ஜெயபாலனின் பெயர் கறுப்புப் பட்டியலிடப்பட்டவர்களின் வரிசையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜெயபாலனுக்கு எதிரான தடை தொடர்ந்தும் அமுலில் இருப்பதாகவும் தடையை அதிகாரிகள் இதுவரையில் நீக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சினால் கவிஞருக்கு அண்மையில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் கவிஞர் ஜெயபாலன் இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### புனிதத்தன்மையை பேணுமாறு ஆலய நிர்வாகம் அறிவுறுத்து

ஆலய வளாகத்தில் இருந்து அரட்டையடிக்கும் காதல் ஜோடிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய நிர்வாக சபை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆலயத்திற்கு வரும் காதல் ஜோடிகள் பூஜைகள் முடிவுற்ற பின்னர் வீடு திரும்பிச் செல்ல வேண்டும். அதனை விடுத்து ஆலய வளாகத்தில் இருந்து ஒரு நாள் பொழுதை கழிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

புனிதமான ஆலயச் சூழலில் தவறான நடவடிக்கைகள் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆலய கட்டுப்பாடுகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### காத்தான்குடியில் காணி சுவீகரிப்பு

#### காரணம் டெங்கு நுளம்பு

டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு காரணமாக இருந்த இரண்டு வெற்றுக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு, கத்தான்குடி நகரசபைச் செயலாளர் ஜே.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார். சுவீகரிக்கப்பட்டுள்ள இவ் இரண்டு காணிகளின் உரிமையாளர்களும் 7 நாட்களுக்குள் அக்காணிகளை உரிய முறையில் துப்புரவு செய்து காத்தான்குடி நகர சபைக்கு அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு அறிவித்தல் கிடைக்கும் பட்சத்தில் நகரசபை ஊழியர்களால் காணிகள் பரசீலனை செய்யப்பட்டு காணிகள் மீண்டும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும். 7நாட்களுக்குள் காணிகள் துப்புரவு செய்யப்படாதுவிடின காணிகள் இரண்டும் நகரசபைக்கு சொந்தமாக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

### விகாரையில் திருடியவர் கைது

விகாரையில் திருடிக் கொண்டிருந்த நபர், சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் எல்ல பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். எல்ல வெள்ளவாய பிரதான வீதியில் அமைந்துள்ள விகாரையொன்றிலேயே, மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விகாரைக்கு பொறுப்பான தேரர் தனது அறையிலிருந்தவாறே, விகாரையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவின் ஊடாக விகாரையில் திருடன் புகுந்து திருடிக்கொண்டிருந்த காட்சியை பார்த்ததும், எல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

இப் புகாரையடுத்து, விரைந்த பொலிஸார் திருடனை கைதுசெய்ய முற்படும்போது, திருடன் தப்பிச் சென்றுள்ளான். இதையடுத்து விகாரையை சூழவுள்ள மக்களின் உதவியுடன்பொலிஸார்திருடனை மடக்கிப்பிடித்தனர். திருடப்பட்ட விகாரையின் பொருட்கள் பலவற்றையும், பொலிஸார் மீட்டுள்ளனர். திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பயங்கரவாதக் குற்றச்சாட்டை 17 வயதுச் சிறுவன் ஏற்றான்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னைச் சேர்ந்த 17 வயதான சிறுவனொருவன், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட முயன்றமைக்கான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டுள்ளான். இதன் காரணமாக, பயங்கரவாத நடவடிக்கைகளில் சிறுவர்களின் பங்கு குறித்த கேள்விகள் எழுந்துள்ளன.

இவ்வாண்டு மே மாதத்தில், மெல்போர்னிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிறீன்வாலேயிலுள்ள அவனது வீட்டைச்சோதனையிட்டபோது, நவீன வெடிபொருட்களைப் பயன்படுத்தித் தாக்குதல்களை மேற்கொள்ள முயன்றான் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டான்.

இந்நிலையிலேயே, தனது குற்றச்சாட்டை அவன் நேற்று முன்தினம், ஏற்றுக் கொண்டுள்ளான். அவனது வயது காரணமாக, அவனது பெயர், விபரங்கள் வெளியிடப்படவில்லை. "பயங்கரவாத நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கான தயார்படுத்தலில் அல்லது திட்டமிடலில் ஈடுபட்டமை" என்ற குற்றச்சாட்டையே அவன் ஏற்றுக் கொண்டுள்ளான்.

கடந்த வாரமே, சிட்னியில் வைத்து 15, 20 வயதான இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பொலிஸாரின் கருத்துப்படி, அவுஸ்திரேலியாவிலுள்ள இளைஞர், சிறுவர்களில் ஏராளமானோர், வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 15.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.40 | 145.73 |
| பவுண்ட் | பிரிட்டன் | 213.71 | 221.43 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 154.92 | 161.05 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.95 | 148.82 |
| டொலர் | கனடா | 102.60 | 106.71 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.93 | 106.57 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.97 | 103.83 |
| ரூபா | இந்தியா | 2.1391 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.8020 |
| குவைத் | டினார் | 473.264 |
| ஓமான் | ரியால் | 372.7402 |
| கட்டார் | ரியால் | 39.4100 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.2492 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.0704 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 130 | 150 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 120 | 70 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 650 | 600 | 800 | 600 | 800 |
| தக்காளி | 200 | 250 | 150 | 200 | 200 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 15-30 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 160 | 100 | 80 | 160 | 120 |
| கரட் | 180 | 250 | 140 | 280-320 | 200 | 200 |
| பூசணி | 60 | 50 | 30-40 | 50 | 60 | 40 |
| புடோல் | 100 | 100 | 80 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 120 | 100 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 70 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 300 | 400 | 240 | 300 | 140 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 90 | 160 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 260-320 | 250 | 250 |
| லீக்ஸ் | 150 | 200 | 140 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | — | — | — | 200 | — |
| கறிமிளகாய் | 350 | — | — | 350 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 450 | — | — | — | — | — |
| போஞ்சி | 280 | — | 200 | 280 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 100 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 70 | 50 | 30 | 50 | — | 40 |
| தேசிக்காய் | 200 | 200 | 100 | 200 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 20-45 | 50 | 45 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | 180 | 250 | 160 | 250 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | 100 | — | 120 | 120 | 140 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | — | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | — | 50 | 80 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சென்னை பாண்டி பஜாரில் பிரபாகரன்- உமா மகேஸ்வரன் மோதல் 54

### ஐ.நா.சபை

ஐ.நா.சபைக்குள் திடீர் என்று சென்று தமிழ் ஈழம் பற்றி 2 நிமிடம் பேசி அனைவரையும் பரபரப்பில் ஆழ்த்திய கிருஷ்ணா வைகுண்டவாசன் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.

தமிழ் ஈழம் பற்றி பேசிக் கொண்டே இருந்தால் போதாது. நம் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டும். அடுத்த நடவடிக்கை பற்றி முடிவு எடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

மாநாட்டுத் தலைவர், கவிஞர் வா.மு. சேதுராமன் பேசுகையில், தமிழ் இளைஞர்கள் தமிழ் ஈழத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்ய முன்வந்துள்ளனர். அவர்களை நாம் பயன்படுத் திக் கொள்ள வேண்டும் என்றார்.

### தீர்மானம்

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைக்கு மாநாட்டில் கண்டனம் தெரிவிக்கப் பட்டது.

இலங்கையின் பூர்வீக் குடிகளான ஈழத்தமிழர்களுக்கு தமிழ் ஈழம் என்ற தனி சுதந்திர நாட்டை அமைக்க வேண்டும். அதற்கு உலகத் தமிழர்கள் ஒன்றுபட்டு பாடுபடவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


சென்னை பாண்டி பஜாரில் உமா மகேஸ்வரனைப் பிரபாகரன் துப்பாக்கியால் சுட்டார். ஆனால், உமா மகேஸ்வரன் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று விட்டார்.

தங்கதுரை, குட்டிமணி, பிரபாகரன் ஆகியோரைச் சிங்கள பொலிஸ் தேடியது. இதனால், அங்கு இருக்க முடியாது என்பதை உணர்ந்த அவர்கள், 1973 ஆம் ஆண்டு ஒரு படகில் ஏறி தமிழ் நாட்டுக்கு (வேதாரண்யம்) சென்றனர். அவர்களுடன் பெரிய ஜோதியும் சென்றார்.

தங்கதுரையும், குட்டிமணியும் சேலத்துக்குச் சென்றனர். பிரபாகரன் அவர்களோடு செல்லாமல், பெரியஜோதியுடன் சென்னைக்கு சென்றார். அங்கே உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனம் உதவியோடு, கோடம்பாக்கத்தில் ஒரு சிறிய் வீட்டை மாதம் 175 ரூபாய்க்கு வாடகைக்கு பிடித்தனர்.

சென்னையில் இருந்தபடி, தமிழக அரசியல் தலைவர்களை சந்திக்கலாம். இலங்கைத் தமிழர்களின் நிலையை எடுத்து சொல்லலாம். முடிந்தால் அவர்கள் உதவியைப் பெறலாம் என்பது பிரபாகரனின் எண்ணம்.

அப்போதெல்லாம் இலங்கைப் பிரச்சினை தமிழகத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கவில்லை. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது பிரபாகரனுக்குப்



அன்ரன் பாலசிங்கம்

பிடிக்கவில்லை.இதனால் 1974 ஆம் ஆண்டு மத்தியில் பிரபாகரன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

### பாலசிங்கம்

1977 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற கலவரத்தைத் தொடர்ந்து, அன்ரன் பாலசிங்கத்தின் நட்பு விடுதலைப் புலிகளுக்கு கிடைத்தது.

1938 ஆம் ஆண்டு பிறந்த அன்ரன் பாலசிங்கம், தனது வாழ்க்கையை ஒரு பத்திரிகையாளராகத் தொடங்கினார். வீரகேசரி பத்திரிகையில் பணியாற்றிய அவர், இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அருகில் அமைந்திருந்த பிரிட்டிஷ்கவுன் ஷிலில் பணி யாற்றிய ஒரு யாழ்ப்பாணத்து தமிழ்ப் பெண்ணை காதலித்து திருமணம் செய்தார்.

கடுமையான நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட அந்தப் பெண் சிகிச்சைக்காக லண்டன் சென்ற போது மரணம் அடைந்தார்.



இதன் பிறகு அன்ரன் பாலசிங்கம், அவுஸ்தி ரேலிய தாதியான அடேல் என்பவரை 1978 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண் டார்.

1979 ஆம் ஆண்டு ஊர்மிளா விவகாரத்தில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்த்து வைக்கவும், உமா மகேஸ்வரனுக்கும், பிரபாகரனுக்கும் இடையில் மீண்டும் நட்பைப் புதுப்பிக்கவும் அன்ரன் பாலசிங்கம் சென்னை சென்றார். அப்போது அவரை பேபி சுப்பிரமணியமும் பிரபாகரனும் அடிக்கடி சந்தித்து உரையாடினார்கள்.

ஊர்மிளா விவகாரத்தில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க முடியாமல் லண்டன் சென்ற பாலசிங்கம் 1981 ஆம் ஆண்டு மீண்டும் சென்னைக்கு சென்றார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பொறுப்பை மாத்தையாவிடம் ஒப்படைத்து விட்டு, 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி இரவு நம்பிக்கைக்குரிய 10 பேரோடு பிரபாகரன் மீண்டும் வேதாரண்யம் சென்றார்.

பிறகு அவர்கள் சென்னைக்கு சென்று வளசரவாக்கத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்தனர்.

அங்கே போராளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சமைப்பார்கள். பிரபாகரன், பாலசிங்கம், பண்டிதர், ரகு, பேபி சுப்பிரமணியம், நேசன், ராகவன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு வேலையாய் செய்து சமையலை முடிப்பார்கள்.

பிரபாகரன் அசைவ உணவு தயாரிப்பதில் - குறிப்பாக மீன் குழம்பு வைப்பதில் திறமைசாலி.

போராளி வாழ்க் கையைத் தேர்ந்தெடுத்த பிறகு, தாங்களே சமையல் செய்வது அவசியம் என்பதை போராளிகளுக்குப் பிரபாகரன் உணர்த்தி இருந்தார். சென்னையில் போரா ளிகள் பயிற்சி பெற்றனர். அடேல் பாலசிங்கத்துக்கு கூட அவர்கள் ஆயுதப் பயிற்சி அளித்தனர்.

### துப்பாக்கியால் சுட்டார்

இந்த நிலையில் 1982 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி இரவு 9.45 மணிக்கு பிரபாகரனும், ராகவனும் ஆங்கிலப்படம் பார்த்து விட்டுச் சென்னை பாண்டி பஜாரில் உள்ள ஹோட்டலுக்குச் சென்றனர்.

(தொடரும்)

நம்பிக்கை என்னும் கண்கொண்டு பார்க்க வேண்டுமானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும். – பிராங்லின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாயிற் கடைப்பட்ட நம்மை என்று மணிவாசகர் கூறியது ஏன்?

நாளை மார்கழி மாதத்தின் பிறப்பு. மார்கழி மாதப் பிறப்போடு திருவெம்பாவையும் ஆரம்பமாகிறது.

கூத்தபிரானை வழிபாடாற்றுவதற்கு மார்கழித் திங்கள் உகந்த காலம் என்பது நம்முன்னோர்களின் முடிவு.

மணிவாசகப் பெருமான் தந்த திருவாசகம் மார்கழி மாதம் முழுமையிலும் பாடிப்போற்றப்படும். மார்கழி மாதம் பிறந்துவிட்டால் தேவாரத் திருமுறை பாடுவது நிறுத்தப்பட்டு திருவாசகமே முதற்பதிகமாகப் பாடப்படுவது சைவ சமயத்தில் பின்பற்றப்படும் நடைமுறை.

ஆக, மார்கழி மாதம் மதிசூடும் அண்ணலார் தமை வழிபாடு செய்வதற்கு உகந்தது என்று கூறிக் கொள்ளலாம்.

திருவாசம் தந்த மணிவாசகர் மார்கழி மாதத்தில் திருபள்ளிஎழுச்சி பாடி அடியவர்களை எழுப்புகின்றார்.

இன்னும் துயிலுதியோ வன்நெஞ்சப் பேதையர் போல்.. என்று வைகறைப் பொழுதில் பள்ளி எழுக என்று திருவெம்பாவை பாடுகின்ற பாங்கில்,

ஓ! மானிடமே இன்னும் நீ இருளாகிய உறக்கத்தில் இருப்பது முறையோ! வைகறைப் பொழுதில் நீ துயில் எழுந்து உன் தலைவனாகிய இறைவனை பணிக என்று அறிவுரை கூறுவதாக அந்தப் பதிகம் அமைகிறது.

இவ்வாறு விழிப்புணர்ச்சி செய்த மணிவாசகர் தன்னை நாயிற் கடைப்பட்டவன் என்று பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டுகின்றார்.

இந்த உலகத்தில் இருக்கக்கூடிய அத்தனை பிறவிகளிலும் நாய்ப் பிறப்பை கடைப்பிறப்பு என்று பலரும் கருத்துரைக்கின்றனர். அவ்வாறு கருத்துரைப்பதற்கு காரணம் யாது?

நன்றி எனும் உயர்ந்த குணம் கொண்ட நாய்கள் தன் இனத்தோடு மட்டும் ஒற்றுமை கொள்வதில்லை. ஆக மற்றவர்களுக்கு வால் ஆட்டி, மற்றவர்களைப் பாதுகாக்கின்ற –மற்றவர்களுக்கு உதவுகின்ற நாய் இனத்திற்கு தன் இனத்தோடு ஒற்றுமையாக வாழத்தெரியவில்லையே.

இத்தகைய பிறப்பால் என்ன பயன் உண்டு. மற்றவர்களுக்கு வால் ஆட்டிக் கொண்டு தன் இனத்தை கடித்துக் குதறி கூப்பாடு போட்டு வாழ்வதால் நாய் இனத்தின் நன்றி உணர்வும் பெறுமதி இழந்து போகின்றது.

இது மட்டுமல்ல, யாரோ ஒருவர் இடையிடையே எறியும் எலும்புத்துண்டுகளைத் தூக்கிக் கொண்டு ஓடுவதற்காக நாய்க் கூட்டம் சண்டையிட, எலும்புத் துண்டை வீசியவர் அந்த நாய்ச் சண்டைக்குள் தனது காரியத்தை முடித்து விடுவார்.

ஆக, எலும்புத் துண்டைப் போட்டது யார்? அதன் நோக்கம் என்ன? என்று அறியாவிட்டாலும் தன் இனத்தை எதிர்த்து, எலும்புத் துண்டுகளை வீசுகின்றவரைக் கண்டு வால் ஆட்டுவதை நன்றி என்று யார் சொன்னது.

நாய் வால் ஆட்டுவது நன்றி உணர்வோடு என்று யாரேனும் கருதினால் அது தவறு என்பது நம் சிற்றறிவின் முடிவு.

தலையால் குலை தரும் வாழை, தான் உண்ட நீரை சிரத்தால் தரும் தெங்கு, பாலைப் பொழிந்து தரும் பசு, முட்டை தரும் கோழி இவற்றோடு ஒப்பிடுகையில் வால் ஆட்டலை மட்டும் நன்றி என்று எப்படிக் கூறமுடியும்.

ஆகையால் நாயின் வால் ஆட்டல் நன்றி அல்ல. அது ஓர் அடிமைத்தனம் அல்லது விலை போதலின் அடையாளம் என்று கருதிய மணிவாசகர் நாய்ப்பிறப்பை கடைப் பிறப்பாகக் காட்டுகிறார்.

எனவே பற்றற்றவனாகிய பரம்பொருளை பற்றுதல் ஒன்றே பிறப்பறுக்கும் வழி என்று மணிவாசகர் கருதினார். அவரின் கருத்து உரிய உரிய இடங்களுக்கு உதாரணமாகக் கூடியது.

# புலிகளை ஆதரித்திருந்தால் இன்றும் நானே ஜனாதிபதி

## எதிர்த்ததாலேயே ஆட்சி வீழ்த்தப்பட்டது–மகிந்த

(கொழும்பு)

புலிகளை ஆதரித்திருந்தால் இன்றும் நான் ஜனாதிபதியாகவே இருந்திருப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எனது ஆட்சியில் தமிழ் மக்களை பழிவாங்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு ஒருபோதும் இருக்கவில்லை. அதே போல் இந்த நாட்டை துண்டாட வேண்டும் என்ற எண்ணமும் இருக்கவில்லை. நான் நாட்டில் ஜனாதிபதியாக தலைமை ஏற்ற பின்னரே நாட்டில் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது

அதேபோல் யுத்தத்தின் பின்னர் வடக்கை துரித அபிவிருத்தி செய்து அம்மக்களை நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுத்ததும் எமது அரசாங்கமேயாகும். யுத்தத்தின் பின்னர் நாட்டின் தேசிய பாதுகாப்பை பலப்படுத்தி நாட்டிற்கு எதிரான அச்சுறுத்தலை நாம் தடுத்தோம்.அவ்வாறு நாட்டை பாதுகாக்க பல முயற்சிகளை எடுத்து அவை எதிலும் தோல்வியை சந்திக்காது நாட்டை காப்பாற்றினோம். ஆனால் சர்வதேச அமைப்புகளும், புலம்பெயர் அமைப்புகளும் எம்மை யுத்த குற்றவாளிகள் என்று குற்றம்சுமத்தின.

அதேபோல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வரையில் இந்த பிரச்சினையை கொண்டு சென்று புலிகளின் செயற்பாடுகளை நியாயப்படுத்தினர். இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்ட நாடுகளையும் பிரிக்கும் தந்திரத்தை மேற்கொண்டனர். உண்மையிலேயே நாம புலம்பெயர் அமைப்புகளின் தேவையை நிறைவேற்றி, இலங்கையில் அவர்களின் செயற்பாடுகளை அனுமதித்திருந்தால், வடக்கில் மீண்டும் அவர்களின் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவியிருந்தால் இன்றும் நான் ஜனாதிபதியாகவே இருந்திருப்பேன். ஆனால் இந்த நாட்டில் மீண்டும் தீவிரவாதம் தலைதூக்க அனுமதிக்கக்கூடாது என்ற இறுக்கமான நிலைப்பாட்டில் நாங்கள் செயற்பட்ட காரணத்தினாலேயே எமது ஆட்சி வீழ்த்தப்பட்டது.

இன்று என்மீது இவர்கள் முன்வைக்கும் எந்த குற்றச்சாட்டும் உண்மையானதல்ல. நான் புலிகளை பலப்படுத்த உதவியவனும் அல்ல. நான் நினைத்திருந்தால் அன்று யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வராது அவர்களுடன் வியாபாரம் பேசியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்திருந்தால் இன்றும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் ஆயுதம் ஏந்தியும் இருந்திருப்பார்கள். இதனால் எவருக்குமே நன்மை ஏற்பட்டிருக்காது. இன்று ஆட்சியை நடத்தும் தலைவர்கள் கடந்த காலத்தை மீண்டும் நினைவுபடுத்தும் சூழலை உருவாக்குகின்றனர்.

அது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. தடைசெய்யப்பட்ட அமைப்புகளை மீண்டும் நாட்டில் செயற்பட அனுமதித்துள்ளமை. வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றி வடக்கை மீண்டும் தனியாக இயங்க அனுமதித்துள்ளமை என்பன நாட்டையே பாதிக்கும். அதேபோல் நாங்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற மாயையை உருவாக்கி சிறுபான்மை மக்களை எம்மிடம் இருந்து பிரித்துள்ளனர். இவ்வாறு சர்வதேச அமைப்புகளும் இங்குள்ள தலைமைகளும் நமது ஆட்சியை கைப்பற்ற இவ்வாறு தந்திரங்களை மேற்கொண்டுள்ளனர் என்றார் மகிந்த. (செ–12)

# இராணுவ அதிகாரி ஜெகத் குமாரவே எனது மகனை கடத்திச் சென்றார்

## ஆணைக்குழு முன் தந்தை நேற்று சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

1996ஆம் ஆண்டு ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவ முகாமிற்கு பொறுப்பதிகாரியாக இருந்த ஜெகத் குமார எனும் இராணுவ உயர் அதிகாரியே தனது மகனை கடத்தி சென்றதாக தந்தை ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்துள்ளார். இந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக நேற்றைய தினம் இரு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஐந்தாம் நாள் அமர்வு நேற்று காலை சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சுதுமலை தெற்கினை சேர்ந்த தவராசா சதீஸ்குமார் எனும் பெயருடைய இளைஞர் கடத்தப்பட்ட சம்பவம் குறித்தும், ஆனைக்கோட்டையை சேர்ந்த நடராஜா சாந்தரூபன் ஆகியோர் கடத்தப்பட்டமை தொடர்பிலேயே முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் சதீஸ்குமார் என்பவரை 1996 ஆம் ஆண்டு மார்கழி மதம் இருபதாம் திகதியன்று இரவு பத்து மணியளவில் பதினைந்துக் கும் மேற்பட்ட இராணுவத்தினர் வீட்டினை சுற்றி வளைத்து குறித்த இளைஞனை பிடித்து சென்றுள்ளனர்.

பிடிக்கப்படும் போது விசாரணை என்று சொல்லியே பிடித்ததாக கூறும் பெற்றோர்கள், கூழாவடி முகாமிற்கே குறித்த இளைஞனை அழைத்து சென்றதாக குறிப்பிடுகின்றனர்.

நாங்களும் விடுதலை செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையில் மகனை இராணுவத்தோடு அனுப்பி வைத்தோம். நாங்கள் மறுநாள் காலை கூழாவடி முகாமிற்கு எமது மகனை கூட்டிவருவதற்காக சென்றோம். ஆனால் விசாரணை முடியவில்லை. என கூறி திரும்ப அனுப்பிவிட்டனர். பத்து நாட்களின் பின்னர் சென்று கேட்டபோது மானிப்பாய் முகாமிற்கு மாற்றப்பட்டு விட்டதாக கூறினார்கள்.

மானிப்பாய் இராணுவ முகாமிற்கு சென்று கேட்ட போது கே.கே.எஸ். முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு வட்டதாக கூறப்பட்டது. அங்கு சென்ற போது குளப்பிட்டி முகாமிற்கு கொண்டு சென்று விட்டதாக கூறினார்கள். குளப்பிட்டி சென்ற போது அங்கு எனது மகனை தரவில்லை என கூறி எங்களை திரும்ப அனுப்பிவிட்டனர்.

எனது மகனை பிடித்த கூழாவடி இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியான ஜெகத் குமாரவினை எனக்கு தெரியும், அவரை நேரில் கண்டால் நான் அடையாளம் காட்டுவேன் என ஆணைக்குழுவினரின் கேள்விகளுக்கு குறித்த தந்தை பதிலளித்தார். (செ–4)

### அலங்கார உற்சவம்

(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் கிழக்கு கருணையம்பதிஅருள் மிகு ஸ்ரீமதி வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் கோவில் அலங்கார உற்சவம் நாளை வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன. (இ–5–60)

### பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

#### தற்பெருமை அழிவைத் தரும்



✦ மருத்துவர்கள் நோயாளிகளிடம் "எனக்கு வியாதியே இல்லை" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும்படி அறிவுரை கூறுகின்றனர். நோயாளிகள் அப்படிச் சொல்வதனால் வியாதிகள் அகலுவதற்கான சாதகமான நிலை உண்டாகிறது. அதுபோல, இவ்வுலகில் நீ தாழ்ந்தவன் என்று எண்ணிக் கொண்டால், சீக்கிரத்தில் தாழ்ந்தவனாகவே ஆகிவிடுவாய். அளவிட முடியாத அளவிற்குத் திறமை உன்னிடம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டால், அவ்வாறே திறமைகள் மிகுந்தவனாய் ஆகிவிடுவாய்.

✦ கல்லானது தண்ணீருக்குள் வருடக்கணக்கில் கிடந்தாலும் அதனுள் தண்ணீர் நுழையாது. ஆனால், களிமண் தண்ணீருக்குள் கிடந்தால் கரைந்து விடும். அதுபோல திடமான நம்பிக்கையுள்ள மனமுள்ளவர்கள், சோதனையால் தடுமாற்றம் அடைவதில்லை. நம்பிக்கை இல்லாதவருடைய மனம் சிறு காரணத்திற்கு கூட சலனமடையும்.

✦ குருவின் சக்தியின்மீது திடமான நம்பிக்கை கொண்ட ஒரு சிஷ்யன், குருவின் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மீது நடந்து போனான். இதைக் கண்ட குரு "என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கிற தென்றால், எனக்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும். இது எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே என்று நினைத்தபடியே, அவரும் தண்ணீரின் மீது நடக்க ஆரம்பித்தார். ஆனால், கால் வைத்தவுடன் மூழ்கி விட்டார். நம்பிக்கையால் அபூர்வமான காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால், தற்பெருமை அழிவைத் தரும்.

# 2016 ஐ.பி.எல் போட்டி

## டோனி புனே அணியில் ரெய்னா ராஜ்கோட் அணியில்




ஐ.பி.எல். ஸ்பாட் பிக்சிங் சூதாட்டம் தொடர்பாக சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு லோதா கமிட்டி 2 ஆண்டு தடை விதித்தது.

இந்த இரண்டு அணிகளுக்கு பதிலாக அடுத்த 2 ஆண்டுக்கு புனே, ராஜ்கோட் ஆகிய நகரங்களை மையமாக கொண்டு 2 புதிய அணிகள் தேர்வு செய்யப்பட்டன.

புனே அணியை கொல்கத்தாவை சேர்ந்த தொழில் அதிபர் சஞ்சீவ் கோயங்காவின் நியூரைசிங் நிறுவனமும், ராஜ்கோட் அணியை இன் டெக்ஸ் நிறுவனமும் வாங்கியுள்ளன.

புனே, ராஜ்கோட் அணிகளுக்கான வீரர்கள் தேர்வு மும்பையில் நேற்று நடந்தது. சென்னை, ராஜஸ்தான் ஆகிய 2 அணிகளில் உள்ள மொத்தம் 50 வீரர்கள் இந்த தேர்வில் இடம் பெற்றுள்ளனர். முதல் கட்டமாக இரு அணியிலும் உள்ள 'டாப் 5' வீரர்கள் புனே, ராஜ்கோட் அணிகளுக்கு ஒதுக்கப்படுவார்கள் என்றும், அவர்களுக்கான தொகை முறையே ரூ.12.5 கோடி,.5 கோடி, ரூ. 4 கோடி என்றும் அறிவிக்கபட்டு இருந்தது.புனே, ராஜ்கோட் அணிகளுக்கான வீரர்கள் தேர்வு நண்பகல் 12 மணி யளவில் தொடங்கியது. முதல்வீரரை தேர்வு செய்யும் முன்னுரிமையை புனே அணி பெற்று இருந்தது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் 8 ஆண்டுகளாக கப்டனாக விளையாடிய டோனியை புனே அணி முதல் வீரராக தேர்வு செய்தது. அவருக்கான வரைவு தொகை ரூ. 12.5 கோடியாகும்.

ஐபிஎல் 20ஓவர்போட்டி2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய் யப்பட்டது. அதில் இருந்து கடந்த ஐ.பி.எல். வரை டோனி சென்னை அணிக்காக விளையாடினார். அந்த அணிக்கு தடை விதிக்கப்பட்டதால் டோனி புனே அணியில் விளை யாடுகிறார். மஞ்சள் உடையில் களம் வந்த அவர் அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். போட்டியில் வேறு உடையில் விளையாடுவார்.

ராஜ்கோட் அணி முதலாவது வீரராக ரெய்னாவை தேர்வு செய்தது. அவருக்கான தொகை ரூ.12.5 கோடியாகும்.

டோனியை போலவே ரெய்னாவும் கடந்த 8 ஐ.பி.எல். போட்டியில் சென்னை அணிக்காக விளையாடி வந்தனர். அடுத்த ஐ.பி.எல். போட்டியில் அவர் ராஜ்கோட் அணியில் விளையாடுவார்.

புனே அணி 2 ஆவது வீரராக ரகானேயை தேர்வு செய்தது. அவருக்கான ஊதியம் ரூ.9.5கோடியாகும். ரகானே கடந்த சீசனில் ராஜஸ்தான் அணிக்காக விளையாடி இருந்தார்.

அவர் 2008 முதல் 2010 வரை மும்பை இந்தியன்ஸ் அணிக்காவும், 2011 முதல் 2015 வரை ராஜஸ்தான் அணிக்காவும் ஆடினார். அடுத்த ஐ.பி.எல். போட்டியில் ரகானே புனே அணியில் ஆடுகிறார்.

ராஜ்கோட் அணி 2 ஆவது வீரராக ரவீந்தர ஜடேஜாவை தேர்வு செய்தது. அவருக்கான தொகை ரூ. 9.5 கோடியாகும்.

புனே அணியில் 3ஆவது வீரராக அஸ்வின் தேர்வு செய்யப்பட்டார். அவருக்கான ஊதியம் ரூ. 7.5 கோடியாகும். அவர் இதுவரை சென்னை அணியில் மட்டுமே விளையாடி இருந்தார். இனி புனே அணியில் ஆடுவார்.

இதே போல் ஸ்டீவன் ஸ்மித் (அவுஸ்திரேலியா) டுபெலிசிஸ் (தென ஆபிரிக்கா) ஆகிய வீரர்களும் புனே அணிக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

நியூசிலாந்து கப்டன் மக்குல் லம் 3 ஆவது வீரராக ராஜ்காட் அணிக்கு தேர்வானார். அவருக் கான தொகை ரூ. 7.5 கோடியாகும்.

இதே போல பவுல்க்னெர் (அவுஸ்திரேலியா) பிராவோ (வெஸ்ட் இண்டீஸ்) ஆகியோரும் ராஜ்கோட் அணிக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த 10 வீரர்களை தவிர்த்து மீதியுள்ள 40 வீரர்கள் பெப்ரவரி 6 ஆம் திகதி பெங்களூரில் நடைபெறும் ஏலப்பட்டியலில் இடம் பெறுவார்கள். (க)

## இலங்கை தொடரிலிருந்து போல்ட் ஓய்வு




இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. 3 டெஸ்ட் போட்டித் தொடரில் டுனிடினில் நடைபெற்ற முதல் டெஸ்டில் நியூசிலாந்து 122 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 2ஆவது டெஸ்ட் 18ஆம் திகதி தொடங் குகிறது.

இதை தொடர்ந்து 5 ஒரு நாள் போட்டி மற்றும் இரண்டு 20 ஓவர் ஆட்டம் நடைபெறுகிறது. முதல் 3 ஒரு நாள் போட்டிக்கான நியூசிலாநது அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

வேகப்பந்து வீரர் டிரெனட் போல்ட்டுக்கு ஓய்வு கொடுக்கப்படடுள்ளது. இதே போல டிம் சவுத்தி 3ஆவது ஒரு நாள் போட்டியில் அணியில் இணைந்து கொள்வார். நியூசிலாந்து அணி விபரம்:

மக்குல்லம் (கப்டன்), பிரேஸ்வெல், குப்தில், மேட் ஹென்றி, மெக்லகன், வில்லியம்சன், டெய்லர், ஆடம் மிலின, ஹென்றி நிக்கோலஸ், ரோஞ்சி, சான்டர், சோதி, வார்க்கர். (க)

## ஆண்டின் சிறந்த வீராங்கனையாக செரீனா வில்லியம்ஸ் தெரிவு



அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை தட்டி சென்றுள்ளார்.

இந்த வருடம் அசைக்க முடியாத வெற்றிகளை பெற்ற செரீனா, ஸ்போர்ட்ஸ் இல்லஸ்ட்ரேட்டடு (Sports Illustrated) இந்த வருடத்திற்கான சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை பெற்றுள்ளார்.

32 ஆண்டுகளுக்கு பிறகு வீராங்கனை ஒருவர் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை பெறுவது இதுவே முதன்முறையாகும். கடைசியாக 1983ம் ஆண்டு மேரி டெக்கர் இந்த விருதை பெற்றிருந்தார்.


இந்த வருடத்தில் செரீனா தான் சந்தித்த 56 போட்டிகளில் 53ல் வெற்றி வாகை சூடியுள்ளார்.


இந்த வருடம் நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் அவுஸ்திரேலியா, பிரெஞ்ச் மற்றும் விம் பிள்டன ஆகியவற்றில் கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தை கைப்பற்றினார்.

தற்போது 34 வயதானாலும் தனனுடைய தனித்திறமையால் டென்னிஸ் தரவரிசையில் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வருகிறார். (க)

## லண்டன் கிளாசிக் செஸ் கார்ல்சென் சம்பியன் ஆனந்துக்கு 9வது இடம்


லண்டன் கிளாசிக் செஸ் போட்டி இங்கிலாந்தில் நடந்தது. இதன் 9-வது மற்றும் கடைசி சுற்றில் உலக சம்பியன் கார்ல் சென் (நொர்வே), ரஷ்ய வீரர் அலெக்சாண்டர் கிரிசுக்கை சந்தித் தார். இதில் அதிர்ஷ்டவசமாக கார்ல்சென் வெற்றி கண்டார். 9ஆவது சுற்றுகள் முடிவில் கார்ல் சென், பிரான்ஸ் வீரர் மாக்சிம் வாஷிர் ஆகியோர் தலா 5.5 புள்ளிக ளுடன் சமநிலை வகித்தனர். இதைத்தொடர்ந்து நடந்த 2 ஆட்டங்கள் கொண்ட டைபிரேக் கரில் கார்ல்சென் 1.5-0.5 என்ற புள்ளி கணக்கில் மாக்சிம் வாஷிரை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தன தாக்கினார். இந்த போட்டியில் 3.5 புள்ளிகள் பெற்ற இந்திய கிராண்ட் மாஸ்டர் ஆனந்த் 9ஆவது இடம் பெற்றார். (க)





## தவான் போல் முறுக்கு மீசை வைக்க ஆசைப்பட்டேன் - ராகுல் டிராவிட்





இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் டிரா விட ரசிகர்களின் கேள்விக்கு மனம் திறந்து பதிலளித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தடுப்பு சுவர் என்று வர்ணிக்கப்படும் டிராவிட் எதிரணிக்கு எப்போதும் தலைவலியாய் இருப்பவர்.

அதேசமயம் தோற்றத்திலும், குணத்திலும் மிகவும் எளிமையான போக்கை கடைப்பிடிப்பவர்.

இந்த நிலையில் சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் ரசிகர்கள், நீங்கள்ஏன்தவான், கோஹ்லி, ஜடேஜா, கெய்ல் போன்றவர்கள் போன்று "ஹேர் ஸ்டைல்" வைக்க முய ற்சிக்கவில்லை என்று கேட்டனர்.

இதற்கு பதிலளித்த டிராவிட், "எனக்கு அந்தவாறு முடிவெட்டிக் கொள்வது பிடிக்காதது. முக்கியமாக நீங்கள் காலையில் எழுந்து உங்கள முகத்தை கண்ணாடியில் பார்க்க வேண்டும். எனக்கு தற்போது சாதாரண மாக இருக்கும் "ஹேர்ஸ்டைல்" தான் பிடித்திருக்கிறது. ஒருவேளை அந்தவாறு தலைமுடியை வித்தியாச மாக வெட்டிக் கொண்டால், காலை நேரத்தில் கண்ணாடியில் நான் என்னை பார்த்தே பயந்து போய் விடுவேன்" என்றார்.

மேலும், அவர் கூறுங்கயில், இருந்தாலும், ஷிகர் தவானின் முறுக்கு மீசை எனக்கு ரொம்ப பிடிக்கும். அவர் அந்த மீசையை முறுக்கிக் கொண்டே இருப்பார் அதனால் பிடிக்கும்.

எனக்கும் அது போன்று அழகான மீசை இருந்திருந்தால் அவர் போல் வைத்திருப்பேன்" என்று ஜாலியாக கூறினார். (க)

## வடக்கின் பட்ஜெட்...

ஊடாக ரூபாய் 23,269.880 மில்லியன் மாகாணத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மீண்டுவரும் செலவினத்திற்காக ரூபாய 18,574.230 மில்லியன், மூலதனச செலவினத்திற்காக ரூபாய் 4,695.650 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாண சபையால் கோரப்பட்ட நிதியில் 40 வீதமான நிதியே கிடைக்கப் பெற்றிருப்பதாகவும், மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களுக்கும் தலா எவ்வளவு நிதி எனவும், எந்தெந்த வேலைகளுக்கு எவ்வளவு நிதி எனவும் மத்திய அரசாங்கமே தீர்மானித்திருப்பது முறையற்றது என சபையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அந்த வகையில் ஆளுநர் செயலகத்துக்கு ரூபா 58.849 மில்லியனும், பொது சேவைகள் ஆணைக்குழுவுக்கு ரூபா 29.734 மில்லியனும், பேரவைச் செயலகம் ரூபா 301 மில்லியனும், முதலமைச்சர் அமைச்சுக்குக்கு ரூபாய் 2357.191 மில்லியனும், பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு ரூபாய் 792.574 மில்லியனும், விவசாய அமைச்சுக்கு ரூபா 1443. 423 மில்லியனும் கல்வி அமைச்சுக்கு ரூபா 10779.131 மில்லியனும், சுகாதார அமைச்சுக்கு ரூபா 6616.753 மில்லியனும, மீன்பிடி அமைச்சுக்கு ரூபா 891.225 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இவ் வரவு செலவுத்திட்டமானது வடமாகாணத்தில் வசிக்கும் சுமார் பன்னிரண்டு இலட்சத்து முப்பத்தையாயிரத்து அறுபது (1,235,060) பேரின் தேவைகளை உள்ளடக்கி வட மாகாணத்திற்கான முதலமைச்சு மற்றும் ஏனைய நான்கு அமைச்சுக்களின் ஊடாகவும் ஏனைய மாகாண அலகுகள், திணைக் களங்கள் ஊடாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வரவு செலவு திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய முதலமைச்சர், கேட்கப்பட்ட நிதியில் 40 வீதமான நிதியே எமக்கு கிடைத்துள்ளது. வருடாவருடம் மாகாணங்களுக்குரிய நிதியமானது நிதி ஆணைக்குழுவினால் மாகாணசபை செலவினங்களுக்காக தேசிய வரவு செலவுத் திட்டத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டு மாகாணங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது,

இவ்வருடம் இவை ஒரு அமைச்சிடம் கையளிக்கப்பட்டு அதனூடாக எமக்குத் தரப்படவேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டிருப்பினும் ஒன்பது மாகாணசபைகளினதும் முதலமைச்சர்களின் எதிர்ப்பின் நிமித்தம் ஜனாதிபதி அவர்களின் ஆணையைத் தொடர்ந்து அந்த வழிமுறை கைவிடப்பட்டது. மாகாணங்களை மத்திக்கு அடிமைப்படுத்த எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகவே இதனைக் காண்கின்றேன்.

பிராந்தியங்களுக்கான அபிவிருத்தியை சம அளவில் அடைந்துகொள்ளும் நோக்குடன் பின்வரும் பிரமாணங்களின் அடிப்படையில் மாகாணங்களுக்கு நிதிஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

அதாவது சனத்தொகை, தலாவீத வருமானம், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வினைக் குறைத்தல், சகல மாகாணங்களின் தலாவருமானத்த்தை சம அளவில் பேணுதல் ஆகியன இப்பிரமாண அடிப்படை எமக்கு நன்மை பயக்கவில்லை என முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-9)

## குடும்பஸ்தரை...

தநாயனார் வீதியைச் சேர்ந்த சண்முகராசா தயாசீலன் (வயது 41) என்ற குடும்பஸ்தரே காணாமல் போயுள்ளார்.

கடந்த 12ஆம் திகதி வீட்டில் இருந்து திருகோணமலைக்கு அவரது மாமனார் வீட்டிற்கு செல்வதாக கூறிச் சென்றுள்ளார்.

ஆனால் அவர் திருகோணமலைக்கும் செல்லவில்லை. எங்கு சென்றார் என்றும் தெரியவில்லை என்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மனைவி முறைப்பாடு பதிவு செய்துள்ளார். அதேவேளை, வவுனியாவில் உள்ள அவரது உறவினர்களிடம் விசாரித்த போது அங்கும் செல்லவில்லை என்றும் முறைப்பாடு பதிவுசெய்துள்ளதாகவும், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-4)

## வடக்கின் எல்லை...

சனத்தொகை அடிப்படையில்நிதி ஒதுக்கீடு செயதது பாரபட்சமானது. இறுதியாக யுத்தம் நடைபெற்ற இடங்கள் அதிகளவாக பாதிக்கப்பட்டது. அங்குள்ள சகலதும் அழிக்கப்பட்டது.

இந்தநிலையில் தமிழ் மக்களை மாகாணத்தின் எல்லைகளை நோக்கிமீள்குடியேற்ற வேண்டும். அத்துடன் அப் பகுதிகளை அபிவிருத்தி செய்யவேண்டும். இல்லையேல் தமிழ மக்களை நோக்கி வேகமாக நகர்ந்து வரும் எல்லைகளால் வட மாகாணத்தின் எல்லைகள சுருக்கப்படும் அபாயம் தொலைவில் இல்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்குப் பின்னான கடந்த 6 வருடங்களில் 12ஆயிரம் சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இதுமிகவும் வேதனைக்குரியவிடயம். இந்த விடயத்தை நாங்கள் சாதாரண விடயமாக கருத்தில் கொள்ளமுடியாது. குறிப்பாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருணாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் மக்களுடைய விவசாய நிலங்களையும், குடியிருப்பு நிலங்களையும் பறித்து சிங்கள குடியேற்றங்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்நிலையில் நாம் அபிவிருத்திகளை நகரங்களுக்குள் அல்லது வளர்ச்சியடைந்த பகுதிகளுக்குள் மேற்கொள்ளப்படுவதை தவிர்த்து எமது மாகாணத்தின் எல்லைகளில் மக்கள் நிம்மதியாக வாழக்கூடியதாக குளங்களை அமைத்து, வீதிகளை அமைத்து வசதிகளை பெற்றுக் கொடுத்து எல்லைகளை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை எமக்கு உண்டு.

குறிப்பாக தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் போன்றபகுதிகளில் மக்கள் மீள்குடியேறுவதற்கு தயராக் இருக்கின்றார்கள். ஆனால் அங்குமக்கள் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றார்கள். அதாவது ஒன்று மக்கள் அச்சுறுத்தப்படுகின்றார்கள். இன்னொன்று மக்களுக்கு அடிப்படைவசதிகள் இல்லை. ஆனால் எல்லைகளில் வாழ்வதற்கு மக்கள் தயாராகவே இருக்கின்றார்கள். நாங்கள் எங்கள் எல்லைகளை பாதுகாக்க முடியாதவர்களாக கேவலமான வாழ்க்கை வாழ்கிறோம்.

எனவே இதை சாதாரண விடயமாக பார்க்க வேண்டாம். இது பாரதூரமான விடயமாக வளரும். கடைசியில் தமிழ் மக்களை ஒரு வட்டத்திற்குள் கொண்வரும் அளவுக்கு மக்களை நோக்கி எல்லைகள் வேகமாக சுருங்கிக் கொண்டிருக்கின்றது.

எனவே 2016-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் அதிகளவு அபிவிருத்திப் பணிகளை மாகாணத்தின் எல்லைகளில் மேற்கொள்ளுங்கள் அத்துடன் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீண்டும் குடியேற்றவேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (செ-9)

## கோத்தாவுக்...

ர்பாக பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி அளித்த சாட்சியத்தில் மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர பொய்யான தகவல்களை வழங்கியிருந்தார்.

அவரது பொய்ச் சாட்சியம், கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மீதிருந்த அளவுகடந்த மதிப்புக் காரணமாகவே அவரைக் காப்பாற்றும் நோக்கில் பொய்ச்சாட்சியம் அளித்ததாக ஒப்புக் கொண்டிருந்தார் மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர.

இந்த நிலையில், ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பொய்ச்சாட்சியம் அளித்த மேஜர் ஜென்ரல் காமினி ஜெயசுந்தரவுக்கு எதிராக கறுவாத்தோட்டம் பொலிஸார் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

குற்றவியல் சட்டத்தின் 190ஆவது பிரிவின் கீழ் தண்டனை விதிக்கக் கூடிய குற்றத்தை மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர இழைத்துள்ளதாக பொலிஸாரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் கிகன பிலபிட்டிய, வரும் ஜனவரி 4ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும் என்று மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தரவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (செ-12)

## அபிவிருத்திக்கு...

மிதம் கொள்வதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இராஜாங்க செயலகத்தின ஆலோசகரான தோமஸ் சனொன் தெரிவித்தார்.

திருகோணமலை, அமரந்தி பே ஹோட்டலில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

விவசாய அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி, ஜனநாயகம், பொருளாதார வளர்ச்சி, நல்லாட்சி, மனிதநேய நடவடிக்கை போன்றவை தொடர்பான நிகழ்ச்சிகள் நாடெங்கிலும் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த 60 வருடங்களில் இலங்கை எட்டியுள்ள வெற்றிகளை கண்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். தொடர்ந்தும் அனைத்து இலங்கையர்களுக்கும் சேவை வழங்கக்கூடிய வகையில் சிறந்த சிவில் சமூகம் மற்றும் வினைத்திறன் மிக்க அரசாங்கத்துக்கு நாம் உதவுவோம் என்றும் குறிப்பிட்ட அவர் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக 23 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அதன்மூலம் பல திட்டங்களை வகுத்து அதன் ஊடாக மூவின மக்களையும் ஒன்றிணைத்து நாட்டில் சமத்துவத்தினை கட்டி எழுப்ப முடியும் எனவும் இங்கு தெரிவித்தார்

அதனைத்தொடர்ந்து குறித்த பகுதியில் அமைந்துள்ள 2ஆம் உலக மகாயுத்தத்தில் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்துள்ள திருகோணமலை போர்க் கல்லறைக்கும் விஜயம் செய்தார். அங்கு அனைத்து கல்லறைகளையும் பார்வையிட்ட அவர் மலர் வளையம் வைத்து அஞ்சலியுடனான மரியாதை செய் தார்.

இந்நிகழ்வில் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ, மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (செ-12)

## சட்டமூலத்தை...

றம் சுமத்தியுள்ளது.

இதற்கமைய பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலாக அதற்கு சமானமான சட்டமூலம் சபையில் சமர்பிப்பதற்கான அறிவிப்பு நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேற்று செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சி நிலவிய காலத்தில் மத்திய மாகாண சபை உறுப்பினர அஸாத் சாலி மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸநாயகம் ஆகியோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மிகவும் திட்டமிடப்பட்டு கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கருத்துச் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும், அதற்கு ஏற்ப வகையில் கொண்டுவரப்படவிருக்கும் புதிய சட்டமூலத்தையும் முற்றுமுழுதாக எதிர்ப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனவே ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குறித்த சட்டமூலத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு இலங்கை தொடர்பில் அண்மையில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய அந்தச் சட்டத்திற்குப் பதிலாக அதற்கு ஒத்த சட்டத்தை கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் வைத்து தெரிவித்திருந்தார்.

இதேவேளை இந்த புதிய சட்டத்தை கொண்டுவருவதன் மூலம் இனங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்தும் பேச்சுக்களை நடத்துவோரை கைது செய்து சிறை வைக்கவும் முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## குற்றச்சாட்டுகளுக்கு...

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஐந்தாவது அமர்வு சங்கானை பிரதேச செயலகத்தில் நேற்று ஒன்பது மணியளவில் ஆரம்பமாகி மாலை ஆறுமணி வரை நடைபெற்றது. விசாரணையின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மக்ஸ்வெல் பரணகம, குற்றங்கள் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்ற பொறிமுறையை தமது இரண்டாவது அறி க்கையில் குறிப்பிட்டுள்ளதாக கூறினார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பொறிமுறை உள்ளக பொறிமுறையா? அல்லது சர்வதேச பொறிமுறையா? என அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஜனாதிபதி ஆணைக்குழு வடக்கு கிழக்கில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

இவ் ஆணைக்குழுவின் விசாரணைகளை அடுத்து, ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலான விசாரணைக்குழு ஒன்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த குழு மக்களின் வீடுகளுக்கு சென்று 150 பேர் வரையில் இதுவரை விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் முடிவில் எமது இரண்டாவது அறிக்கையில் குற்றங்கள் எவ்வாறு கையாளப்படல் வேண்டும் என்பது தொடர்பிலான பொறிமுறையினை குறிப்பிட்டு உள்ளோம். இந்த பொறிமுறை உள்ளூார் பொறிமுறையாக இருப்பதோடு, சர்வதேச தொழில்நுட்ப உதவிகள் இதற்காக பெறப்படும்.

தனியே சர்வதேச பொறிமுறையாக அமையாதா? எனக் கேட்டபோது, இல்லை வெளிநாட்டு தரத்திலான உள்ளூர் பொறிமுறையே முன்னெடுக்கப்படும், எமது விசாரணைக்குழுவின் விசாரணையின் முடிவில் எமது இரண்டாவது அறிக்கை வெளியிடப்படும். விசாரணைக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கையாக நாங்கள் விசாரணை செய்தவர்களின் வீடுகளுக்கு சென்று நேரடி விசாரணைகளை மேற்கொள்வதாகும். இதனை தற்போது அவர்கள் ஆரம்பித்துள்ளனர் என தெரிவித்தார்.

இதன்போது மக்களால் பெயர்கள் குறிப்பிடப்பட்டு நேரடியாகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட இராணுவ ஜெனரல்கள் மற்றும் கொமாண்டர்களுக்கு எதிராக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

இராணுவ அதிகாரிகள் மீது உங்கள் ஆணைக்குழு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டது. இதற்கு முழுமையான பதிலை வழங்காத ஆணைக்குழு தலைவர், .

இது தொடர்பில் நீதிபதி தலைமையிலான எமது விசேட விசாரணைக்குழுக்கள் தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொளளும் என தெரிவித்தார். கேட்கப்பட்ட கேள்விக்கு இறுதி வரை முழுமையான பதிலை அவர் வழங்கியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# 'மகன் உயிருடன் இருப்பதாக சோதிடத்தில் சொல்லியுள்ளனர்'

## நெஞ்சை உருக்கும் தாய்மாரின் ஏக்கம்

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் பெரும்பாலான தாய்மார்கள் தமது மகன் இருப்பதாக சோதிடத்தில் சொல்வதாக ஆணைக்குழுவிடம் நம்பிக்கை தெரிவித்து வருவதனை அவதானிக்க முடிந்தது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஐந்தாம் நாள் அமர்வு நேற்றைய தினம் சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் கேள்விகளில், உங்கள் மகன் உயிரோடு இருப்பதாக நம்புகின்றீர்களா? என்ற கேள்வியும் ஒன்றாக உள்ளது. ஆணைக்குழுவின் இக் கேள்விக்கு, பெரும்பாலான தாய்மார்கள் தமது பிள்ளைகள் உயிருடன் உள்ளதாக சோதிடத்தில் கூறுவதாக பதில் கூறுகின்றனர்.

தாய்மார்களின் இப்பதிலால் ஆணைக்குழுவினரே சோகத்தில் ஆழ்ந்திருந்தனர். தனது பிள்ளை சாகவில்லை, அவன் எங்கோ ஓர் இடத்தில் உள்ள இராணுவ முகாமில் வாழ்வதாக என்மனம் சொல்கின்றது. நான் முழுமையாக நம்புகின்றேன் எனது மகன் உயிரோடு உள்ளான் என்று கூறும் அத் தாய்மார்களின் பதில் நெஞ்சை தொடுகின் றது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் மற்றொரு கேள்வியான உங்களுக்கு ஏதும் வாழ்வாதார உதவித்திட்டம் வேண்டுமா? என்பதற்கு, பார்ப்பதற்கு வறுமையானவர்களாக இருந்தாலும் வாழ்வாதார உதவிகள் எதுவும் எமக்கு வேண்டாம். என அடியோடு அத் தாய்மார்கள் மறுத்ததுடன்,

பிள்ளைகளை தொலைத்த நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்காக நஷ்டஈட்டினை பெற்று அதில் எவ்வாறு வாழமுடியும? அவ்வாறு வாழ்வதற்கு எங்களுக்கு மனம வருமா? என ஆதங்கத்துடன் கேட்டனர். உதவித்திட்டம் பெற்றுக்கொண்டால் விசாரணை நிறுத்தப்பட மாட்டாது என ஆணைக்குழுவினர் கூறிய போதிலும் எங்கள் பிள்ளைகள்தான் எமக்கு வேண்டும் உதவி எதுவுமே வேண்டாம் என உறுதியாக கூறிவருவதனை அவதானிக்க முடிந்தது.

தாய்மார்களின் இந்த உறுதியையும் நம்பிக்கையையும் பார்த்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் மொழிபெயர்ப்பாளர்களில் சிலர் கண்கள் கலங்கிய சம்பவங்களும் நேற்றைய தினம் நடைபெற்றன. (செ-4)

# வித்தியா கொலை...

வர்த்தன் ராஜ்குமார்(வயது-26) என்பவர் முன்னிலைப்படுத்தப்பட்டார். அதனை அடுத்து பத்து சந்தேகநபர்களையும் எதிர்வரும் 28-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் ஊர்காவற்றுறை நீதவானிடம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி குமார் குணரட்ணம மற்றும் குற்ற புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விண்ணப்பத்திற்கு இணங்க வழக்கின 5 ஆவது சந்தேக நபரான தில்லைநாதன் சந்திரகாசன், 6 ஆவது சந்தேக நபரான சிவதேவன் துசாந்தன், புதிதாக கைது செய்யப்பட்ட 10 ஆவது சந்தேக நபர் பியவர்த்தன் ராஜ்குமார் ஆகியோரை கொழும்பில் உள்ள மகசின சிறைச்சாலைக்கு மாற்றி தடுத்து வைத்து விசாரிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-4)

**G.C.E (A/L) PHYSICS, MATHS**

2016, 2017, 2015 Repeat மாணவர்களுக்கு வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். **தொடர்புகளுக்கு :**

(2797) **0773966535**

**NAC - கல்வி நிலையம் மானிப்பாய்**

கணக்கீட்டு - M.C.Q - 2

ஆரம்பம் :- 17.12.2015 (Thurs - 3p.m)

A/L - 2016

பிரிவு - II - காசுப்பாய்ச்சல்கூற்று

(2781)

**திரு.வின்சன் (B.B.A SPL)**

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-2971)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)**
**கலைமாணி கல்வியாண்டு 2013/2014 புதிய பாடத்திட்டம்**

- A/L 3 பாடங்களும் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்.
- 500/= ரூபாயினை மட்டும் செலுத்தி பதிவினை மேற்கொள்ள முடியும். (இது எமது நிறுவனத்தில் மட்டுமே)
- விரிவுரைகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாமுடன் எமது நிறுவனத்திலேயே நடைபெறும்.
- பல்கலைக்கழகத்தினால் பதிவு உறுதிப்படுத்தப்படும்வரை விரிவுரைக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.
- பதிவுகள் எதிர்வரும் சனி, ஞாயிறு (26/27.12.2015) காலை 8.00 - 2.00 வரை மேற்கொள்ளப்படும்.
- விரிவுரைகள் ஆரம்பம் 26.12.2015 காலை 9.00
- உங்கள் பதிவினை எம் ஊடாக உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.

(2796)

தொடர்பு : இணைப்பாளர் திரு.K.தர்மராஜா 0777288731
இயக்குநர் திரு.N.பிரதீபன் 0776624387

NJT படிப்புகள் இல.55, பலாலி றோட், யாழ்ப்பாணம். (இலுப்பையடிச் சந்தி)

# மத்தியின் செல்...

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வட மாகாணசபையின் நிர்வாகம் எமது கையில் கிடைக்கப்பெற்று 2 வருடங்கள் கடந்து விட்டது. கடந்த வருட நிதி ஒதுக்கீட்டின் போது எனது உரையில் வடமாகாணத்தின் அப்போதைய நிலைபற்றியும் பல வருடங்கள கடந்தும் போரினால் ஏற்பட்ட தாக்கங்களிலிருந்து எமது மக்கள் இன்னமும் முற்று முழுதாக விடுபடவில்லை என்ற கருத்தையுந் தெரிவித்திருந்தேன். தற்போதும் அந்த நிலைமைகளில் பாரியமாற்றங்கள் எதுவும் ஏற்பட்டு விடவில்லை.

போரினால் பல விதங்களில் பாதிக்கப்பட்ட எமதுமக்கள் வீடுகள், சொத்துக்கள்,குடும்பத் தலைவர்கள்,பிள்ளைகள்,பெற்றோர்களை இழந்து உடல் அங்கங்களைப் பறிகொடுத்து நிர்க்கதியாய் நிற்கின்றார்கள்.

மேலும் காணாமல் போனோரின் குடும்பத்தினர்,சந்தேகத்தின் பேரில் சிறையில் வாடுபவர்களின் குடும்பங்கள் என பல தரப்பட்ட மக்கள் தமது குறைகளை தினமும் எம்மிடம் தெரிவித்தவாறு உள்ளனர்.

அதேநேரம் வெளிநாட்டுத் தூதுவர்கள், தூதுவராலய அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் எனப் பல மட்டங்களில் உள்ளவர்கள் எம்மை அணுகி வட மாகாணசபையினதும் இங்கு வாழ்கின்ற மக்களினதும் நிலைமைகள் பற்றித் தினமும் ஆராய்ந்தவண்ணம் உள்ளனர். ஆனாலும் இதுவரை குறிப்பிடக் கூடியளவு முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றே குறிப்பிடவேண்டும்.

இப்பகுதியில் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது மேற்கொள்ளப்பட இருக்கின்ற அபிவிருத்தித் திட்டங்கள் பல எமது மக்களுக்கு நன்மை பயப்பதை விட தென பகுதி மக்களுக்கு நன்மை வழங்குந் திட்டங்களாகவே காணப்படுகின்றன.

அத்துடன் புதிய அரசாங்கத்தினது செயற்பாடுகள் மேம்போக்காகநல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்துவதாகக் காணப்படுகின்ற போதிலும் மறைமுகமாக மாகாணசபைகள் மீதான கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் பேணுகின்ற வகையில்தான் காணப்படுகின்றன.

அத்துடன் மாகாணசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைக்கும் வகையிலும் மத்திய அரசாங்கத்தினது நேரடிக் கட்டுப்பாடுகளை அதிகரிக்கக் கூடிய வகையிலுமான மறைமுகத் திட்டங்களை அமுல்படுத்த முற்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

அண்மையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து "கிராம இராஜ்ஜியம்" என்கின்ற புதிய திட்டத்திற்கான வரைவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வருகின்ற கிராம மற்றும் மாவட்ட மட்டத்திலான குழுக்களே சகல அபிவிருத்திச் செயற்திட்டங்களையும் தீர்மானித்து செயற்படுத்துகின்ற அதிகாரத்தினை கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றன. இது மாகாணசபைகளைப் புறந்தள்ளி மத்திய அரசு தனது நேரடிச் செல்வாக்கை பிரயோகிக்க முற்படுகின்ற ஓர் புதிய வடிவிலான திட்டமாகக் கருத வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் எம் மீது திணிக்கப்பட்டிருந்த ஆளுநரின் கட்டுப்பாடுகள் பிரதம செயலாளரின் ஒத்துழையாமை போன்ற தடைகளில் இருந்து நாம் இப்போது விடுபட்டுள்ள போதிலும் எமது செயற்பாடுகளை செயற்திறனுடன் முழுமையாக நிறைவேற்றுவதற்கு முடியாமல் உள்ளது.

பலவழிகளில் மத்தியின் செல்வாக்கை மேம்படுத்தவும் மாகாணத்தைப் புறக்கணிக்கவுமே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதே உண்மையாக இருக்கின்றன.

மேலும் அரசஅலுவலர்களின் உளப்பாங்கில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு நாம் இன்னமும் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. மாற்றங்களை நடைமுறைப்படுத்தவும் நாங்கள் இவ்வருடம் பின்நிற்கப் போவதில்லை என்பதை இங்கு கூறி வைக்கின்றேன்.

மத்திய அரசினது மனநிலைமைகளிலும மாற்றங்கள் ஏற்பட்டு எமதுமக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு வட மாகாணஅரசிற்கு அனுசரணையாக எமது மக்களுக்கான அடிப்படை வசதிகளையும் வாழ்வாதார தேவைகளுக்குமான உதவிகளையும் புரிய அவர்கள் முன்வருவார்கள் எனவும் நம்புகின்றேன். எம்மிடையே உள்ள அனைத்து கருத்து வேறுபாடுகளையும் மறந்து எமது மக்களின் விடிவிற்காக 2016-ல் அனைவரும் கைகோர்த்துப் பாடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# 224 பேர் பிரசன்...

க்காக 303 பேர் சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

51 பேர் புதிதாக பதிவு செய்திருந்தனர். இதில் இரண்டு பேரினது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. மொத்தமாக 175 பேரின்து சாட்சியங்கள் நேற்றைய தினம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இன்றைய தினம் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள, ஆணைக்குழுவின் விசாரணையில் அழைக்கப்பட்டோர் மற்றும் புதிதாக பதிவு செய்ய விரும்புவோரும் சாட்சியமளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற சாட்சியமளிப்பில் 95 வீதமானவர்கள் தமது பிள்ளைகள் கணவன்மார், சகோதரர்கள் உயிருடனேயே உள்ளார்கள் என்ற நம்பிக்கையிலேயே சாட்சியம் அளித்திருந்ததனை காணமுடிந்ததோடு, அவர்களை இராணுவ சீருடையில் கண்டதாகவும் கூறியிருந்தனர். (செ-4)

# என் மகன் இப்...

21-ம் திகதி அன்று சுதுமலையில் உள்ள எமது வீட்டிற்கு வந்த இராணுவம் எமது மகனை கேட்டது.

அப்போது எமது மகன் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். அதனால் எனது கணவர் மகனை கூப்பிடுவதற்கு தோட்டத்திற்கு சென்றிருந்தார்.

எனது கணவரை பின்தொடர்ந்த இராணுவம் தோட்டத்தில் வைத்தே எமது மகனை பிடித்தது. அங்கு பிடித்த எமது மகனை வீட்டிற்கு கொண்டு வந்து எமது வீட்டினை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினார்கள். வீட்டில் ஒன்றும் கிடைக்காததனை அடுத்து தம்முடன் எமது மகனை இழுத்து சென்றது, அப்போது தாகமாக இருக்கிறது. குடிப்பதற்கு தண்ணீர் தாருங்கள் என எனது மகன் என்னிடம் கேட்டான்.

ஆனால் இராணுவம் மகனுக்கு தண்ணீர கொடுக்க கூட விடவில்லை. எனது மகனை தாகத்தோடுதான் பிடித்து சென்றனர். இப்போதும் எனது மகன் தாகத்துடன்தான் இருக்கின்றானோ என்று தெரியவில்லை என அந்த தாய் வேதனையுடன் கூறுகின்றார்.

எனது மகனை அப்போது கூழாவடி இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாக இருந்த ஜெகத் குமார என்ற இராணுவ கொமாண்டரே பிடித்து சென்றதாகவும், அவரிடம் விசாரணை செய்தால் எனது மகன் எங்கு உள்ளான் என்று தெரியும் எனவும் அந்த தாய் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னால் சாட்சியமளித்தார்.

இது தொடர்பில் தாம் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிப்பதாக உறுதியளித்த ஜனாதிபதி ஆணைக்குழுவினர், அந்த இராணுவ அதிகாரியை விசாரிப்பதற்கு ஏற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் கூறியுள்ளனர். நம்பிக்கையுடன் இருக்குமாறும் ஆறுதலும் கூறினார்கள். (செ-4)

# ரயில் மோதியதில்...

த்துக்குள்ளானதில் இல.355, உதயநகர் கிழக்கைச் சேர்ந்த இராமசாமி பழனியாண்டி (வயது 76) என்ற வயோதிப குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பற்ற புகையிரத கடவையை முதியவர் கடக்க முயற்சித்த போதே இவ்விபத்து இடம பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின்சடலம் புகையிரதம்மூலமே அருகில் உள்ள கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு கொண்டு செல்லபபட்டு அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு வாகனம் இன்றி நீண்ட நேரமாக புகையிரத நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த சடலத்தை பொறுப்பேற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி ஏ9 பாதையிலிருந்து கிளிநொச்சி உதயநகர் மேற்கிற்குச் செல்லும் வழியில் பாதுகாப்பு கடவை பொருத்தப்படாத பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது சம்பவ இடத்திலேயே குறித்த குடும்பஸ்தர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இதனால் கொழும்பிலிருந்து யாழ் செல்லும் ரயில் போக்குவரத்து சிறிது நேரம் தாமதமடைந்தது.

கடந்த சில வாரங்களுக்கு முன் பொறியியலாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் ரயில் மோதி மரணமடைந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம பெற்றுள்ளது. ஏற்கெனவே வடக்கின் ரயில் மார்க்கத்திலும் ரயில் மோதி பலர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-15)

# கலட்டி இரா...

நிலையத்திற்கு சென்ற போது இராணுவம் என் சகோதரனை பிடித்துக்கொண்டு போய் விட்டது. எமது வீடு வட்டுக்கோட்டையில் உளளது. இங்கிருந்தே எனது தம்பியும் கல்வி நிலையத்திற்கு சென்று வந்தார்.

அதன்பிறகு எனது தம்பியை காணவில்லை, எனினும் நாம் எமது தம்பியை தேடி பார்த்தோம், எங்கும் தம்பியை காணவில்லை. எனது தம்பியின் பெயர் கந்தையா லதீஸ்வரன் வயது 20 ஆகும். எனது தம்பி எந்த பிரச்சினையும் இல்லாதவர். இராணுவம் எதற்காக எனது தம்பியை கடத்தினார்கள் என்று தெரியவில்லை.

நான் அப்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தேன். கலட்டி வழியாகவே பல்கலைக்கழகம் சென்று வருவதும வழக்கம். அதேபோல் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாம் திகதியும் அப்பாதையால் பல்கலைக்கழகம் சென்று கொண்டிருந்த போது, கலட்டியில் உள்ள இராணுவ முகாமிற்குள் நின்று கொண்டு என் சகோதரர் அழுது கொண்டிருந்தார்.

என்னைக் கண்டவுடன் இராணுவ முகாமிற்குள் நின்று அங்கிருந்த இராணுவ வேலிக்குள்ளாக என்னை எட்டிப்பார்த்தார். அப்போது தம்பியின் முகத்தில் காயம் இருந்தது. நான் எனது தம்பியோடு கதைக்க முற்பட்டும் அது முடியாது விட்டது. அதன் பிறகு எனது தம்பியை இது வரை நாம் காணவில்லை.

பொலிஸ் நிலையம், மனிதவுரிமை ஆணைக்குழு உட்பட அனைத்து இடங்களிலும் எமது தம்பி கடத்தப்பட்டமை குறித்து முறைப்பாடு செய்திருந்தோம். ஆனால் எமது தம்பியை காணவில்லை. இராணுவம் கைது செய்த போது பலர் கண்டனர். கைது செய்த தம்பியை நான் இராணுவ முகாமில் கண்டேன். அவ்வாறாயின் எனது தம்பி இப்போது எங்கே என்றவாறு அவர் சாட்சியமளித்தார். (செ-4)

**ஜீவக வாத தைலம்**
**Jeewaka Vata Thailaya**

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567

(C-2973)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.